# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம்

---

**[1981, மார்ச்சு மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]**

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, *மார்ச்சு மாதம்* 27 *ஆந்* தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் *வர்த்தமானப் பத்திரிகையின்* II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 5.95 தபாற் செலவு : ரூபா 1.50

## 1981 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம்

[1981 மார்ச்சு மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 9/79
1295

### மோட்டார் வாகனச் சட்டத்தினைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது 1981 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

203 ஆம் அத்தியாயத்தைத் திருத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் மோட்டார் வாகனச் சட்டம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 204 ஆம், 240 ஆம் பிரிவுகள் தவிர்ந்த வேறு எந்த இடங்களிலெல்லாம் "பதிவாளர்" என்ற சொல் அச்சட்டவாக்கத்தில் தோன்றுகின்றதோ, அந்தச் சொல்லுக்குப் பதிலாக "ஆணையாளர்" என்ற சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(2அ) விற்பனைசெய்யும் நோக்கங்களுக்காக இலங்கையிலுள்ள மோட்டார் வாகன உற்பத்தியாளரொருவர் மோட்டார் வாகனமொன்றை உடைமையில் வைத்திருத்தல், அவ்வாகனம் விற்கப்படாது இருப்பதோடு, பெருவழி எதனிலும் பயன்படுத்தப்படாமலும் இருக்கும்வரையில், (1) ஆம் உட்பிரிவின் மீறுதலாகக் கருதப்படுதலாகாது.";

(2) அந்தப் பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(4) எந்த ஆளினால் மோட்டார் வாகனமொன்று இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டதோ, உற்பத்தியாளர் ஒருவர் அல்லது வணிகர் ஒருவர் அல்லாதவரான அந்த ஆள், மோட்டார் வாகனத்தை உடைமையில் வைத்திருத்தலானது, அவ்வாகனத்தைப் பதிவுசெய்வதற்கென விண்ணப்பம் செய்திருந்து, அந்த விண்ணப்பம் முடிவுறாது இருக்கும்போது, அந்த மோட்டார் வாகனத்தின் பயன்பாட்டுக்கு 18அ என்னும் பிரிவின்கீழ் ஆணையாளரால் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தால், வழங்கப்பட்டிருந்தால் மாத்திரமே, (1) ஆம் உட்பிரிவின் மீறுதலாகக் கருதப்படுதலாகாது."; அத்துடன்

(3) அந்தப் பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவினைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(9) பன்னிரண்டாம் பிரிவின் இரண்டாம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் ஏற்பாடுகளின்கீழ் மோட்டார் வாகனம் ஒன்றினை உடைமையில் வைத்திருத்தலானது, அவ்வாகனம் வாடகை ஒப்பந்தம் அல்லது கேள்வு ஒப்பந்தம் ஒன்றின்கீழ் இருக்கும்வரையில், (1) ஆம் உட்பிரிவின் மீறுதலாகக் கருதப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) ஒரு மோட்டார் வாகனத்தின் வெறும் பாரம் இரண்டரை மெற்றிக் தொன் நிறையினை விஞ்சுவதாயின், அந்த மோட்டார் வாகனம், மோட்டார் கார் ஒன்றாகப் பதிவுசெய்யப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம், 5 ஆம் பிரிவுகளை மாற்றீடுசெய்தல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம், 5 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

"குறித்த சில இடங்களில் தவிர, மோட்டார் கோச்சுகளையும் அவற்றின் சொந்தக்காரர்களையும் பதிவு செய்வதற்குள்ள தடை.

4. (1) மோட்டார் கோச்சு எதுவும், அப்போதைக்கு அம்மோட்டார் கோச்சினை உடைமையில் வைத்திருப்பதற்கு உரித்துடைய ஆள்—

(அ) 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையாக அல்லது பிராந்தியப் போக்குவரத்துச் சபை ஒன்றாக ; அல்லது

(ஆ) சிற்சில சமயங்களில் வசுவண்டிச் சேவைகளை நடாத்துவதற்காக IV ஆம் பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட படிநிலைப் பயண வண்டி அனுமதிச் சீட்டுகளுக்கான தகவுச் சான்றிதழை வைத்திருப்பவராக ; அல்லது

(இ) அம்மோட்டார்க் கோச்சுக்கான சொந்தக் கோச்சு அனுமதிச்சீட்டினை வைத்திருப்பவராக,

இருந்தாலன்றி, பதிவுசெய்யப்படுதலாகாது.

(2) ஆள் எவரும், 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையாக அல்லது பிராந்தியப் போக்குவரத்துச் சபை ஒன்றாக, அல்லது—

(அ) சிற்சில சமயங்களில் வசு வண்டிச் சேவைகளை நடாத்துவதற்காக IV ஆம் பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட படிநிலைப்பயண வண்டி அனுமதிச் சீட்டுகளுக்கான தகவுச் சான்றிதழை ; அல்லது

(ஆ) அம்மோட்டார் கோச்சுக்கான சொந்தக் கோச்சு அனுமதிச்சீட்டினை,

வைத்திருப்பவராக இருந்தாலன்றி, அந்த ஆள் அம் மோட்டார் கோச்சின் சொந்தக்காரராகப் பதிவுசெய் யப்படுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படி யிருப்பினும், ஆணையாளர், (2) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்துகொள்ளப்படுவதற்கு தகவுடையவரான ஆள் ஒருவருக்கு, ஒரு மோட்டார் கோச்சினை கூலிக்கு விடுவதற்கு முன்னம் கொண்டுள்ள ஆளை, அம் மோட்டார் கோச்சின் சொந்தக்காரராகப் பதிவு செய்துகொள்ளலாம்.

பதிவுசெய்து கொள்ளப்பட்ட தன்மேல் மோட்டார் வாகனங்களின் விவரணங்கள்.

5. (1) இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்யப்பட இருப்பதான மோட்டார் கோச்சு ஒன்று—

(அ) கட்டணத்திற்கென அல்லது வெகுமதிக்கென அல்லாது, ஆட்களைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட முன்னப்பட்டதாகப் பதிவு செய்யப்படுவதற்கான விண்ணப்பகாரரால் கூறப்பட்டால், சொந்தக்கோச்சு ஒன்றாகப் பதிவுசெய்துகொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) கட்டணத்திற்கென அல்லது வெகுமதிக்கென ஆட்களைக் கொண்டுசெல்வதற்குப் பயன் படுத்தப்பட முன்னப்பட்டதாகப் பதிவுசெய் யப்படுவதற்கான விண்ணப்பகாரரால் கூறப் பட்டால், வசு வண்டி ஒன்றாகப் பதிவுசெய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின் கீழ் பதிவு செய்யப்பட இருப்பதும், அத்துடன்—

(அ) இச்சட்டத்தின் கருத்துக்குட்பட, விடயத்திற் கேற்ப, லொறி ஒன்றாக, மோட்டார்க் கார் ஒன்றாக, மோட்டார் முச்சக்கர வண்டி ஒன் றாக, மோட்டார் சைக்கிள் ஒன்றாக, மோட் டார் நோயாளர் வண்டி ஒன்றாக, மோட்டார் பிரேத வண்டி ஒன்றாக, கை உழவியந்திரம் ஒன்றாக, பிணியாளர் வண்டி ஒன்றாக அல்லது கம வாகனம் ஒன்றாக இருப்பதுமான மோட் டார் வாகனம் ஒன்று அத்தகையதாகப் பதிவு செய்துகொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட ஏதே னும் வகுதியில் அடங்காததாக உள்ளதுமான மோட்டார் வாகனமொன்று விதித்துரைக்கப் படக்கூடியதான அத்தகைய விவரணத்தை யுடைய மோட்டார் வாகனம் ஒன்றாகப் பதிவு செய்துகொள்ளப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

'(1) ஒரு மோட்டார் வாகனத்தைப் பதிவுசெய்வதன்மேல், ஆணையாளரானவர்—

(அ) ஓர் இலக்கத்தையோ அல்லது ஓர் எழுத்தையும் அல்லது ஒன்றுக்கும் அதிகமான எழுத்துக்களையும் ஓர் இலக்கத்தை அல்லது ஒன்றுக்கும் அதிகமான இலக்கங்களையுங்கொண்ட சேர்க்கையொன்றையோ அம்மோட்டார் வாகனத்திற்குக் குறித்தொதுக்குதல் வேண்டும், அல்லது இச்சட்டத்தில் "வேறுபிரித்துக்காட்டும் இலக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படுவதும் இலக்கங்களின் சிறப்புத்தொடர் ஒன்றின்கீழானதுமான இலக்கம் ஒன்றினைக் குறித்தொதுக்குதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் எந்த ஆளினால் செய்யப்பட்டதோ அந்த ஆளை அவ்வாகனத்தின் சொந்தக்காரராகப் பதிவுசெய்தல் வேண்டும் ; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடு எதுவும் இணங்கியொழுகப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவை என அவர் கருதும் எவையேனும் நிபந்தனைகளை இடாப்பில் பதிதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவுச்சான்றிதழ் ஒன்றினை அந்த ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.' ; அத்துடன்

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(7) மோட்டார் வாகனம் ஒன்று தொடர்பில் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றன் பொறுப்புக்களை உரிய முறையில் தீர்த்தபின்னர் பதினைன்குநாட் காலப்பகுதிக்குள்ளாக, அந்த வாகனத்தை அவ்வாறு வாடகைக்குவிட்ட ஆள், அந்த வாகனம் தொடர்பாக இடாப்பிலுள்ள பதிவீட்டிலிருந்து (5) ஆம் உட்பிரிவின்கீழ் பதியப்பட்டதான மோட்டார் வாகனத்தின் பூரணசொந்தக்காரரினது பெயரை நீக்கிவிடுவதற்கென எழுத்திலான விண்ணப்பம் ஒன்றினை ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பமானது அவ்வாறு நீக்கிவிடுவதற்கான விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.".

7. முதன்மைச்சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"(2) மோட்டார் வாகனமொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர்—

(அ) அம்மோட்டார் வாகனம் தொடர்பாக இடாப்பிலுள்ள பதிவீடு எதனதும் செம்மையைப் பாதிப்பதான ஏதேனும் சூழ்நிலை அல்லது சம்பவம்பற்றி எழுத்தில் ஆணையாளருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும் என்பதுடன், அதேநேரத்தில் மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழை ஆணையாளருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும் அல்லது அவரிடம் ஒப்படைத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) வாகனமானது எந்த வகுப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த வகுப்பினை மாற்றுவதான அத்தகைய மாற்றத்தை மோட்டார் வாகனத்தில் அவர் செய்ய முன்னுமிடத்து, ஆணையாளரின் எழுத்திலான முன் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

(1) அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(2) மோட்டார் கோச்சு அல்லது லொறி ஒன்று தவிர்ந்த வேறு ஒரு மோட்டார் வாகனத்தை, பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் தாமாகவே இன்னொருவருக்கு கைமாற்றம் செய்வதன் மூலம் உடைமைமாற்றம் செய்யும்போது—

(அ) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், அத்தகைய உடைமை மாற்றம் செய்யப்பட்டபின்னர் ஏழு நாட்களுக்குள்ளாக, அந்த மோட்டார் வாகனத்தின் அரசிறை உரிமத்துடன் சேர்த்து, விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான கூற்றொன்றினை பதிவஞ்சல் மூலமாகவோ நேரில் ஒப்படைப்பதன்மூலமாகவோ ஆணையாளருக்கு நேரடியாக அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், அம்மோட்டார் வாகனம் தொடர்பான பதிவுச்சான்றிதழை அல்லது அதன் இணைப்பிரதி ஒன்றினைப் புதிய சொந்தக்காரரிடம் ஒப்படைத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அம்மோட்டார் வாகனமானது—

(i) புதிய சொந்தக்காரரானவர் அதன் சொந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டாலன்றி ; அத்துடன்

(ii) அம்மோட்டார் வாகனத்திற்கான அரசிறை உரிமமானது 39 ஆம் பிரிவின்கீழ் வறிதானதாக வந்திராவிட்டால், அத்தகைய உரிமத்தில் அவசியமான திருத்தங்கள் செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய உரிமம் 14 ஆம் பிரிவின்கீழ் ஆணை

யாளரால் புதிய சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டாலன்றி, அல்லது அம்மோட்டார் வாகனத்திற்கான அரசிறை உரிமம் 39 ஆம் பிரிவின் கீழ் வறிதானதாக வந்திருந்தால், மோட்டார் வாகனத்திற்கான புதிய அரசிறை உரிமம் ஒன்று புதிய சொந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தாலன்றி,

அத்தகைய உடைமைமாற்றத்தின் பின்னர் முப்பது நாட்கள் கடந்ததன் மேல் எந்நேரத்திலேனும் பயன்படுத்தப்படுதலாகாது :

ஆயின், மோட்டார் வாகனம் ஒன்றன் உடைமைமாற்றமானது வாடகை ஒப்பந்தம் ஒன்றன் அல்லது கேள்வு ஒப்பந்தம் ஒன்றன் விளைவானதாகவுள்ளவிடத்து, (வாடகை அல்லது கேள்வுக் காலப்பகுதியானது மூன்று மாதங்களுக்கு அதிகமாகாதவிடத்து) அல்லது பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் வாகனச் சாரதியைத் தொடர்ந்து வேலைக்கமர்த்தி சம்பளம் கொடுக்குமிடத்து, இவ்வுட்பிரிவானது ஏற்புடையதாகாது.

(3) ஒரு மோட்டார் கோச்சினை அல்லது லொறியைப் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் தாமாகவே இன்னொருவருக்குக் கைமாற்றுவதன் மூலம் உடைமைமாற்றம் செய்யும்போது—

(அ) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், அத்தகைய உடைமைமாற்றம் செய்யப்பட்ட பின்னர் ஏழு நாட்களுக்குள்ளாக, அந்த மோட்டார் கோச்சின் அல்லது லொறியின் அரசிறை உரிமத்துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான கூற்றொன்றினைப் பதிவஞ்சல் மூலமாகவோ நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ ஆணையாளருக்கு நேரடியாக அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், அம்மோட்டார் கோச்சு அல்லது லொறி தொடர்பான பதிவுச்சான்றிதழை அல்லது அதன் இணைப்பிரதியொன்றினைப் புதிய சொந்தக்காரரிடம் ஒப்படைத்தலும் வேண்டும் ;

(ஆ) அம்மோட்டார் கோச்சு அல்லது லொறி—

(i) புதிய சொந்தக்காரரானவர் அதன் சொந்தக்காரராகப் பதிவுசெய்யப்பட்டாலன்றி, அத்துடன்

(ii) அம்மோட்டார் கோச்சுக்கான அல்லது லொறிக்கான அரசிறை உரிமமானது 39 ஆம் பிரிவின்கீழ் வறிதானதாக வந்திராவிட்டால், அத்தகைய உரிமத்தில் அவசியமான திருத்தங்கள் செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய உரிமம் 14 ஆம் பிரிவின் கீழ் ஆணையாளரால் புதிய சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டால் அன்றி, அல்லது அம் மோட்டார் கோச்சுக்கான அல்லது லொறிக்கான அரசிறை உரிமம் 39 ஆம் பிரிவின் கீழ் வறிதானதாக வந்திருந்தால், மோட்டார் கோச்சுக்கான அல்லது லொறிக்கான புதிய அரசிறை உரிமம் ஒன்று புதிய சொந்தக்காரரிடம் வழங்கப்பட்டாலன்றி,

அத்தகைய உடைமைமாற்றத்தின் பின்னர் முப்பது நாட்கள் கடந்ததன்மேல் எந்நேரத்திலேனும் பயன்படுத்தப்படுதலாகாது." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின் வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

“ (அ) வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், உடைமைமாற்றியதன்பின்னர் ஏழு நாட்களுக் குள்ளாக, எந்த ஆளின் உடைமைக்குள் வாகனம் சென்றுள்ளதோ அந்த ஆளிடம் அவ்வாகனம் தொடர்பான அரசிறை உரிமத்தையும் பதிவுச் சான்றிதழையும் ஒப்படைத்தல் வேண்டும் என்ப துடன், உடைமைமாற்றம்பற்றி ஆணையாளருக்கு எழுத்தில் அறிவித்தலும் வேண்டும் ; ” ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின் வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

“ (உ) இரண்டாம் உட்பிரிவு ஏற்புடைத்தாகும் மோட் டார் வாகனமொன்றாக இருக்குமிடத்து அல்லது மோட்டார் கோச்சாக அல்லது லொறியாக இருக் குமிடத்து, அதன் பதிவுசெய்யப்பட்ட சொந்தக் காரரால் அவர் தாமாகவே செய்த கைமாற்றத் தின் விளைவானதாக அவ்வாகனத்தின் உடைமை மாற்றம் இருக்குமாயின், (2) (ஆ) என்னும் உட் பிரிவின் அல்லது (3) (ஆ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அதே முறையில் அந்த மோட்டார் வாகனத்திற்கு அவ் வேற்பாடு கள் ஏற்புடையனவாதல் வேண்டும்.”.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத் தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அதன் (ஆ), (இ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின் வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

“ (ஆ) அந்த மோட்டார் வாகனத்துக்கான அரசிறை உரிமம் அல்லது அதன் இணைப்பிரதி, விண்ணப்ப காரரால் அல்லது அந்த மோட்டார் வாகனத்தின் முந்திய சொந்தக்காரரால் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டாலன்றி, அல்லது, அத்த கைய உரிமம் எதுவும் இல்லாதிருப்பின், அத்த கைய உரிமத்திற்கான கட்டணத்தைச் செலுத்திய மைக்கான பற்றுச்சீட்டொன்று அல்லது அந்த வாகனம் தொடர்பாகப் பயன்படுத்தாமை பற்றிய செல்லுபடியான அறிவித்தல் ஒன்று 37 ஆம் பிரி வின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளதென உரிமம் அளிக் கும் அதிகாரியிடமிருந்து பெற்ற சான்றிதழ் ஒன்று ஆணையாளருக்கு அனுப்பப்பட்டாலன்றி ;

(இ) அதன் சொந்தக்காரராக அவரைப் பதிவு செய் தமை 4(2) ஆம் பிரிவினால் அல்லது (9) (1) (இ)

என்னும் பிரிவின்கீழ் ஆணையாளரினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளிலெதனுலேனும் தடை செய்யப்பட்டதாக இருப்பின் ;"; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(ஈ) பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து செல்லுமதியாக உள்ள எல்லா உரிமத் தீர்வை நிலுவைகளும், அத்துடன், அந்த வாகனம் தொடர்பாக வேறு ஏதேனும் சட்டத்தின் கீழான ஏதேனும் பொறுப்பும் செலுத்தப்பட்டாலன்றி ;";

(2) அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(2) மோட்டார் வாகனம் ஒன்றின் புதிய சொந்தக்காரரைப் பதிவுசெய்ததன்மேல், ஆணையாளர்—

(அ) ஒன்றில் பதிவுச்சான்றிதழில் அவசியமான திருத்தங்களைச் செய்து அதனைப் புதிய சொந்தக்காரரிடம் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது அவருக்கு ஒரு புதிய பதிவுச் சான்றிதழை வழங்குதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அந்த மோட்டார் வாகனத்திற்கான அரசிறை உரிமம் 39 ஆம் பிரிவின்கீழ் வறிதானதாக வந்திராவிட்டால், அத்தகைய உரிமத்தில் அவசியமான திருத்தங்களைச் செய்து அதனைப் புதிய சொந்தக்காரரிடம் ஒப்படைத்தல் வேண்டும் அத்துடன், அந்த மோட்டார் வாகனத்திற்கான அரசிறை உரிமம் 39 ஆம் பிரிவின்கீழ் வறிதானதாக வந்திருந்தால், வறிதான அரசிறை உரிமத்தினை உரிமம் அளிக்கும் அதிகாரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அப்போதுள்ள சட்டமெதிலும் அம்மோட்டார் வண்டி தொடர்பாக உள்ள ஏற்பாடுகளுக்கியைய காப்புறுதிச் சான்றிதழொன்று அல்லது பிணைப்பொறுப்புச் சான்றிதழொன்று சோதனைக்கென ஆணையாளருக்கு அல்லது உரிமம் அளிக்கும் அதிகாரிக்குக் காண்பிக்கப்பட்டாலன்றி, ஆணையாளர் திருத்தப்பட்ட அரசிறை உரிமத்தினைப் புதிய சொந்தக்காரரிடம் ஒப்படைக்க மறுக்கலாம்.

(3) இப்பிரிவின்கீழ் மோட்டார் வாகனமொன்றின் புதிய சொந்தக்காரர் பதிவு செய்யப்பட்டதன்மேல், 39 ஆம் பிரிவின் கீழ் அரசிறை உரிமம் வறிதானதாகவந்துவிட்டால் அது தொடர்பில் புதிய அரசிறை உரிமமொன்று வழங்கப்பட்டாலன்றி, அம்மோட்டார் வாகனம் பயன்படுத்தப்படுதலாகாது,"; அத்துடன்

(3) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(6) மோட்டார் வாகனம் ஒன்று தொடர்பில் வாடகைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்றன் பொறுப்புக்களை உரிய முறையில் தீர்த்தபின்னர் பதினான்குநாட் காலப்பகுதிக்குள்

ளாக, அந்த வாகனத்தை அவ்வாறு வாடகைக்கு விட்ட ஆள் அந்த வாகனம் தொடர்பாக இடாப்பிலுள்ள பதிவிட்டிலிருந்து (4) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அதன் பூரண சொந்தக்காரரினது பெயரை நீக்கிவிடுவதற்கென எழுத்திலான விண்ணப்பம் ஒன்றினை ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பமானது அவ்வாறு நீக்கிவிடுவதற்கான விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

'(3) அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அரசு ஒன்றன் அரசாங்கத்திற்குச் சொந்தமானதாகவும், அதன் வேறுபிரித்துக் காட்டும் இலக்கம் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சிறப்புத் தொடரில் அமைந்து இருப்பதாகவுமுள்ள மோட்டார் வாகனம் ஒன்று அந்த அரசாங்கத்திற்குச் சொந்தமாகவிராதொழிகின்றவிடத்து, அரச தூதுவர் ஒருவர் அந்த மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரராக வந்தாலன்றி அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு அரசு எதனதும் அரசாங்கம் அந்த மோட்டார் வாகனத்தின் சொந்தக்காரராக வந்தாலன்றி, ஆணையாளர் வேறு பிரித்துக் காட்டும் அந்த இலக்கத்தை நீக்கிவிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சிறப்புத் தொடரினைச் சாராத வேறு பிரித்துக்காட்டும் இலக்கமொன்றை அந்த மோட்டார் வாகனத்திற்குக் குறித்தொதுக்குதலும் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரராகவுள்ள அரச தூதுவரின் அரசு அல்லாத அரசொன்றின் அரச தூதுவரொருவர் அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசு சொந்தக்காரராக வருமிடத்து, ஆணையாளர், அவ்வேறுபிரித்துக்காட்டும் இலக்கத்தினை நீக்கி அவர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறுபிரித்துக்காட்டும் இலக்கத்தினை அம்மோட்டார் வாகனத்திற்குக் குறித்தொதுக்குதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் " அரச தூதுவர் " என்பது, வேறு ஏதேனும் நாட்டு அரசாங்கத்தின் இலங்கையிலுள்ள தூதாண்மைப் பிரதிநிதி என்று அல்லது அத்தகைய தூதாண்மைப் பிரதிநிதியின் தூதாண்மைப் பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவரான எவரேனும் ஆள் என்று பொருளாகும்.'.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், ஆணையாளரின் முன் அங்கீகாரத்துடனன்றி, ஆள் எவரும் மோட்டார் கோச்சு அல்லது லொறி ஒன்றன் தற்காலிகச் சொந்தக்காரராகப் பதிவுசெய்துகொள்ளப்படுதலாகாது ; அத்துடன், அந்த மோட்டார் கோச்சு, பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் தலத்திலில்லாதபோது, அந்த மோட்டார் கோச்சைப்

பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் IV ஆம் பாகத்தின் கீழ் வழங்கப்பட்ட ஓர் அனுமதிச்சீட்டின் மூலம் எந்தத் தொழிலுக்குப் பயன்படுத்துவதற்கென அதிகாரம் அளிக்கப்பட்டாரோ அந்தத் தொழிலின் நோக்கங்களுக்கு மாத்திரமே அது பயன்படுத்தப்படும் என்பது பற்றி ஆணையாளர், தமது தற்றுணிபில் திருப்திப்படாத எவ்விடயத்திலும் அத்தகைய அங்கீகாரத்தை வழங்க மறுக்கலாம்.

நான்காம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், மோட்டார் கோச்சு ஒன்றன் தற்காலிகச் சொந்தக்காரராக இப்பிரிவின்கீழ் எவரேனும் ஆளைப் பதிவுசெய்யும் விடயம் ஒன்றிற்கு ஏற்புடையவாதலாகா." ; அத்துடன்

(2) அதன் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

'(6அ) மோட்டார் வாகனம் ஒன்றன் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் (அவர் இதன் பின்னர் இவ்வுட்பிரிவில் "தலத்திலாச் சொந்தக்காரர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) இலங்கையிலில்லாதவிடத்தும், ஆள் ஒருவர் அந்த மோட்டார் வாகனத்தின் தற்காலிகச் சொந்தக்காரராக இப்பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்குமிடத்தும், அத்தகைய தற்காலிகச் சொந்தக்காரர், தலத்திலாச் சொந்தக்காரரின் அல்லது தலத்திலாச் சொந்தக்காரரின் முறையாக நியமனஞ்செய்யப்பட்ட அற்றோணித் தத்துவக்காரரின் எழுத்திலான சம்மதத்துடனன்றி, அந்த மோட்டார் வாகனத்தின் உடைமைமாற்றத்தினை விளைவிக்கும் தன்விச்சையான கைமாற்றத்தைச் செய்தலாகாது; அத்துடன், அத்தகைய எழுத்திலான சம்மதத்துடனன்றிச் செய்யப்பட்ட அத்தகைய கைமாற்றம் எதுவும் வெற்றும் வறிதுமானதாதல் வேண்டும்.'.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 18அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 18அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"முதன் முறையாகப் பதிவு செய்யப்படும் வரையில் மோட்டார் வாகனமொன்றைப் பயன்படுத்தல்.

18அ. இலங்கைக்குள் இறக்குமதிசெய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்று பதிவுசெய்யப்படும் வரையில், இறக்குமதிசெய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களை விஞ்சாத காலத்துக்கு அதனைப் பயன்படுத்துவதற்கு அதன் சொந்தக்காரருக்கு ஆணையாளர் அதிகாரமளிக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவு என மீளஇலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) மீளவிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலமும் :—

" (2) பொதுமக்கள் நலன்கருதி அத்தகைய எவையேனும் தேவைப்பாடுகளிலிருந்து எவையேனும் வகுப்பினவான அல்லது விவரணத்தினவான மோட்டார் வாகனங்களுக்கு விலக்களிக்கும் அனுமதிச்சீட்டுக்களைக் கட்டணம் இன்றி அல்லது விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதன் மேல் தாம் வழங்குதல் அவசியமானதென ஆணையாளர் கருதுமிடத்து, அனுமதிச்சீட்டுக்களை ஆணையாளர் அவ்வாறு வழங்குவதற்கு ஏற்பாடு செய்கின்ற ஒழுங்கு விதிகளும் ஆக்கப்படலாம். பொதுமக்களின் ஏமக்காப்பு அல்லது வசதி தொடர்பில் அல்லது ஏதேனும் பெருவழிக்கு அல்லது ஏதேனும் பெருவழி மீதுள்ள பாலத்துக்கு ஏற்படும் ஊறினை அல்லது மிதமிஞ்சிய தேய்வினைத் தடுத்தல் தொடர்பில் அத்தகைய அனுமதிச்சீட்டில் உட்புகுத்தப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அத்தகைய விலக்களிப்பானது அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிச்சீட்டு சம்பந்தமான நிபந்தனைகளுள் எதுவும் இணங்கியொழுகப்படவில்லை என்ற ஏதுவின்மீது, அந்த அனுமதிச்சீட்டை ஆணையாளர் இல்லாதாக்கலாம் அல்லது இடைநிறுத்தலாம்.".

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

" அடையாளம் காட்டும் தகடுகள்.

21. ஒவ்வொரு மோட்டார் வாகனத்திலும் அடையாளம் காட்டும் இரண்டு தகடுகள் பொருத்தப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும் ; ஆணையாளரால் அம்மோட்டார் வாகனத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட வேறுபிரித்துக்காட்டும் இலக்கத்தினை ஒவ்வொரு தகடும் கொண்டிருத்தல் வேண்டும் :

ஆயின், அத்தகைய தகடுகளுள் ஒன்றுக்குப் பதிலாக அல்லது இரண்டிற்கும் பதிலாக, அடையாளம் காட்டும் தகடுகள் தொடர்பான இப்பாகத்தின் தேவைப்பாடுகளுக்கு எல்லாவகையிலும் இயையவிருக்கும் வடிவம் அல்லது வடிவங்கள் ஏதேனும் மோட்டார் வாகனத்தில் வண்ணந்தீட்டப்படலாம் அல்லது வேறுவகையாகச் சித்தரித்துக் காட்டப்படலாம் ; அத்துடன் இச்சட்டத்தில் அடையாளங்காட்டும் தகடுபற்றிய அல்லது அத்தகட்டைப் பொருந்துதல் பற்றிய குறிப்பீடு எதுவும் விடயத்திற்கு ஏற்ப, அத்தகைய வடிவம் பற்றிய அல்லது வடிவம் வண்ணந்தீட்டப்படுவதுபற்றிய' அல்லது வடிவத்தில் சித்தரித்துக்காட்டப்படுவது பற்றிய குறிப்பீட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(3அ) விற்பனை செய்யும் நோக்கங்களுக்கென இலங்கையில் மோட்டார் வாகன உற்பத்தியாளர் ஒருவர் ஒரு மோட்டார் வாகனத்தை வைத்திருத்தல், அவ்வாகனம் விற்பனை செய்யப்படாதிருப்பதோடு ஏதேனும் பெருவழியில் பயன்படுத்தப்படாமலுமிருக்கும் வரையில், (1) ஆம் உட்பிரிவின் மீறுதலாகக் கருதப்படுதலாகாது." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (8) ஆம், (9) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(8) பழுதுபார்க்கும் நோக்கத்திற்காக அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடு எதனுடனும் இணங்கியொழுகும் நோக்கத்துக்காக அல்லது வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக, குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதியில் குறித்துரைக்கப்பட்ட ஓர் இடத்திலிருந்து ஏதேனும் மோட்டார் வாகனத்தை அகற்றுவதற்கு அதிகாரமளித்து அனுமதிச்சீட்டு ஒன்றினை ஆணையாளர் வழங்கலாம் என்பதுடன், அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டொன்றுக்கு இணங்க அவ்வாறு அகற்றப்படுவதற்காக அந்த மோட்டார் வாகனம் பயன்படுத்தப்படுதல் (1) ஆம் உட்பிரிவின் மீறுதலாகக் கருதப்படுதலாகாது.

(9) மோட்டார் வாகனம் ஒன்றுக்கான அரசிறை உரிமம் 39 ஆம் பிரிவின்கீழ் வறிதானதாக வரும்போது, அந்த மோட்டார் வாகனத்தின் சொந்தக்காரரால் அந்த மோட்டார் வாகனம் உடைமையில் வைத்திருக்கப்படுதல், அந்த மோட்டார் வாகனச் சொந்தக்காரர் அந்த மோட்டார் வாகனத்துக்கெனப் புதியதோர் அரசிறை உரிமத்திற்கு விண்ணப்பஞ் செய்திருந்து அந்த விண்ணப்பமானது, இறுதியாகத் தீர்மானிக்கப்படாதிருந்தால் அல்லது அந்த மோட்டார் வாகனத்தின் சொந்தக்காரர் 37 ஆம் பிரிவின்கீழ் பயன்படுத்தாமைக் காலப்பகுதி பற்றி அறிவித்தல் கொடுத்திருந்தால், (1) ஆம் உட்பிரிவின் மீறுதலாகக் கருதப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) மோட்டார் வாகனம் ஒன்றுக்கு இப்பாகத்தின்கீழ் வழங்கப்படவேண்டிய அரசிறை உரிமமொன்று, பின்வரும் விவரணங்களுள் ஒன்றான உரிமமாக அல்லது அவற்றுள் ஒன்றோ அல்லது பலவோ சேர்ந்த உரிமமொன்றாக இருத்தல் வேண்டும்; அதாவது மோட்டார் கார் உரிமம், சொந்தக் கோச்சு உரிமம், வசுவண்டி உரிமம், மோட்டார் முச்சக்கர வண்டி உரிமம், லொறி உரிமம், மோட்டார் முச்சக்கர வான்

உரிமம், மோட்டார் சைக்கிள் உரிமம், மோட்டார் பிரேதவண்டி உரிமம், மோட்டார் நோயாளர் வண்டி உரிமம், பிணியாளர் வண்டி உரிமம், கை உழவியந்திர உரிமம் அல்லது கம வாகன உரிமம்; அத்துடன் அந்த வாகனம் மோட்டார் வாகனத்தின் எந்த வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்ததோ அந்த வகுப்பை அல்லது விவரணத்தைக் கருத்திற் கொண்ட அந்த உரிமம் வழங்கப்படுதல் வேண்டும்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்திற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஆயின், எவ்வாறுயினும், மோட்டார் கோச்சு, மோட்டார் முச்சக்கர வான் அல்லது லொறி ஒன்று தவிர்ந்த ஏதேனும் மோட்டார் வாகனத்துக்காக முற்போந்த ஆண்டு தொடர்பில் உரிமமளிக்கும் அதிகாரியினால் எந்த ஆளுக்கு அரசிறை உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஆளுக்கு ஏதேனும் ஆண்டு தொடர்பில் அரசிறை உரிமமொன்று வழங்கப்படவுள்ள விடயத்தில், உரிமமளிக்கும் அதிகாரி தக்கதெனத் தாம் கருதின், பதிவுச் சான்றிதழைக் காண்பிக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தாது விடலாம்.".

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) வசுவண்டி உரிமம் எதுவும், அவ்வசு வண்டியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர், 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச்சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையாக அல்லது ஏதேனும் பிராந்தியப் போக்குவரத்துச் சபையாக அல்லது சிற்சில சமயங்களில் வசுவண்டிச் சேவைகளை நடாத்துவதற்காக படிநிலைப் பயண வண்டி அனுமதிச்சீட்டுக்களுக்கான தகவுச் சான்றிதழ் ஒன்றினை வைத்திருப்பவராக இருந்தால் தவிர, இப்பாகத்தின்கீழ் வழங்கப்படுதலாகாது.";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன் மூலமும் :—

"இயக்க அனுமதிச்
சீட்டுக்கள் வைத்திருப்
பவர்களுக்கு மாத்
திரமே வசுவண்டிகள்,
சொந்தக் கோச்சுகள்
என்பவற்றிற்கான
உரிமங்கள்
வழங்கப்படுதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"மோட்டார் கோச்சுக்கள் முதலியவற்றிற்கான அரசிறை உரிமங்கள், பரிசோதனையும் சான்றுப்படுத்தலுமின்றி வழங்கப்படலாகாது.

29. மோட்டார் கோச்சு, லொறி, மோட்டார் மூச்சக்கர வாகன், மோட்டார் பிரேத வண்டி, அல்லது மோட்டார் நோயாளர் வண்டி ஒன்றுக்கான அரசிறை உரிமம் எதுவும், அது தொடர்பாக 196 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டதும் வலுவிலிருப்பதுமான தகுதிச் சான்றிதழொன்று காண்பிக்கப்பட்டாலன்றி, உரிமமளிக்கும் அதிகாரி எவராலும் வழங்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

" (1) (வணிகர் உரிமம் அல்லது வருகைதருவோர் தற்காலிக உரிமம் தவிர்ந்த) மோட்டார் வாகனம் ஒன்றிற்கான அரசிறை உரிமத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும்—

(அ) எந்தக் காலப்பகுதிக்கு உரிமம் தேவைப்படுமோ அந்தக் காலப்பகுதியின்போது சாதாரணமாக மோட்டார் வாகனம் எந்த இடத்தில் வைத்திருக்கப்படுமோ அந்த இடத்திற்கான உரிமமளிக்கும் அதிகாரிக்குச் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஆ) விடயத்திற்குத் தோதாகக்கூடியவாறுகப் பொருளளவில் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய படிவங்களுள் ஒன்றில் இருத்தல் வேண்டும் என்பதுடன், அந்த மோட்டார் வாகனத்திற்கு ஏற்புடையதாகக்கூடியவாறுக அந்தப் படிவத்தில், குறித்துரைக்கப்பட்ட அத்தகைய கருமங்கள் தொடர்பில் அந்த மோட்டார் வாகனம் தொடர்பான எல்லா விவரங்களையும் எடுத்துக்காட்டுதலும் வேண்டும் ;

(இ) அந்த மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும் ;

(ஈ) 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் அல்லது ஏதேனும் பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பெயரில் பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் விடயத்தில் தவிர, 31 ஆம் பிரிவின் கீழான உரிமக் கட்டணத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் ;

(உ) உரிமம் எந்த ஆண்டுக்குத் தேவைப்படுமோ அந்த ஆண்டுக்கு முற்போந்த ஆண்டின் திசம்பர் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதன் முன்னர் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஊ) முன்னைய ஆண்டின் உரிமத்துடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறுயினும்—

(i) பயன்படுத்தாமைக் காலப்பகுதி பற்றிய அறிவித்தல் 37 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ளதான ஏதேனும் மோட்டார் வாகனத்தின் விடயத்தில், விண்ணப்பமானது அந்தக் காலப்பகுதி முடிவடைவதன் முன்னர் செய்யப்படுதல் வேண்டும்;

(ii) பயன்படுத்தாமைக் காலப்பகுதி பற்றிய அறிவித்தல் 37 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ளதும், அந்த அறிவித்தலானது, 37 (5) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் காரணமாக ஏதேனும் தேதியன்று செயற்படாதொழிவதுமான மோட்டார் வாகனம் ஒன்றன் விடயத்தில், விண்ணப்பமானது, அந்தத் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டும்;

(iii) இலங்கையில் முதன்முறையாகப் பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றன் விடயத்தில், விண்ணப்பமானது அந்த வாகனம் பதிவுசெய்துகொள்ளப்பட்ட தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டும்;

(iv) மோட்டார் வாகனத்தின் உடைமை மாற்றத்தின் மேல் மோட்டார் வாகனத்திற்கான அரசிறை உரிமம் வறிதாகியதால் அம்மோட்டார் வாகனத்துக்குப் புதிய அரசிறை உரிமம் பெற விண்ணப்பம் செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தின் விடயத்தில், விண்ணப்பமானது, அந்த வாகனம் உடைமை மாற்றப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டும்;

(v) முப்பத்தொன்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு மோட்டார் வாகனத்திற்கான அரசிறை உரிமம் வறிதாகியதால் அம்மோட்டார் வாகனத்துக்காக புதிய அரசிறை உரிமம் பெற விண்ணப்பம் செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தின் விடயத்தில், விண்ணப்பமானது, அந்த அரசிறை உரிமம் வறிதாகவந்த தேதிக்குப்பின்னர் மூன்று நாட்களுக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(vi) ஒரு மோட்டார் வாகனத்திற்கான அரசிறை உரிமத்தினால் அதிகாரமளிக்கப்படாத ஒரு நோக்கத்திற்கு அந்த மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்துவதற்கெனப் புதிய அரசிறை உரிமம் பெற விண்ணப்பம் செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனத்தின் விடயத்தில், அவ்விண்ணப்பமானது, அந்த மோட்டார் வாகனத்தை அந்நோக்கத்துக்குப் பயன்படுத்த முன்னப்பட்ட தேதிக்கு முன்னர் முப்பது நாட்களுக்குள்ளாகச் செய்யப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) முப்பத்தொன்பதாம் பிரிவின் காரணமாக அவசியமானதாகவுள்ள ஒரு புதிய அரசிறை உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம் ஒன்று ஏதேனும் மோட்டார் வாகனம் தொடர்பில் செய்யப்படுமிடத்து, புதிய ஓர் உரிமத்தை எந்தச் சூழ்நிலைகள் அவசியமாக்கியதோ அந்தச் சூழ்நிலைகள் பற்றிய கூற்றொன்றினையும் அத்தகைய உரிமமானது உரிமமளிக்கும் அதிகாரிக்கு ஏலவே அனுப்பி வைக்கப்பட்டவிடத்தன்றி, அப்பிரிவின்கீழ் வறிதாகியதான உரிமத்தினையும் அத்தகைய விண்ணப்பத்துடன், இணைத்து அனுப்புதல் வேண்டும்." ; அத்துடன்

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) மோட்டார் வாகன அரசிறை உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம் (1) ஆம் உட்பிரிவின்கீழ், விடயத்திற்கேற்ப ஏதேனும் நாளுக்கு முன்னர் அல்லது ஏதேனும் காலப்பகுதி முடிவடையுமுன்னர் செய்யப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்படுமிடத்தும், அவ்விண்ணப்பத்தைச் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளவிடத்தும், உரிமமளிக்கும் அதிகாரி, அத்தகைய தாமதமானது ஏதேனும் பிழைபாடு, விபத்து அல்லது தாதிஷ்டம் காரணமாக ஏற்பட்டதென அவர் திருப்திப்படும்வகையில் எண்பிக்கப்பட்டிருப்பதோடு, அவ்வுட்பிரிவின்கீழ் முறையாகச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின்மீது அவ்வுரிமம் வழங்கப்பட்டிருந்தால் இப்பாகத்தின்கீழ் அந்த உரிமத்துக்குச் செலுத்தற்பாலதாக இருந்திருக்கும் உரிமக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்பட்டதன்மேல் அவ்வாறு வழங்கப்பட்ட தேதியிலிருந்து வலுவிலிருப்பதாக வெளிப்படுத்தப்பட்ட அரசிறை உரிமம் ஒன்றினை அவரது தற்றுணிபின்பேரில் வழங்கலாம் ; அத்துடன் ஏதேனும் மோட்டார் வாகனத்திற்கான அரசிறை உரிமம் ஒன்று இவ்வுட்பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், அவ்வாறு தாமதித்த காலப்பகுதியின்போது அந்த வாகனம் தொடர்பில் 25 (1) ஆம் பிரிவின் மீறுகை எதற்குமென எவரேனும் ஆளுக்கு எதிராகக் குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது என்பதுடன், அத்தகைய கொடுப்பனவுக்கு முன்னர் குற்றவழக்கு தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, நீதிவான், அத்தகைய ஆளை விட்டுவிடுதலும் வேண்டும்.".

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :—

"(3) (அ) ஏதேனும் ஆண்டில் பயன்படுத்தாமைக் காலப்பகுதி பற்றிய அறிவித்தல் 37 ஆம் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளதான மோட்டார் வாகனம் ஒன்றின் அரசிறை உரிமம் ஒன்றுக்கான விண்ணப்பம், 30 (1) ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தின் (i) ஆம் பந்தியின்கீழ் அல்லது (ii) ஆம் பந்தியின் கீழ் செய்யப்படுமிடத்தும் அம்மோட்டார் வாகனமானது, அந்த ஆண்டின் சனவரி முதலாம் நாளுக்கும் உரிமம் வலுவுக்கு வர இருப்பதான தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் சட்டமுறையற்ற வகையில் பயன்படுத்தப்படவில்லை என உரிமமளிக்கும் அதிகாரி திருப்திப்படுமிடத்தும்; அல்லது

(ஆ) ஏதேனும் ஆண்டின்போது ஏதேனும் தேதியில் இலங்கையில் முதன்முறையாகப் பதிவுசெய்யப்பட்ட மோட்டார் வாகனம் எதற்குமான அரசிறை உரிமம் ஒன்றுக்குச் செய்யப்படும் விண்ணப்பம், 30 (1) ஆம் பிரிவுக்கான காப்புவாசகத்தின் (iii) ஆம் பந்தியின்கீழ் செய்யப்படுமிடத்தும், அந்த மோட்டார் வாகனம் தொடர்பில் பயன்படாமைக் காலப்பகுதி பற்றிய அறிவித்தல் எதுவும் 37 ஆம் பிரிவின்கீழ் கொடுக்கப்படாதிருக்குமிடத்தும்; அல்லது

(இ) முப்பத்தொன்பதாம் பிரிவின் காரணமாக அவசியமானதும் ஏதேனும் ஆண்டில் சனவரி முதலாம் நாளுக்குப் பின்னர் வலுவுக்கு வர இருப்பதுமான புதிய அரசிறை உரிமம் ஒன்றுக்கு விண்ணப்பம் செய்யப்படுமிடத்தும்,

அந்த உரிமத்தின்மீது செலுத்தப்படற்பாலதான உரிமக் கட்டணம், (2) ஆம் உட்பிரிவில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, ஆண்டொன்றின் பெப்புருவரி முதலாம் நாளன்று தொடங்கி, உரிமமானது எந்த மாதத்திலிருந்து வலுவுடையதாக வரவிருக்கின்றதோ அந்த மாதத்திற்கு முந்திய மாதத்தின் கடைசி நாளன்று முடிவடைவதான காலப்பகுதியின் முழுப் பஞ்சாங்க மாதம் ஒவ்வொன்றுக்கும் அந்த ஆண்டுக்கான உரிமத்தின்மீது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான உரிமக் கட்டணத்திலிருந்து பன்னிரண்டில் ஒரு பாகத்தைக் கழித்த பின்னரான உரிமக் கட்டணமாக இருத்தல் வேண்டும்.

(4) இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது இலங்கை அரசாங்கத்தின் சேவையிலேயே புறநீங்கலாகப் பயன்படுத்தப்படுவதான, அல்லது அதறகெனப் பரஸ்பர உடன்பாட்டொழுங்குகளைச் செய்துகொண்ட பின்னர், அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பு மூலம் காலத்திற்குக்காலம் குறித்துரைக்கக்கூடியவாறாக ஏதேனும் வெளிநாட்டு அரசின் அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு அரசினது அரசாங்கத்தின் (எத்தன்மைத்தான எப்பெயரினாலும் தலைப்புப் பெயரினாலும் அல்லது பதவிப் பெயரினாலும் அழைக்கப்படுவோராயினும்) இலங்கையிலுள்ள பிரதிநிதிக்குச் சொந்தமான அல்லது அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தின் இலங்கையிலுள்ள வியாபார ஆணையாளருக்கு அல்லது காவற்றாத அலுவலருக்கு, அல்லது அத்தகைய எவரேனும் பிரதிநிதியின் அல்லது ஆணையாளரின் அல்லது காவற்றாத அலுவலரின் பணியாட்டொகுதியிலுள்ள ஆட்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனத்துக்கான அரசிறை உரிமத்தின் மீது உரிமக் கட்டணம் எதுவும் செலுத்தப்படற்பாலதாகாது." ; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(5) மோட்டார் வாகன அரசிறை உரிமம் ஒன்றுக்கான உரிமக் கட்டணம் உரிமமளிக்கும் அதிகாரி ஒருவரிடம் செலுத்தப்பட்டவிடத்தும் அந்த உரிமம் அவரால் வழங்கப்படுவதன் முன்னர், அந்த மோட்டார் வாகனத்தின் உடைமையில் மாற்றம் ஏற்படுமிடத்தும், அப்போது, அந்த மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட புதிய சொந்தக்காரர் அந்தக் கட்டணத்தைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டொன்றைக் காண்பிப்பதோடு, உரிமமளிக்கும் அதிகாரியிடமிருந்து சான்றிதழ் ஒன்று வழங்கப்படாமலுமிருந்தால், அந்த பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரினால் உரிமக் கட்டணம் எதுவும் செலுத்தப்படற்பாலதாகாது.

(6) எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்ட அரசிறை உரிமத்திற்கான உரிமக் கட்டணமாக அந்த ஆளினால் செலுத்தப்பட்ட தொகை அந்த உரிமத்திற்குச் செலுத்தற்பாலதான முழுத் தொகையிலும் பார்க்கக் குறைவானதாக இருக்குமிடத்து, உரிமமளிக்கும் அதிகாரி, எழுத்திலான அறிவித்தல்மூலம், அந்த அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையினைச் செலுத்துமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம் ; அத்தகைய பணத்தொகையானது, அந்த அரசிறை உரிமத்திற்குச் செலுத்தற்பாலதான முழுக் கட்டணத்திற்கும் அந்த உரிமத்திற்கு உண்மையாகவே செலுத்தப்பட்ட கட்டணத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்திற்குச் சமமான ஒரு தொகையாகும்.

(7) ஆறும் உட்பிரிவின்கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆள் எவரும், தவறுென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதன்மேல், இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் நீதிமன்றமானது, அது விதிக்கக்கூடியதான அத்தகைய ஏதேனும் குற்றப்பணத்துடன் சேர்த்து மேலதிகமாக அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையினைச் செலுத்துமாறு அந்த ஆளுக்குக் கட்டளையிடலாம்; அத்துடன், அத்தகைய பணத்தொகையானது, அந்த நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றுற்போன்று அறவிடப்படலாம்.".

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33, 34, 35, 36 என்னும் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 33, 34, 35, 36 என்னும் பிரிவுகளை மாற்றீடுசெய்தல்.*

" *குறித்தசில உரிமங்களின் கால எல்லையை வரையறுத்தல்.*

33. (1) (அ) எந்தப் படிநிலைப் பயண வண்டி அனுமதிச்சீட்டினது அதிகாரத்தின்கீழ் வசு வண்டி ஒன்று பயன்படுத்தப்படுகின்றதோ அந்தப் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு; அல்லது

(ஆ) எந்தச் சொந்தக் கோச்சு அனுமதிச்சீட்டு, ஏதேனும் சொந்தக் கோச்சைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கின்றதோ அந்தச் சொந்தக் கோச்சு அனுமதிச்சீட்டு,

ஏதேனும் ஆண்டில் திசம்பர் முப்பத்தோராம் நாளுக்கு முன்னர் முடிவடைய இருக்கும் ஏதேனும் விடயத்தில், விடயத்திற்கு ஏற்ப, அந்த வசுவண்டிக்கு அல்லது சொந்தக் கோச்சுக்கு இந்தப் பாகத்தின்கீழ் அந்த ஆண்டுக்கென வழங்கப்பட்ட அரசிறை உரிமம், 32 ஆம் பிரிவில் எது எப்படியிருப்பினும், அனுமதிச்சீட்டு முடிவடைய இருப்பதான தேதிவரை மாத்திரமே வலுவில் இருப்பதாதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு இருப்பதாக எடுத்துக் கூறப்படுதலும் வேண்டும் :

ஆயின், அந்த வசுவண்டியின் அல்லது சொந்தக் கோச்சின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அரசிறை உரிமம் முடிவடையும் தேதியின் முன்னர் எக்காலத்திலேனும் விடயத்திற்கு ஏற்ப, எந்த ஆண்டு தொடர்பில் உரிமம் வழங்கப்பட்டதோ அந்த ஆண்டின் திசம்பர் முப்பத்தோராம் நாளுக்கு முந்தாத ஒரு தேதிவரை செல்லுபடியுடைய படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டொன்றை அல்லது சொந்தக் கோச்சு அனுமதிச்சீட்டொன்றை வைத்திருப்பவராக வரும்போது, எந்த உரிமமளிக்கும் அதிகாரியால் அந்த உரி

மம் வழங்கப்பட்டதோ அந்த அதிகாரி, உரிமம் முடி வடையும் தேதியின் முன்னர் அத்தகைய சொந்தக் காரரால் அதற்கென விண்ணப்பம் செய்யப்பட்டதன் மேலும், இதனகத்துப் பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட வாறுகக் கணிக்கப்பட்ட கட்டணத்தொகையினைச் செலுத்தியதன் மேலும், உரிமத்தின்மீது அவர் கைப் பட புறக்குறிப்பொன்றினை எழுதுவதன்மூலம், மேற் சொல்லிய திசம்பர் முப்பத்தோராம் நாள்வரையில் அதன் செல்லுபடிக் காலப்பகுதியினை நீடித்தல் வேண் டும் என்பதுடன், அதற்கிணங்க அந்தத் தேதிவரை அந்த உரிமம் வலுவுடையதாகத் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

(2) ஏதேனும் ஆண்டு தொடர்பில் வழங்கப்பட்ட தும் வசு வண்டி அல்லது சொந்தக் கோச்சு ஒன்றிற் கானதுமான அரசிறை உரிமம் ஒன்று, (1) ஆம் உட் பிரிவுக்கு இணங்க அந்த ஆண்டின் திசம்பர் முப்பத் தோராம் நாளுக்கு முன்னர் முடிவடைய இருக்கு மிடத்து, 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனைத் தவிர, எந்த மாதத்தில் உரிமமானது முடிவடையவுள்ளதோ அந்த மாதத்தை அடுத்துவரும் மாதத்தின் முதலாம் நாளன்று தொடங்கி மேலே சொல்லப்பட்ட திசம் பர் மாதத்தின் முப்பத்தோராம் நாளன்று முடிவடை யும் காலப்பகுதியின் ஒவ்வொரு முழுப் பஞ்சாங்க மாதத்துக்கும் அந்த உரிமத்தின்மீது செலுத்தற்பால தான கட்டணத்திலிருந்து பன்னிரண்டிலொரு பாகத் தைக் கழித்தபின்னர் ஆண்டு உரிமத்தின்மீது அப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படற் பாலதான கட்டணமாதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய உரிமம் ஒன்றன் செல்லுபடிக் காலம் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மேலே சொல்லப்பட்ட திசம்பர் முப்பத்தோராம் நாள்வரை நீடிக்கப்படுமிடத்து, அந்த உரிமத்தின்மீது மேலதிகக் கட்டணமொன்று செலுத்தப்படற்பாலதாதல் வேண் டும் என்பதுடன், அந்தக் கட்டணத்தொகையானது, 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆண்டு உரிமம் ஒன்றின்மீது செலுத்தப்படற்பாலதான கட்ட ணம், உரிமம் வழங்கப்பட்ட நேரத்தில் அந்த உரிமத் தின்மீது உண்மையாகவே செலுத்தப்பட்ட தொகை யினை எத்தொகையால் விஞ்சுகிறதோ அந்தத் தொகை யாக இருத்தல் வேண்டும்.

அரசிறை உரிமத்தில் நிபந்தனைகளை உட்புகுத்து வதற்குள்ள தத்துவம்.

34. எவரேனும் உரிமமளிக்கும் அதிகாரி, மோட் டார் கோச்சு, லொறி, அல்லது மோட்டார் முச்சக்கர வான் ஒன்றுக்கான அரசிறை உரிமம் எதனிலும் பரி சோதனையாளர் அல்லது வேறு ஆள், விடயத்துக் கேற்ப, அத்தகைய கோச்சை, லொறியை, அல்லது

மோட்டார் மூச்சக்கர வாகன இச்சட்டத்தின்கீழ் பரிசோதனை செய்தபின்னர், ஏமக்காப்பின் நலன்கருதி அவசியமானதென அத்தாட்சிப்படுத்தக்கூடியதான அத்தகைய நிபந்தனைகளை உட்புகுத்தலாம்.

சொந்தக் கோச்சுக்கள் முதலியவற்றிற்கான அரசிறை உரிமங்களில் ஆட்களினதும் பயணிகளினதும் ஆகக்கூடிய தொகை குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

35. (1) உரிமமளிக்கும் அதிகாரியானவர், அந்த அதிகாரியால் வழங்கப்படும் ஒவ்வோர் அரசிறை உரிமத்திலும், பின்வருவன பற்றிக் குறித்துரைத்தல் வேண்டும் :—

(அ) சொந்தக் கோச்சு ஒன்றுக்கான உரிமத்தில், அந்தக் கோச்சில் கொண்டு செல்லப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் ஆகக் கூடிய தொகை ; அத்துடன்

(ஆ) வசுவண்டி ஒன்றுக்கான உரிமத்தில், அந்த வசுவண்டியில் கொண்டு செல்லப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பயணிகளின் ஆகக்கூடிய தொகை.

(2) சொந்தக் கோச்சில் அல்லது வசுவண்டியில் விடயத்திற்கேற்ப, கொண்டு செல்லப்படக்கூடிய ஆட்களின் அல்லது பயணிகளின் ஆகக்கூடிய தொகையினைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக—

(அ) விடயத்திற்கேற்ப ஒவ்வோர் ஆளுக்கும் அல்லது பயணிக்கும் மூந்நூற்றெண்பத்திரண்டு மில்லிமீட்டர் இருக்கை இடவசதி அனுமதிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) கோச்சு அல்லது வசுவண்டி ஏற்றிச் செல்லக்கூடிய ஏமக்காப்பான பாரம்பற்றி முறையான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும் ; ஏமக்காப்பான பாரம், ஆணையாளர் பணிக்கக்கூடிய அத்தகைய முறையில் கணிக்கப்படுதல் வேண்டும் ; அந்தக் கணிப்பின்போது விடயத்திற்கேற்ப, ஒவ்வோர் ஆளினதும் அல்லது பயணியினதும் நிறை ஐம்பது கிலோ கிராமாகக் கணிக்கப்படும் :

ஆயின், எவ்வாறாயினும், நின்றுசெல்லும் பயணிகளைக் கொண்டு செல்வதற்கெனப் பிரதானமாக அல்லது முழுமையாகப் பொருத்தி உருவாக்கப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட வசு வண்டி தவிர்ந்ததும்—

(அ) விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கப்பொருத்தி உருவாக்கப்பட்டதும், சாதனங்கள்

பொருத்தப்பட்டதும் ஒரு மத்திய ஒடுக்கப்பாதை ஏற்பாடு செய்யப்பட்டதும்; அத்துடன்

(ஆ) கிரமமான வசுவண்டிச் சேவைக்காகப் படிநிலைப் பயணவண்டி அனுமதிச் சீட்டு ஒன்றன் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படவுள்ளதும்,

ஆன வசுவண்டி ஒன்றன் விடயத்தில், ஆணையாளரால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளுக்குப் பின்வரும் ஏற்பாடுகள் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்குப் பதிலாக ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(i) ஒவ்வொரு பயணிக்கும் முந்நூற்றெண்பத்திரண்டு மில்லிமீட்டர் இருக்கை இடவசதி அனுமதிக்கப்படுதல் வேண்டும்;

(ii) வசுவண்டியானது நாலாயிரம் மில்லிமீட்டருக்குக் குறையாததும் நாலாயிரத்து அறுநூறு மில்லி மீட்டருக்கு அதிகமாகாததுமான சில்லுத் தளத்தைக் கொண்டிருக்குமிடத்து, அந்த வசுவண்டிக்கென (i) ஆம் பந்தியின் கீழ் தீர்மானிக்கப்பட்ட பயணிகளின் தொகை எட்டால் அதிகரிக்கப்படுதல் வேண்டும்;

(iii) வசுவண்டியானது, நாலாயிரம் மில்லிமீட்டருக்குக் குறைவான சில்லுத் தளத்தைக் கொண்டிருக்குமிடத்து, அந்த வசுவண்டிக்கென (i) ஆம் பந்தியின்கீழ் தீர்மானிக்கப்பட்ட பயணிகளின் தொகை, ஐந்தில் ஒன்றால் அதிகரிக்கப்படுதல் வேண்டும்;

(iv) வசுவண்டியானது நாலாயிரத்து அறுநூறு மில்லிமீட்டருக்குக் கூடுதலான சில்லுத்தளத்தைக் கொண்டிருக்குமிடத்து, அந்த வசுவண்டிக்கென (i) ஆம் பந்தியின்கீழ் தீர்மானிக்கப்பட்ட பயணிகளின் தொகை பன்னிரண்டுக்கு அதிகமாகாத எண் ஒன்றினால் அதிகரிக்கப்படுதல் வேண்டும் :

அத்துடன், ஆயின், மேலும்—

(அ) நின்றுசெல்லும் பயணிகளைக் கொண்டு செல்வதற்கெனப் பிரதானமாக அல்லது முழுமையாகப் பொருத்தி உருவாக்கப்பட்டதும் அல்லது இசைவாக்கப்பட்டதும்; அத்துடன்

(ஆ) ஆணையாளரால் அதற்கென வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டு ஒன்றில் குறித்துரைக்கப்

படக்கூடிய அத்தகைய பாதையில் அல்லது பாதைகளில் பயன்படுத்தப்படுகின்றதுமான, வசுவண்டி ஒன்றின் விடயத்தில், இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்குப் பதிலாகப் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(i) எவையேனும் இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிடத்து, ஒவ்வொரு பயணிக்கும் முந்நூற்றெண்பத்திரண்டு மில்லிமீட்டர் இருக்கை இடவசதி அனுமதிக்கப்படுதல் வேண்டும் ;

(ii) நின்றுசெல்லும் ஒவ்வொரு பயணிக்கும், ஒரு சதுர மீட்டரின் நூறில் பதினாறு பங்குநிற்கும் இடவசதி அனுமதிக்கப்படுதல் வேண்டும் ;

(iii) நின்றுசெல்லும் பயணி ஒவ்வொருவருக்கும் தொங்கு நாடாவொன்று அல்லது எத்தன்மைத்தானதுமான தாங்கி எதுவும் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

பயணிகளுக்கான நிற்கும் இடவசதியைக் கணிப்பதில், வசுவண்டியில் இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், இருக்கைகளின் வரிசைமுன்பாகவுள்ள நூற்றிருபத்தெட்டு மில்லிமீட்டர் இடைவெளிபற்றியும், பயணிகள் வசுவண்டியினுள் புகுவதற்கும் வசுவண்டியிலிருந்து வெளியேறுவதற்கும் ஒதுக்கப்பட்ட இடம் பற்றியும் கணக்கில் எடுக்கப்படுதலாகாது.

*லொறிகளுக்கும் மோட்டார் முச்சக்கர வான்களுக்குமான அரசிறை உரிமங்களில் ஆகக்கூடிய பாரம் குறித்துரைக்கப்பட வேண்டும்.*

36. உரிமமளிக்கும் அதிகாரியானவர், லொறி ஒன்றுக்கு அல்லது மோட்டார் முச்சக்கர வான் ஒன்றுக்கு அந்த அதிகாரியால் வழங்கப்பட்ட அரசிறை உரிமம் ஒவ்வொன்றிலும் அந்த லொறியில் அல்லது மோட்டார் முச்சக்கர வானில் கொண்டு செல்லப்படக்கூடிய ஆகக்கூடிய பாரத்தை (அதாவது வருவாய்ப் பாரத்தை) குறித்துரைத்தல் வேண்டும். ஆகக்கூடிய பாரத்தைத் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, லொறியில் அல்லது மோட்டார் முச்சக்கர வானில் கொண்டு சொல்லப்படக்கூடிய ஒவ்வோர் ஆளும் ஐம்பதுடன் பத்தில் எட்டு கிலோகிராம் நிறையுடையவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் :—

"(1) (அ) மோட்டார் வாகனம் ஒன்றன் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அல்லது அதனை உடைமையில் வைத்திருக்கும் எவரேனும் ஆள், ஏதேனும் ஆண்டில் திசம்பர் மாதம் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதன் முன்னர், எழுத்திலான ஓர்

அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியதும், அடுத்துவரும் ஆண்டின் சனவரி மாதம் முதலாம் நாளன்று தொடக்கம் ஆறு மாதங்களுக்குக் குறையாததுமான அத்தகைய காலப்பகுதிக்கு அம் மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்தத் தாம் முன்னவில்லை என எழுத்திலான அந்த அறிவித்தலை உரிமமளிக்கும் அதிகாரிக்குக் கொடுக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் எழுத்திலான அறிவித்தல் திசம்பர் முப்பத்தோராம் நாளுக்குப் பின்னர் ஏழு நாட்களுக்குள்ளாகக் கொடுக்கப்படுமிடத்து, உரிமமளிக்கும் அதிகாரி, அத்தகைய அறிவித்தலைக் கொடுப்பதிலுள்ள தாமதம் ஏதேனும் பிழைபாடு, விபத்து அல்லது துரதிஷ்டம் காரணமாக ஏற்பட்டது எனத் திருப்திப்பட்டால், அத்தகைய அறிவித்தலை, திசம்பர் முப்பத்தோராம் நாளுக்கு முன்னர் முறையாகக் கொடுக்கப்பட்ட அறிவித்தல் என்றாற் போன்று அவரது தற்றுணிபில் ஏற்றுக்கொள்ளலாம்.

(ஆ) ஆளொருவர், மோட்டார் வாகனம் ஒன்றினை ஏதேனும் ஆண்டின்போது கொள்ளுமிடத்து, அம்மோட்டார் வாகனத்தைக் கொண்ட தேதியின் பின்னர் ஏழு நாட்களுக்குள்ளாக, எழுத்திலான ஓர் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய அந்த நாளன்று தொடங்குகின்ற அத்தகைய காலப்பகுதிக்கு அம் மோட்டார் வாகனத்தைத் தாம் பயன்படுத்த முன்னவில்லை என எழுத்திலான அந்த அறிவித்தலை அவர் கொடுக்கலாம்.

(இ) மோட்டார் வாகனம் ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், 40 ஆம் பிரிவின்கீழ் மோட்டார் வாகனம் ஒன்றின் அரசிறை உரிமம் ஒன்றினை நீக்கஞ் செய்வதற்காக மீள ஒப்படைக்குமிடத்து, எழுத்திலான ஓர் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய மீள ஒப்படைத்தற் தேதியன்று அல்லது அதன் முன்னர் எழுத்திலான அந்த அறிவித்தலைக் கொடுக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அந்த மோட்டார் வாகனம் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கு அல்லது ஏதேனும் பிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமாகவுள்ள ஏதேனும் விடயத்தில், உரிமமளிக்கும் அதிகாரியானவர், அத்தகைய எழுத்திலான அறிவித்தலுக்குப் பதிலாகவும் உரிமத்திற்குப் பதிலாகவும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலப்பகுதிக்கு எந்தப் பெருவழியிலும் அவ்வாகனம் பயன்படுத்தப்படவில்லை எனக் கூறும் சான்றிதழ் ஒன்றினை சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்டவரான அலுவலரிடமிருந்து ஏற்றுக்கொள்ளலாம்.

(ஈ) மோட்டார் கோச்சு ஒன்றுக்கான அல்லது லொறி ஒன்றுக்கான அரசிறை உரிமம், ஏதேனும் ஆண்டில் திசம்பர் முப்பத்தோராம் நாளுக்கு முன்னர் எந்நேரத்திலாயினும் முடிவடைகின்றவிடத்து, அந்த மோட்டார் கோச்சின் அல்லது லொறியின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் எழுத்திலான

ஓர் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முடிவடையும் தேதியன்று தொடங்குகின்றதுமான அத்தகைய காலப்பகுதிக்கு அந்த மோட்டார் கோச்சை அல்லது லொறியைத் தாம் பயன்படுத்தமுன்னவில்லை என அவ்வாறு முடிவடையும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், எழுத்திலான அந்த அறிவித்தலைக் கொடுக்கலாம்.

(2) எம்மோட்டார் வாகனம் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பயன்படுத்தாமைக் காலப்பகுதி பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதோ அம்மோட்டார் வாகனம் ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், அந்தக் காலப்பகுதி முடிவடைவதன் முன்னர் எழுத்திலான அறிவித்தலைக் கொடுப்பதன் மூலம் அக்காலப்பகுதியை மேலும் நீடிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், பயன்படுத்தாமைக் காலப்பகுதியினை நீடிப்பதாகக் கொள்ளப்படுகின்ற எழுத்திலான அறிவித்தல் எதுவும், அந்தக் காலப்பகுதி முடிவடையும் தேதியின் பின்னர் ஏழு நாட்களுக்குள்ளாகக் கொடுக்கப்படுமிடத்து, உரிமமளிக்கும் அதிகாரி, அத்தகைய அறிவித்தலைக் கொடுப்பதிலுள்ள தாமதம் ஏதேனும் பிழைபாடு, விபத்து அல்லது துரதிஷ்டம் காரணமாக ஏற்பட்டதெனத் திருப்திப்பட்டால், அவரது தற்றுணிபில் அத்தகைய அறிவித்தலை, அந்தக் காலப்பகுதி முடிவடைவதன் முன்னர் முறையாகக் கொடுக்கப்பட்ட அறிவித்தல் என்றாற் போன்று ஏற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பயன்படுத்தாமைக் காலப்பகுதியானது அதற்கிணங்க நீடிக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(5அ) ஆளெவரும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில் பயன்படுத்தாமைக் காலப்பகுதி பற்றிக் குறித்துரைக்காதிருந்து ஆனால், அந்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் பதினான்கு நாட்களுக்குள் அந்தக் காலப்பகுதி பற்றி எழுத்தில் குறித்துரைக்குமிடத்து, அந்தக் காலப்பகுதியை அந்த அறிவித்தலில் அவர் குறித்துரைத்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

*" அரசிறை உரிமம் மோட்டார் வாகனங்களில் கொண்டு செல்லப்படுதலும் தேவைப்படுத்தப்படுமிடத்துக் காண்பிக்கப்படுதலும்.*

38. மோட்டார் வாகனம் எதற்கும் வழங்கப்பட்டதான அரசிறை உரிமம்—

(அ) மோட்டார்வாகனத்தின் முன்பக்கத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், உரிமத்தின் முகப்பும் அதன் மேலுள்ள எழுத்தும், மோட்டார் வாகனத்தின் இடப்பக்கத்தில் அல்லது ஓரப்பக்கத்தில் நின்று பார்க்கும் ஓர் ஆளுக்கு எந்நேரத்திலும் தெளிவாகத் தெரியும்படியாக மோட்டார் வாகனத்

தின் இடப்பக்கத்தில் அல்லது ஓரப்பக்கத்தில் உள்ள துலாம்பரமான ஓர் இடத்தில் வைக்கப் பட்டிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) பொலிசு அலுவலர், கிராமசேவை உத்தியோகத்தர் அல்லது பரிசோதனையாளர் ஒருவரினால் அல்லது ஆணையாளரினால் அல்லது உரிமமளிக்கும் அதிகாரியினால் எழுத்தில் அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் ஆளினால் கேட்கப்படும்பொழுது பரிசோதனைக்கெனக் கிடைக்கக்கூடியதாயிருத்தலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அரசிறை உரிமமானது புறக் குறிப்பிடப்படுவதற்காக அல்லது தடுத்துவைக்கப்படுவதற்காக நீதிமன்றமொன்றினால் அல்லது ஆணையாளர் ஒருவரினால் தேவைப்படுத்தப்படும்பொழுது வாகனத்திலிருந்து அகற்றப்பட்டுக் காண்பிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம், 40 ஆம், 41 ஆம் பிரிவுகளை மாற்றீடுசெய்தல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம், 40 ஆம், 41 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

"அரசிறை உரிமங்கள் வறிதாக வரும் சந்தருப்பங்கள்.

39. (1) ஏதேனும் மோட்டார் வாகனத்துக்கான அரசிறை உரிமம், அந்த மோட்டார் வாகனம்—

(அ) முதலில் கூறப்பட்ட அரசிறை உரிமத்திலிருந்து வேறுபட்டதான வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த, அல்லது

(ஆ) முதலில் கூறப்பட்ட அரசிறை உரிமத்திலிருந்து வேறுபட்டதான உரிமக்கட்டணமுள்ளதான,

அரசிறை உரிமம் ஒன்றைத் தேவைப்படுத்துவதான ஒரு மோட்டார் வாகனமாக மாற்றப்படும்வகையில் அதில் மாறுதல்கள் செய்யப்பட்டால், வறிதானதாக வருதல் வேண்டும்.

(2) மோட்டார் வாகனம் எதற்குமான அரசிறை உரிமம், அந்த மோட்டார் வாகனத்தை முதலில் கூறப்பட்ட அரசிறை உரிமத்தினால் அதிகாரம் வழங்கப்படாததான ஒரு நோக்கத்திற்குப் பயன்படுத்த அதிகாரம் வழங்குவதற்காக அந்த மோட்டார் வாகனத்திற்கு வழங்கப்பட்ட புதிய ஓர் அரசிறை உரிமம் வலுவுடையதாக வரும் தேதியன்று வறிதானதாக வருதல் வேண்டும்.

(3) அரசிறை உரிமம் ஒன்று, எந்த மோட்டார் வாகனம் தொடர்பாக வழங்கப்பட்டதோ அந்த மோட்டார் வாகனத்தின் உடைமையில் மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக, 31 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு

அந்த அரசிறை உரிமத்திற்கு ஏற்புடையதாகாதொழிந்தால், அவ் உட்பிரிவு ஏற்புடையதாகும் அரசிறை உரிமம் ஒன்று வறிதானதாகிவிடும்.

(4) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் வறிதாகிய அரசிறை உரிமம் ஒன்றினை மாற்றீடுசெய்வதற்கான, அல்லது

(ஆ) புதிய அரசிறை உரிமத்தினால் மாற்றீடு செய்யப்பட்டதான அரசிறை உரிமத்தினால் அதிகாரம் வழங்கப்படாததான ஒரு நோக்கத்திற்கு மோட்டார் வாகனம் எதனையும் பயன்படுத்துவதனை (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிட்டவாறு அதிகாரம் வழங்குவதற்கான,

புதிய அரசிறை உரிமம் ஒன்று இச்சட்டத்தில், இப்பிரிவின் காரணமாக அவசியமானதாக வந்த புதிய அரசிறை உரிமம் எனக் குறிப்பீடு செய்யப்படும்.

அரசிறை உரிமங்களை ஒப்படைத்தலும், நீக்கஞ்செய்தலும், மாற்றஞ் செய்தலும்.

40. (1) அரசிறை உரிமம் ஒன்றினை வைத்திருப்பவர், அதனை வழங்கியவரான உரிமமளிக்கும் அதிகாரியிடம் நீக்கஞ்செய்வதற்கென அதனை ஒப்படைக்கலாம்.

(2) மோட்டார் வாகனம் ஒன்றிற்கான அரசிறை உரிமம் வலுவுடையதாக இருக்கும்பொழுது, அந்த மோட்டார் வாகனத்தின் பதிவு, 18 ஆம் பிரிவின்கீழ் நீக்கஞ்செய்யப்படுமிடத்து, அந்த அரசிறை உரிமத்தினை வைத்திருப்பவர், அதனை வழங்கியவரான உரிமமளிக்கும் அதிகாரியிடம் நீக்கஞ் செய்வதற்கென அதனை ஒப்படைக்கலாம்.

(3) ஓர் அரசிறை உரிமம்—

(அ) முப்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் வறிதானதாகவுள்ளவிடத்து, அல்லது

(ஆ) இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகும் ஓர் அரசிறை உரிமமாகவுள்ளவிடத்து,

அந்த அரசிறை உரிமத்தை வழங்கியவரான உரிமமளிக்கும் அதிகாரி, அவ்வரசிறை உரிமத்தை இல்லாதொழிப்பதற்காக அவரிடம் ஒப்படைக்கும்படி அவ்வரசிறை உரிமத்தை வைத்திருப்பவருக்கு எழுத்துமூலமாகக் கட்டளையிடலாம்.

(4) அரசிறை உரிமமொன்றில் ஏதேனும் மாற்றஞ் செய்வதற்கு அவசியமேற்படுமிடத்து, அவ்வரசிறை உரிமத்தை வழங்கிய உரிமமளிக்கும் அதிகாரி, அம் மாற்றத்தைச் செய்யும் நோக்கத்துக்காக அவ்

வுரிமத்தை அவருக்கு திருப்பியளிக்கும்படி அவ்வர சிறை உரிமத்தை வைத்திருப்பவருக்கு எழுத்துமூலம் கட்டளையிடலாம்.

(5) மூன்றும் உட்பிரிவின்கீழான அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழான ஒரு கட்டளை, ஓர் அரசிறை உரி மத்தை வைத்திருக்கும் எவர் தொடர்பில் ஆக்கப்படு கின்றதோ, அவர், அக்கட்டளை அவருக்கு அனுப்பப் பட்ட பதினுன்கு நாட்களுக்குள்ளாக அக்கட்டளைக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

(6) ஓர் அரசிறை உரிமம்—

(அ) இப்பிரிவின்கீழ் ஒப்படைக்கப்படுமிடத்து ; அல்லது

(ஆ) முப்பத்தொன்பதாம் பிரிவின் காரணமாக அவ சியமாக வந்த ஒரு புதிய அரசிறை உரிமத் தின் மூலம் மாற்றீடு செய்யப்படுமிடத்து,

எந்த உரிமமளிக்கும் அதிகாரிக்கு அந்த அரசிறை உரிமம் ஒப்படைக்கப்படுகின்றதோ அல்லது எந்த உரிமமளிக்கும் அதிகாரி புதிய அரசிறை உரிமத்தை மாற்றீடு செய்யப்பட்ட அரசிறை உரிமத்துக்காக வழங்குகின்றாரோ, அந்த உரிமமளிக்கும் அதிகாரி, ஒப் படைக்கப்பட்ட அல்லது மாற்றீடுசெய்யப்பட்ட அர சிறை உரிமத்தில் தமது கைப்படச்செய்த புறக்குறிப்பு மூலம் அதை இல்லாதொழித்தல் வேண்டும்.

உரிமக் கட்ட ணத்தை மீளக் கொடுத்தல்.

41. (1) முப்பத்தேழு (1) என்னும் பிரிவின் காரண மாக ஒரு புதிய அரசிறை உரிமம் ஏதேனும் மோட் டார் வாகனத்துக்கு வழங்கப்படுமிடத்து, புதிய அர சிறை உரிமத்தினால் மாற்றீடுசெய்யப்பட்ட அரசிறை உரிமம் எவ்வாளுக்கு வழங்கப்பட்டதோ அவ்வாள் மாற்றீடு செய்யப்பட்ட அரசிறை உரிமத்தை வழங்கிய உரிமமளிக்கும் அதிகாரியிடமிருந்து, மாற்றீடுசெய்யப் பட்ட அரசிறை உரிமம் வறிதாகிய மாதத்தை அடுத் துறும் மாதத்தின் முதலாம் நாளன்று தொடங்கி அடுத்துவரும் திசெம்பர் மாதத்தின் முப்பத்தோராம் நாளன்று முடிவடையும் காலப்பகுதியின் ஒவ்வொரு முழுப்பஞ்சாங்க மாதம் தொடர்பிலும், மாற்றீடுசெய் யப்பட்ட அந்த அரசிறை உரிமத்துக்காக அவ்வாளி னால் கொடுக்கப்பட்ட தீர்வையின் பன்னிரண்டிலொரு பாகத்தின் ஐந்து ரூபாத் தொகையினதான கழிப்பன வுக்கு அமைவாக, மீளளிப்பு ஒன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) முப்பத்தேழாம் பிரிவின் காரணமாக அவசியமா கும் ஒரு புதிய அரசிறை உரிமத்தினால் மாற்றீடுசெய் யப்பட்ட ஓர் அரசிறை உரிமமல்லாத ஒரு மோட்டார் வாகனத்துக்கான அரசிறை உரிமம் ஒன்றை வைக்

திருப்பவர், அதை வழங்கியவரான உரிமமளிக்கும் அதிகாரியிடம் அதை இல்லாதொழிப்பதற்காக ஒப்படைக்குமிடத்து அந்த மோட்டார் வாகனத்துக்கான அரசிறை உரிமத்தை வைத்திருப்பவர், அவ்வுரிமமளிக்கும் அதிகாரியிடமிருந்து, உரிமம் ஒப்படைக்கப்பட்ட மாதத்தை அடுத்துவரும் மாதத்தின் முதலாம் நாளன்று தொடங்கி அடுத்துவரும் திசெம்பர் மாதத்தின் முப்பத்தோராம் நாளன்று முடிவடையும் காலப்பகுதியின் ஒவ்வொரு முழுப் பஞ்சாங்க மாதம் தொடர்பிலும், ஒப்படைக்கப்பட்ட அந்த அரசிறை உரிமத்துக்காக அவ் ஆளினல் கொடுக்கப்பட்ட தீர்வையின் பன்னிரண்டிலொரு பாகத்தின் ஐந்து ரூபாத் தொகையினதான கழிப்பனவுக்கு அமைவாக, மீளளிப்பு ஒன்றைப்பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஒரு மோட்டார் வாகனத்துக்குரிய ஓர் அரசிறை உரிமத்துக்காக உரிமக் கட்டணத்தைக் கொடுத்துள்ள எவரேனும் ஆள், அவ்வரசிறை உரிமம் வழங்கப்படுவதன் முன்னர் எக்காலத்திலும் அத்தகைய உரிமத்தைப் பெறும்படி இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆள் தேவைப்படுத்தப்படவில்லையென உரிமமளிக்கும் அதிகாரியைத் திருப்திப்படுத்தினல், அவர் அவ்வுரிமமளிக்கும் அதிகாரியிடமிருந்து அக்கட்டணத்தின் மீளளிப்பொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) அரசிறை உரிமமொன்றுக்கான ஒரு விண்ணப்பகாரர் உரிமமளிக்கும் அதிகாரி ஒருவருக்கு அவ்வுரிமத்துக்கான உரிமக் கட்டணமாக அக்கட்டணத்துக்கு மிகையாக ஏதேனும் பணத் தொகையை அரசிறை முத்திரைகளில், அல்லது பணங்களில் அல்லது வேறு வகையில் கொடுக்குமிடத்து, அவர் அந்த உரிமமளிக்கும் அதிகாரியிடமிருந்து அத்தகைய மிகைத் தொகையின் மீளளிப்பு ஒன்றைப்பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

" (1) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பம் செய்யப்படுவதன்மேல், ஏதேனும் மோட்டார் வாகனம்—

(அ) ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மோட்டார் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக, அல்லது

(ஆ) இலங்கைக்கு வருகைதந்திருக்கும்போது அவ்வாகனத்தின் சொந்தக்காரரால் பயன்படுத்தப்படும் நோக்கத்துக்காக,

இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதென ஆணையாளர் திருப்தியடைந்தால், அவ்வாகனத்தின் சொந்தக்காரராக ஆளெவரும் பதியப்படவில்லை என்பது எவ்வாறிருப்பினும், அந்த

மோட்டார் வாகனம் இறக்குமதி செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு, அந்த மோட்டார் வாகனத்தின் உடைமைக்கும் பயன்பாட்டுக்கும் அதிகாரமளித்து, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், சொந்தக்காரருக்குப் பார்வையாளருக்கான தற்காலிக உரிமமொன்றை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினுல் ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள்—

(அ) தலைமன்னர் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு மோட்டார் வாகனத்தின் விடயத்தில், மன்னர் நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரினுல் அல்லது தலைமன்னரிலுள்ள உப சுங்கச் சேகரிப்பாளரால் பிரயோகிக்கப்படலாம் ;

(ஆ) திருகோணமலைத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு மோட்டார் வாகனத்தின் விடயத்தில், திருகோணமலை நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரால் பிரயோகிக்கப்படலாம் ; அல்லது

(இ) காலித் துறைமுகத்தில் இறக்குமதிசெய்யப்பட்ட ஒரு மோட்டார் வாகனத்தின் விடயத்தில், காலி நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரால் பிரயோகிக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) (அ) நூறு கிலோகிறும்கள் நிறைக்கு மேற்படாத பண்டங்களின் மாதிரிகளை ஏற்றிச்செல்வதற்காக ஒரு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு ஒரு மோட்டார் கார் அல்லது ஒரு மோட்டார் மூச்சக்கர வண்டி பயன்படுத்தப்படுவதனை அதிகாரமளிக்கும் நோக்கத்துக்காக ; அல்லது

(ஆ) அஞ்சல்களை அல்லது செய்தித்தாள்களை ஏற்றிச் செல்வதற்காக, ஒரு குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு ஒரு மோட்டார் கார், அல்லது ஒரு மோட்டார் மூச்சக்கர வண்டி பயன்படுத்தப்படுவதனை அதிகாரமளிக்கும் நோக்கத்துக்காக ; அல்லது

(இ) அஞ்சல்களை அல்லது செய்தித்தாள்களை ஏற்றிச் செல்வதற்காக அனுமதிச்சீட்டில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமைய ஒரு வசு வண்டி பயன்படுத்தப்படுவதனை அதிகாரமளிக்கும் நோக்கத்திற்காக,

ஆணையாளர் ஓர் அனுமதிச்சீட்டை வழங்கலாம்.".

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கு அல்லது ஏதேனும் பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஒரு வசு வண்டிக்கு அல்லது எவரேனும் வணிகரால் ஏதேனும் பொதுவழியில் பயன்படுத்தப்படும் வசு வண்டியானது III ஆம் பாகத்தின்கீழ் வழங்கப்பட்டதான ஒரு வணிகர் உரிமத்தின்கீழும் அதற்கு இணங்கவும் அவ்வாறு பயன்படுத்தப்படின், அவ்வாறு பயன்படுத்தப்பட்டால் மாத்திரமே, அந்த வசுவண்டிக்கு (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாது.".

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம், 48 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம், 48 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

" படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டின் வகுப்புகள்.

47. ஒரு வசுவண்டியைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கும் அனுமதிச்சீட்டு, பின்வரும் வகுப்புகளில் ஒன்றினதாக இருத்தல் வேண்டும் ; அவையாவன :—

(அ) சிற்சில சமயங்களில் சேவையிலீடுபடுத்துவதற்கான ஒரு படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு ; அத்துடன்

(ஆ) ஒரு சொந்தக் கோச்சு அனுமதிச்சீட்டு.

வசுவண்டி மூலம் பயணிகளை ஏற்றிச்செல்ல அதிகாரமளித்தல்.

48. சிற்சில சமயங்களில் சேவையிலீடுபடுத்துவதற்கான படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு, அதை வைத்திருப்பவர் எந்த வசு வண்டியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரராகவுள்ளாரோ அந்த வசுவண்டி ஒன்றை, ஏதேனும் விழா, முறைச்சந்தை, பொருட்காட்சி, உல்லாசப் பயணம் அல்லது வேறேதேனும் நிகழ்ச்சிக்காக அனுமதிச்சீட்டுக்கு இடப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க, சிற்சில சமயங்களுக்கான சேவையொன்றை நடாத்தும் நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதற்கு அவருக்கு உரித்தளித்தல் வேண்டும்.".

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

" படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு வலுவுடையதாக இருக்கும் காலம்.

50. சிற்சில சமயங்களிலான சேவைக்கான படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டு வலுவுடையதாகவிருக்கும் காலப்பகுதியானது அந்த அனுமதிச்சீட்டில் குறித்துரைக்கப்படும் அத்தகைய காலப்பகுதியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**31.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அந்தப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(2) ஒரு படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டுக்கான விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும், தமது விண்ணப்பத்துடன் சேர்த்து அந்நோக்கத்துக்கென ஆணையாளர் வழங்கக் கூடியவாறான அத்தகைய படிவத்தில், பின்வருவன அடங்கியதான ஒரு கூற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) அனுமதிச்சீட்டின்கீழ் பயன்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட வசு வண்டிகளின் வகை அல்லது வகைகள் பற்றிய விபரங்கள் ; அத்துடன்

(ஆ) ஆணையாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு விபரங்கள்." ; அத்துடன்

(2) அந்தப் பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்குவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம், 53 ஆம் பிரிவுகளை நீக்குதல்.

**32.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம், 53 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**33.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அந்தப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) சிற்சில சமயங்களிலான சேவைகளுக்கான தகவுச் சான்றிதழுக்கான விண்ணப்பமொன்று, சுற்றுலாக்களில் அல்லது உல்லாசப்பயணங்களில் பயணிகளை ஏற்றிச்செல்லும் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்த உத்தேசிக்கின்ற எவரேனும் ஆளினால் செய்யப்படலாம்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம், 56 ஆம் பிரிவுகளை நீக்குதல்.

**34.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம், 56 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"அனுமதிச்சீட்டுகளுக்குரிய நிபந்தனைகள்.

57. இச்சட்டத்தினதும் அதன் சார்பில் ஆக்கப்படும் எவையேனும் ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆணையாளர், ஏதேனும் படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டில், பின்வருவனவற்றைத் தேவைப்படுத்தும் நிபந்தனைகள் உட்பட, பொதுமக்களுக்குப் பாதுகாப்பையும் வசதியையும் அளிப்பதற்காக, விதிப்பதற்குத் தகுதியானவையென அவர் எண்ணக்கூடிய அத்தகைய எல்லா நிபந்தனைகளையும் இடலாம் :—

(அ) விதிக்கப்படவுள்ள கட்டணங்கள் அனுமதிச்சீட்டில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறானவையாக இருத்தல்வேண்டும் ;

(ஆ) அனுமதிச்சீட்டில் குறித்துரைக்கப்பட்ட நேர அட்டவணைக்கு இணங்க சேவை நடாத்தப்படுதல்வேண்டும் ;

(இ) சேவையில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு வசுவண்டியும் ஒரு குறித்துரைக்கப்பட்ட வகையினதாக இருத்தல்வேண்டும் என்பதுடன் எல்லா நேரங்களிலும் தகுதியானதும் பயன்படுத்தப்படக்கூடியதுமான நிலையில் பேணப்படுதலும்வேண்டும் ;

(ஈ) வசுவண்டி எதுவும், அது தொடர்பிலான தகுதிச் சான்றிதழ் அப்போதைக்கு வலுவிலிருந்தாலன்றி, சேவையில் பயன்படுத்தப் படுதலாகாது ;

(உ) அனுமதிச்சீட்டினது அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படும் வசுவண்டிகளின் சாரதிகள், நடாத்துநர்கள் ஆகியோரது விடயத்தில், வசுவண்டிகளின் சாரதிகள் அல்லது நடாத்துநர்கள் தொடர்ச்சியாகக் கடமையிலிருக்கவேண்டிய நேரம் தொடர்பானதும், அவர்களின் வேலை நேரங்கள் அல்லது ஓய்வுநேரங்கள் தொடர்பானதும், அவர்களின் கூலிகள் தொடர்பானதுமான எழுத்திலுள்ள ஏதேனும் சட்டத்தின் தேவைப்பாடுகள் இணங்கி ஒழுகப்படுதல் வேண்டும் ;

(ஊ). எழுத்திலுள்ள ஏதேனும் சட்டத்திலுல் விதித் துரைக்கப்பட்டவையும், வசவண்டிகளின் விடயத்தில் ஏற்புடைத்தானவையுமான வேக வரையறைகள் சேவையை நடாத்துகையில் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம், 59 ஆம் பிரிவுகளை நீக்குதல்.

36. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம், 59 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.

37. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 60அ என்னும் பிரிவை நீக்குதல்.

38. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.

39. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம், (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம், 63 ஆம் பிரிவுகளை நீக்குதல்.

40. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம், 63 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவைத் திருத்துதல்.

41. முதன்மைச் சட்டவாக்கத்தின் 64 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

" (அ) படிநிலைப் பயணவண்டி அனுமதிச்சீட்டுக்களை வழங்குதற்கான விண்ணப்பங்களின்மீதான நடவடிக்கைமுறையும் அவ்வழங்குதல், இடைநிறுத்துதல், இல்லாதொழித்தல் ஆகியன தொடர்பான பிரச்சினைகளைத் தீர்மானித்தலும், அத்தகைய விண்ணப்பங்களும் அனுமதிச் சீட்டுக்களும் தொடர்பாகச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களும் அத்துடன், அத்தகைய கட்டணங்கள் எம்முறையில் செலுத்தப்படற்பாலன என்பதும் ; " ;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ஊ) வசுவண்டிகளினால் புரியப்பட்ட பிரயாணங்கள் தொடர்பில் வைத்திருக்கப்படவேண்டிய பதிவேடுகள்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 73அ என்னும் பிரிவுகளை நீக்குதல்.

42. முதன்மைச் சட்டவாக்கத்தின் 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 73அ என்னும் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் V ஆம் பாகத்தை நீக்குதல்.

43. எழுபத்தொன்பதாம் பிரிவு தொடக்கம் 98 ஆம் (இரண்டும் உட்பட்ட) பிரிவுகளைக்கொண்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் V ஆம் பாகம் இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவைத் திருத்துதல்.

44. முதன்மைச்சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "மோட்டார் கோச்சு அல்லது கேள்வுக்கார்" என்ற சொற்களுக்குப் பதிலாக "மோட்டார் கோச்சு" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவைத் திருத்துதல்.

45. முதன்மைச் சட்டவாக்கத்தின் 107 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) சொல்லப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்ற பின்னர், ஆனால் பூட்கையை இல்லாதாக்குகை பயனுறுத்தப்பட்டதிலிருந்து மூன்று மாத காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர், சான்றிதழ் காப்புறுதியாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பின் அல்லது சான்றிதழ் எந்த ஆளுக்கு வழங்கப்பட்டதோ அந்த ஆளினால் சத்தியக்கடதாசி ஒன்று தயாரிக்கப்பட்டு காப்புறுதியாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பின்; அல்லது

(இ) ஒன்றில் சொல்லப்பட்ட நிகழ்ச்சி நடைபெறுமுன்னர் அல்லது நடைபெற்ற பின்னர், ஆனால் சொல்லப்பட்ட மூன்று மாத காலப்பகுதிக்குள், சான்றிதழை ஒப்படைக்கத் தவறியமை தொடர்பில் இப்பாகத்தின்கீழ் காப்புறுதியாளர் நடவடிக்கைகளைத் தொடர்ந்திருப்பின்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

46. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"இப்பாகத்தின் நோக்கங்களுக்காக மோட்டார் வாகனங்களை வகைப்படுத்தல்.

122. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, மோட்டார் வாகனங்கள் பின்வரும் வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனவெனக் கருதப்படுதல் வேண்டும், அதாவது :—

(அ) மோட்டார் கோச்சுகள்,

(ஆ) லொறிகளும் அத்துடன், மோட்டார் நோயாளர் வண்டிகளும், மோட்டார்ப் பிரேத வண்டிகளும்,

(இ) மோட்டார் முச்சக்கர வான்கள்,

(ஈ) நீராவியில் இயங்கும் மோட்டார் வாகனங்கள்,

(உ) மோட்டார்க் கார்கள்,

(ஊ) மோட்டார் முச்சக்கர வண்டிகள்,

(எ) மோட்டார் சைக்கிள்கள்,

(ஏ) பிணியாளர் வண்டிகள்,

(ஐ) கை உழவியந்திரங்கள்,

(ஒ) கம வாகனங்கள்,

(ஓ) இதனகத்துமுன்னர் குறித்துரைக்கப்படாத மோட்டார் வாகனங்களும் இதனகத்து முன்னர் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் துணைப் பிரிவுகளும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

47. முதன்மைச் சட்டவாக்கத்தின் 123 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"சாரதி உரிமம் இல்லாமல் வாகனஞ் செலுத்துவதற்குள்ள தடை.

123. (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக—

(அ) எவையேனும் அவ்வகுப்பினவான மோட்டார் வாகனங்களுக்கான வலுவுள்ள செல்லுபடியான சாரதி உரிமம் ஒன்றை வைத்திருப்பவராக இருந்தாலொழிய, ஆளெவரும், ஒரு பெருவழியில் ஏதேனும் வகுப்பினதான மோட்டார் வாகனமொன்றைச் செலுத்துதலாகாது ; அத்துடன்

(ஆ) ஆளெவரும், பெருவழியொன்றில் ஏதேனும் வகுப்பினதான மோட்டார் வாகனத்தைச் செலுத்துவதற்குத் தொழிலுக்கமர்த்தப்படும் அல்லது அனுமதிக்கப்படும் வேறெவரேனும் ஆள் அவ்வகுப்பினதான மோட்டார் வாகனத்துக்கான வலுவுடைய செல்லுபடியான சாரதி உரிமம் ஒன்றை வைத்திருப்பவராக இருந்தாலொழிய, அவ்வகுப்பினதான மோட்டார் வாகனத்தைச் செலுத்துவதற்கு அவரைத் தொழிலுக்கமர்த்தலோ அனுமதித்தலோ ஆகாது.

(2) ஒரு மோட்டார் வாகனத்தைச் செலுத்துவதற்குப் பயிலும் அல்லது செலுத்துவதற்கு அனுமதிக்கப்படும் நோக்கத்துக்காக, ஆளெவரும் ஒரு சாரதி உரிமத்தை வைத்திருப்பவராக இல்லாதிருப்பினும்—

(அ) அவர் பதினெட்டு வயதைப் பூர்த்திசெய்துள்ளவிடத்து, மோட்டார் முச்சக்கர வான், ஒரு

மோட்டார் கோச்சு, அல்லது லொறி தவிர்ந்த மோட்டார் வாகனம் எதனையும் ஒரு பெருவழியில் செலுத்தலாம் ;

(ஆ) அவர் இருபத்தொரு வயதைப் பூர்த்திசெய்துள்ளவிடத்து, ஏதேனும் மோட்டார் முச்சக்கர வானே, மோட்டார் கோச்சை, அல்லது லொறியை ஒரு பெருவழியில் செலுத்தலாம் :

ஆயின், எப்பொழுதும்—

(i) விடயத்துக்கேற்றவாறு செலுத்துவதற்குப் பயிலும் ஆளேயும் அவருக்குப் போதிக்கும் ஆளேயும் தவிர்ந்த ஆள் எவரும், அத்துடன் பண்டங்கள் எவையும், அத்தகைய ஏதேனும் மோட்டார் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்படுதலாகாது ;

(ii) அவருக்குப் போதிக்கும் நோக்கத்துக்காக அவ்வகுப்பினவான மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியான வலுவுடைய சாரதி உரிமம் ஒன்றை வைத்திருப்பவர் அவரோடு கூடச் செல்லுதல் வேண்டும் என்பதோடு, அவருக்கு அருகாமையில் அமர்ந்திருத்தலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இதன்கண் உள்ள தேவைப்பாடுகள் மோட்டார் சைக்கிள்களுக்கும் உழவியந்திரங்களுக்கும் ஏற்புடையனவாகா ;

(iii) வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள அடையாளம் காட்டும் தகடு ஒவ்வொன்றின் மேலும், அத்தகைய அடையாளங் காட்டும் தகடு எதனையும் மறைத்துத் தடுக்காத அத்தகைய முறையில், சிவப்பு நிறத்தில் எழுதப்பட்ட "L" என்னும் எழுத்தைக் கொண்டிருக்கும் ஒரு வெள்ளைப் பலகை அல்லது தகடு இருத்தல் வேண்டும் ; அத்தகைய எழுத்தின் பரிமாணங்கள், அடையாளங் காட்டும் தகட்டிலுள்ள இனம் பிரித்துக் காட்டும் இலக்கத்தின் பாகமாக அமையும் ஏதேனும் எழுத்தின் நேரொத்த பரிமாணங்களின் ஆகக் குறைந்தது இரு மடங்காகவாவது இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவைத் திருத்துதல்.

48. முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) நூற்று இருப்பத்திரண்டாம் பிரிவின் (அ) முதல் (இ) வரையிலான பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் வகுப்பினதான மோட்டார் வாகனத்துக்கு அல்லது ஒவ்வொரு வகுப்பினவையுமான மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியான சாரதி உரிமம் ஒன்றைப் பெறுவதற்கான ஒவ்வொரு விண்ணப்பகாரரும்,—

(அ) அவர் இருபத்தொரு வயதைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும் ;

(ஆ) ஒரு மோட்டார் வாகனத்தின் பொறிமுறைபற்றிப் போதிய செயன்முறை அறிவு உடையவராகவுள்ளார் என்றும் ;

(இ) விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கல்வித் தகைமைகளை அல்லது வேறு தகைமைகளை உடையவராகவுள்ளார் என்றும் ;

(ஈ) இப்பாகத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட வகுப்பினவான வாகனங்களைச் செலுத்துவதற்குத் தக்க உடனிலையில் உள்ளார் என்றும், அவரது விண்ணப்பம் மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு மருத்துவத் தொழிலரிடமிருந்து பெற்ற ஒரு சான்றிதழால் ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது என்றும் ; அத்துடன்

(உ) விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய உடனிலைத் தேவைப்பாடுகளை அவர் கொண்டுள்ளார் என்றும்,

ஆணையாளர் திருப்திப்படுமளவிற்கு அவர் எண்பித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவைத் திருத்துதல்.

49. முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவு அந்தப் பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(3) குற்றத்தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட பதிவு செய்யப்பட்ட கேடி ஆன எவரேனும் ஆள் தொடர்பில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் ஏதேனும் அறிக்கையை ஆய்ந்த பின்னர், அத்தகைய ஆள், 122 ஆம் பிரிவின் (அ) முதல் (இ) வரையிலான பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் வகுப்பினதான மோட்டார் வாகனத்துக்கு அல்லது ஒவ்வொரு வகுப்பினவையுமான மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியான சாரதி உரிமம் வைத்திருப்பவராகவிருப்பதற்குத் தகுந்தவரும் பொருத்தமானவருமான ஆள் என ஆணையாளர் திருப்தியடைந்தாலொழிய, அத்தகைய ஆளுக்கு அத்தகைய உரிமம் எதுவும் வழங்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

50. முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"சாரதி உரிமங்களின் காலநீட்சி.

126. (1) இரண்டாம், மூன்றும் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட சாரதி உரிமம் ஒவ்வொன்றும், விதித்துரைக்கப்படக் கூடிய அத்தகைய காலப்பகுதிக்குச் செல்லுபடியானதாதல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்படக்

கூடிய அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவதன் மேல், அத்தகைய ஒவ்வொரு சாரதி உரிமமும், அத்தகைய காலப்பகுதிக்கு அல்லது காலப்பகுதிகளுக்குப் புதுப்பிக்கவும்படலாம்.

(2) இப்பாகத்தின் அடுத்துவரும் ஏற்பாடுகளின் கீழ் இல்லாதாக்கப்பட்ட சாரதி உரிமமொன்று அது இல்லாதாக்கப்பட்ட தேதியன்று பயனுடையதாக இல்லாது ஒழிதல் வேண்டும்.

(3) இப்பாகத்தின் அடுத்துவரும் ஏற்பாடுகளின்கீழ் இடைநிறுத்தப்பட்ட சாரதி உரிமம் ஒன்று, அவ்வாறு இடைநிறுத்தி வைக்கப்பட்ட காலப்பகுதியின்போது பயனுடையதாக இருத்தலாகாது.".

51. முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவைத் திருத்துதல்.

52. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"மோட்டார் கோச்சுகள், லொறிகள், மோட்டார் முச்சக்கர வான்கள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கான உரிமங்கள் சம்பந்தமான சிறப்பு ஏற்பாடுகள்.

129. (1) ஆணையாளர் கைப்பட உரிமத்தின் மேல் செய்யப்பட்ட பதிவீட்டின் மூலம் விடயத்துக்கேற்ப, மோட்டார் கோச்சுகள், லொறிகள் அல்லது மோட்டார் முச்சக்கர வான்கள் ஆகியவற்றிற்கு அவ்வுரிமம் செல்லுபடியுடையதெனக் கூறப்பட்டாலன்றி, அச்சாரதி உரிமம் எதுவும், மோட்டார் கோச்சு, லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் ஆகியவற்றிற்குச் செல்லுபடியுடையதாகாது.

(2) விடயத்துக்கேற்ப, உரிமத்திற்கான விண்ணப்பகாரர், அல்லது உரிமத்தினை வைத்திருப்பவர் இருபத்தொரு வயதினை அடைந்துள்ளார் என ஆணையாளர் திருப்திப்பட்டாலன்றி, (1) ஆம் உட்பிரிவின்கீழ், மோட்டார் கோச்சுகளுக்கு, லொறிகளுக்கு அல்லது மோட்டார் முச்சக்கர வான்களுக்கான சாரதி உரிமம் எதுவும் செல்லுபடியுடையதெனக் கூறப்படுதலாகாது.

(3) சாரதி உரிமம் ஒன்று பெற விண்ணப்பித்தவர் அல்லது சாரதி உரிமம் ஒன்றினை வைத்திருப்பவர், அவர் வழமையாகத் தான்தோன்றித்தனமாக அல்லது ஒழுங்கற்ற முறையில் நடக்கின்ற காரணத்தால் அல்லது வழமையாகக் குடிபோதையில் இருக்கின்ற காரணத்தால் அல்லது தொற்றுநோய்த் தன்மைத்தான அல்லது தொடுநோய்த் தன்மைத்தான நோய் எதனும் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அல்லது அத்தகைய உரிமத்தினை வைத்திருப்பவர் குற்றத்தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளாகப்

பதிவு செய்யப்பட்ட கேடி ஒருவர் என்ற காரணத்தால் மோட்டார் கோச்சு, லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் எதனையும் செலுத்துவதற்குத் தகுதியில்லாதவர் என ஆணையாளர் திருப்திப்படுமிடத்து—

(அ) ஆணையாளர், உரிமமானது மோட்டார் கோச்சுகள், லொறிகள் அல்லது மோட்டார் முச்சக்கர வான்கள் ஆகியவற்றிற்குச் செல்லுபடியானதெனக் கூறப்பட வேண்டுமென்ற விண்ணப்பத்தினை மறுக்கும் கட்டளையினை ஆக்கலாம்; அல்லது

(ஆ) உரிமமானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட பதிவீட்டினால் மோட்டார் கோச்சுகள், லொறிகள் அல்லது மோட்டார் முச்சக்கர வான்கள் ஆகியவற்றிற்குச் செல்லுபடியானதெனக் கூறப்பட்டுள்ளவிடத்து, ஆணையாளர் அத்தகைய பதிவீடானது இல்லாதாக்கப்படவேண்டுமென அல்லது இடைநிறுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம் என்பதுடன், அதற்கிணங்க, அத்தகைய பதிவீடானது, ஆணையாளர் தமது கைப்பட உரிமத்தின்மேல் புறக்குறிப்பிடுவதன்மூலம் இல்லாதாக்கப்படலாம் அல்லது இடைநிறுத்தப்படலாம்.

(4) சாரதி உரிமம் ஒன்று இல்லாதாக்கப்படுமிடத்து, அல்லது இடைநிறுத்தப்படுமிடத்து, அல்லது சாரதி உரிமம் ஒன்றின் செல்லுபடி மட்டுப்படுத்தப்படுமிடத்து, சாரதி உரிமத்தினை வைத்திருப்பவர், உடனடியாக அத்தகைய உரிமத்தினை அவசியமான நடவடிக்கைக்கென ஆணையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(5) குறிப்பிட்ட ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த மோட்டார் வாகனம் எதற்கும் செல்லுபடியான சாரதி உரிமம் ஒன்றினை வைத்திருப்பவரை அந்த வகுப்பைச் சேர்ந்த வாகனத்தைச் செலுத்துவதற்குத் தகுதி இல்லாதவரெனக் காட்டும் ஏதேனும் தவறுக்கு எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் நீதிமன்றம் அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்குமிடத்து, நீதிமன்றமானது, அந்தத் தவறுக்கென அது சட்டமுறையாக விதிக்கக்கூடிய வேறு ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, கட்டளையிடப்பட்ட தேதியிலிருந்து ஐந்து நாட் காலப்பகுதி முடிவடையுமுன்னர் நீதிமன்றத்தில் உரிமத்தினை காண்பிக்கும்படி கட்டளையிட்டு அந்த உரிமத்தினை இல்லாதாக்கலாம்:

ஆயின், அத்தகைய உரிமம் வைத்திருப்பவருக்குக் குற்றத்தீர்ப்பளித்ததன்பின்னர், அத்தகைய உரிமம் வைத்திருப்பவர் அந்த வகுப்பைச் சேர்ந்த வாகனம்

ஒன்றினைச் செலுத்துவதற்கான தகுதி உள்ளவரா என்பது பற்றி நீதிமன்றம் கருத்திற்கொள்ளாதிருக்கும் ஏதேனும் விடயத்தில், ஆணையாளர் அல்லது பொலிசுச் சாசன்டு தரத்திலுள்ள அல்லது அதற்கு மேலான தரத்திலுள்ள பொலிசு அலுவலர் ஒருவர், எந்நேரத்திலாயினும், உரிமம் வைத்திருப்பவர் அந்த வகுப்பைச் சேர்ந்த வாகனம் ஒன்றினைச் செலுத்துவதற்குத் தகுதி இல்லாதவரென நீதிமன்றத்துக்கு முறையீடு செய்யலாம் என்பதுடன், நீதிமன்றமானது, பொருத்தமானதெனக் கருதினால், உரிமத்தினை இல்லாதாக்கலாம் :

ஆயின், மேலும், அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுக, உரிமம் காண்பிக்கப்படாதவிடத்து, நீதிமன்றமானது உரிமத்தினை நீதிமன்றத்தில் காண்பிக்கும் வரையிலும் உரிமம் வைத்திருப்பவர் ஏதேனும் மோட்டார் வாகனத்தினைச் செலுத்துவதற்கு அவரைத் தகைமையற்றவராக்கும் கட்டளையினை ஆக்கலாம்.

(6) ஏதேனும் சாரதி உரிமத்தின்மீது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்டதான ஏதேனும் பதிவீடு, (3) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (5) ஆம் உட்பிரிவின்கீழ் இல்லாதாக்கப்படுமிடத்து, ஆணையாளர், அவ்வாறு இல்லாதாக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைந்தபின்னர் எந்நேரத்திலாயினும் 128 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அந்த உரிமத்தை வைத்திருப்பவரால் விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல் அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அந்த உரிமத்தின்மீது புதிய ஒரு பதிவீட்டினைச் செய்யலாம்.".

53. முதன்மைச் சட்டவாக்கத்தின் 130 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 130 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சாரதி உரிமம் ஒன்றினை வைத்திருப்பவரான ஆளெவரும், விடயத்துக்கேற்றவாறு அந்த உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் அல்லாத வேறு ஏதேனும் மோட்டார் வாகனத்தை அல்லது அந்த உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட எடையிலான அல்லது விவரணத்திலான ஒரு மோட்டார் வாகனம் அல்லாத வேறு ஏதேனும் மோட்டார் வாகனத்தை பெருவழியொன்றில் செலுத்துதல் ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், பிணியாளர் வண்டிகள் தவிர்ந்த வேறு ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த மோட்டார் வாகனங்களுக்கு வலுவுள்ளதென வெளிப்படையாகக் காட்டப்பட்ட சாரதி உரிமமொன்றை வைத்திருக்கும் எவரேனும் ஆள், கை உழவியந்திரம் ஒன்றைச் செலுத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 133 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

54. முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 133அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" பிரதிகூலப் புள்ளிகள்.

133அ. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிலுள்ள I ஆம் நிரையிற் தரப்பட்டுள்ள ஏதேனும் தவறுக்காக சாரதி உரிமமொன்றை வைத்திருப்பவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, அத்தகைய உரிமம் வைத்திருப்பவரின் சாரதி உரிமத்தை நீதிமன்றமானது இடைநிறுத்தாமலோ அல்லது இல்லாததாக்காமலோ விடுமிடத்து நீதிமன்றமானது அத்தகைய சாரதி உரிமத்தை வைத்திருப்பவர் எந்தத் தவறு தொடர்பாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாரோ அத்தவறிற்கு நேரொத்ததாக அட்டவணையின் II ஆம் நிரையில் தரப்பட்டுள்ள அத்தகைய எண்ணிக்கையினதான பிரதிகூலப் புள்ளிகளை—

(அ) அத்தகைய சாரதி உரிமம் கிடைக்கக்கூடியதாகவிருப்பின், அத்தகைய உரிமம் வைத்திருப்பவரின் சாரதி உரிமத்தில் பதியலாம் அல்லது பதியும்படி செய்விக்கலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய சாரதி உரிமம் வைத்திருப்பவரின் சாரதி உரிமமானது கிடைக்கப்பெறாவிடின் அத்தகைய உரிமம் வைத்திருப்பவரின் சாரதி உரிமத்தின் மீது பதியும்படி ஆணையாளருக்குப் பணிக்கலாம்.

(2) சாரதி உரிமம் ஒன்றை வைத்திருப்பவர், விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக ஆணையாளரால் அத்தகைய சாரதி உரிமம் இல்லாதாக்கப்படுவதற்கு அல்லது இடைநிறுத்தப்படுவதற்கு அமைவானதாக இருக்கும் வகையில் விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினதான பிரதிகூலப் புள்ளிகளை ஒன்றுதிரட்டுமிடத்து ஆணையாளர் விடயத்திற்கேற்றற்போல சாரதி உரிமத்தை இல்லாதாக்குதல் அல்லது இடைநிறுத்தல் வேண்டும்.

(3) சாரதி உரிமமொதனிலும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் நீதிமன்றம் பிரதிகூலப் புள்ளிகளைப் பதியுமிடத்து, உரிமத்தின்மீது செய்யப்பட்ட பதிவேட்டின் ஒரு பிரதியை ஆணையாளர் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சாரதி உரிமம் ஒன்றினை இடைநிறுத்தியதன்மேல் அல்லது இல்லாதாக்கியதன்மேல் உடனடியாக, ஒன்றுதிரண்ட பிரதிகூலப் புள்ளிகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்." .

55. முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 134 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

" (2) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட சாரதிப் பரீட்சையானது கட்டணம் எதுவுமின்றி நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், சான்றிதழானது கட்டணமின்றி வழங்கப்படுதலும் வேண்டும். " ; அத்துடன்

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும் :—

" சாரதி உரிமங்களை
இல்லாதாக்குதல்."

56. முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 135 ஆம் பிரிவைத் திருத்துதல்.

" (5) ஓர் அனுமதிச்சீட்டு வழங்கப்பட்ட எவரேனும் ஆளிடம் சாரதி உரிமம் ஒன்று இல்லையென்பது எப்படியிருப்பினும், (4) ஆம் உட்பிரிவின்கீழ் அந்த ஆளுக்கு வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டு, பொலிசு அலுவலரினால் அந்த அனுமதிச்சீட்டில் குறித்துரைக்கப்படக் கூடியதும் அறுபது நாட்களுக்கு மேற்படாததுமான காலத்துக்கும், அத்துடன் அந்த ஆள் எந்த நீதிமன்றத்தின் முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றாரோ அந்த நீதிமன்றம் அந்த அனுமதிச்சீட்டில் செய்யப்பட்ட புறக்குறிப்பின்மூலம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய மேலதிக காலத்துக்கும் அல்லது காலங்களுக்கும் அத்தகைய ஆள் மோட்டார் வாகனமொன்றைச் செலுத்துவதற்குப் போதிய அதிகாரமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

57. முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 ஆம் பிரிவைத் திருத்துதல்.

" (5) சாரதி உரிமம் ஒன்றினை வைத்திருப்பவர், மோட்டார் வாகனம் ஒன்றினைச் செலுத்துதல் தொடர்பாகப் புரியப்பட்ட இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்கு அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்கு ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அந்த நீதிமன்றமானது, குற்றத்தீர்ப்பின் விவரங்களையும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை பற்றிய விவரங்களையும், அத்தகைய புறக்குறிப்புத் தேதியையும் உரிமத்தின்மீது புறக்குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய புறக்குறிப்பு ஒவ்வொன்றும் நீதிமன்ற நீதிபதியால் அல்லது நீதிவானால் முதலெழுத்தொப்பமிடப்படுதலும் வேண்டும், அல்லது மேல்நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றத்தீர்ப்பளிக்கும் விடயத்தில், அந்த நீதிமன்றத்தின் பதிவாளரால் முதலெழுத்தொப்பமிடப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவைத் திருத்துதல்.

58. முதன்மைச் சட்டவாக்கத்தின் 137 ஆம் பிரிவு, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(6) அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தைப் பெற்றமை பற்றி நீதிமன்றமானது ஆணையாளருக்கும் பொலிசாருக்கும் அறிவித்தல் வேண்டும் என்பதுடன், அவ்விண்ணப்பம் அனுமதிக்கப்படுவதற்கெதிராகத் தம் பக்க வழக்கை உரைப்பதற்கும் முறையீடுகள் செய்வதற்கும், அத்துடன் அவ்வாறு செய்யப்பட்ட ஏதேனும் முறையீட்டுக்கு ஆதாரமாகச் சான்று காட்டுவதற்கும் ஆன சந்தருப்பமொன்றை ஆணையாளருக்கும் பொலிசாருக்கும் அளித்தலும் வேண்டும். இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காகப் பொலிசாரின்மீதான அறிவித்தல், அந்த நீதிமன்றம் எந்த இடப்பரப்பில் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பின் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளரிடம் சேர்ப்பிக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

59. முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"இடைநிறுத்தற் கட்டளை, இல்லாதாக்கற் கட்டளை அல்லது தகைமையினக் கட்டளை என்பவற்றுக்கு எதிரான மேன்முறையீடுகள்.

139. எவரேனும் ஆளினால் வைத்திருக்கப்படும் சாரதி உரிமம் ஒன்றினை இடைநிறுத்தி அல்லது இல்லாதாக்கி அல்லது சாரதி உரிமம் ஒன்றைப் பெறுவதற்கு அவரைத் தகைமையற்றவராக வெளிப்படுத்தி, மேன்முறையீட்டு நீதிமன்றமல்லாத வேறு ஏதேனும் நீதிமன்றத்தால் இப்பாகத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையுடன் திருப்திப்படாத அவ்வாள், நீதிமன்றத்தால் வேறு ஏதேனும் தண்டனை விதிக்கப்பட்டிருப்பினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, அக்கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்; அத்துடன் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் XXVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையவல்லாதனவாகவிராத இடத்து, இப்பிரிவின் கீழான ஒவ்வொரு மேன்முறையீட்டுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

60. முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"வேக எல்லைகள்.

140. (1) மோட்டார் கோச்சு ஒன்று அல்லது லொறி ஒன்று—

(அ) நகர இடப்பரப்பொன்றினுள் உள்ள பெருவழி எதனிலும் மணி ஒன்றுக்கு முப்பத்திரண்டு கிலோமீற்றர் வேகத்திற்கும் அதிகமான வேகத்தில், அல்லது

(ஆ) நகர இடப்பரப்பு ஒன்றுக்கு வெளியேயுள்ள இடப்பரப்பிலுள்ள பெருவழி எதனிலும் மணி ஒன்றுக்கு ஐம்பத்தாறு கிலோமீற்றர் வேகத்திற்கும் அதிகமான வேகத்தில்,

செலுத்தப்படுதலாகாது.

(2) கம வாகனம் ஒன்று ஏதேனும் பெருவழியில் மணி ஒன்றுக்கு இருபத்துநான்கு கிலோமீற்றர் வேகத்திற்கும் அதிகமான வேகத்தில் செலுத்தப்படுதலாகாது.

(3) மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்று அல்லது மோட்டார் முச்சக்கர வான் ஒன்று, பெருவழி எதனிலும் மணி ஒன்றுக்கு முப்பத்திரண்டு கிலோமீற்றர் வேகத்திற்கும் அதிகமான வேகத்தில் செலுத்தப்படுதலாகாது.

(4) உட்பிரிவுகள் (1), (2), (3) ஆகியவை ஏற்புடையனவாகாத ஏதேனும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த மோட்டார் வாகனம் ஒன்று—

(அ) நகர இடப்பரப்பொன்றினுள் உள்ள பெருவழி எதனிலும், மணி ஒன்றுக்கு ஐம்பத்தாறு கிலோமீற்றர் வேகத்திற்கும் அதிகமான வேகத்தில், அல்லது

(ஆ) நகர இடப்பரப்பு ஒன்றுக்கு வெளியேயுள்ள இடப்பரப்பிலுள்ள பெருவழி எதனிலும் மணி ஒன்றுக்கு எழுபத்திரண்டு கிலோமீற்றர் வேகத்திற்கும் அதிகமான வேகத்தில்,

செலுத்தப்படுதலாகாது.

மோட்டார் வாகனங்களின்மீது வேக எல்லை ஒன்றினை விதிப்பதான நியதிச்சட்டமுறையான ஏற்பாடு எதுவும், மோட்டார் வாகனம் அந்தச் சந்தருப்பத்தில் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றதோ அந்த ஏற்பாடுகளை அனுசரிப்பது அந்தப் பயன்பாட்டைத் தடைசெய்யக்கூடியதாக இருப்பின், அவ்வாகனம் நெருப்பணைக்கும் படையின், நோயாளர் வண்டியின், அல்லது பொலிசாரின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும்பொழுது ஏற்புடையதாதலாகாது.".

**61.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 141 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 141 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) எல்லாப் பெருவழிகள் தொடர்பிலும், அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடப்பரப்பிலுள்ள பெருவழிகள் தொடர்பிலும், அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பெரு

வழிகள் தொடர்பிலும் அல்லது பெருவழி ஒன்றன் பாகம் தொடர்பிலும், 140 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள வேக மட்டுப் பாடுகளிலும் பார்க்கக் கடுமையான அல்லது அவற்றுக் கதிகமான வேக மட்டுப்பாடுகளை எல்லா மோட்டார் வாகனங் களுக்கும், அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வகுப் பினைச் சேர்ந்த அல்லது விவரணத்தினைச் சேர்ந்த எல்லா மோட்டார் வாகனங்களுக்கும், அல்லது குறித்துரைக்கப்பட்ட எவையேனும் மோட்டார் வாகனங்களுக்கும் விதித்து ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம்." ; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாக பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன்மூலமும் :—

"140 ஆம் பிரிவில்
தரப்பட்டுள்ள வேக
மட்டுப்பாடுகளினின்றும்
வேறுபட்ட வேக
மட்டுப்பாடுகள் பற்றிய
ஒழுங்குவிதிகள்.".

62. முதன்மைச் சட்டவாக்கத்தின் 144 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத் தின் 144 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"கொழும்புக்கு வெளியேயுள்ள பெருவழிகளில் மோட்டார் வாகனங்களை மட்டுப் படுத்துதல்.

144. (1) (அ) கொழும்புக்கு வெளியேயுள்ள குறித் துரைக்கப்பட்ட ஏதேனும் பெருவழியை—

(i) மோட்டார் கோச்சுகள் ; அல்லது

(ii) சுமை ஒரு நிலையில் ஒன்றரை மெற்றிக் தொன்னுக்கு அதிகமான பாரமுள்ள லொறிகள் ; அல்லது

(iii) தொடுக்கப்பட்ட வாகனங்கள், தொட ரூர்திகள் அல்லது ஆறு சக்கர மோட்டார் வாகனங்கள் ; அல்லது

(iv) சுமை ஒரு நிலையில் இரண்டேகால் மெற் றிக் தொன்னுக்கு அதிகமான பார முள்ளவையும், வேறு ஏதேனும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்தவையுமான மோட்டார் வாக னங்கள்,

பயன்படுத்துவதற்கு உகந்ததென வெளிப்படுத்துகின் றவையும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய மோட்டார் வாகனங்கள் அத்தகை பெருவழியில் எந்த நிபந்தனைகளுக்கு அல்லது மட்டுப்பாடுகளுக்கு அமைவாகப் பயன்படுத்தப்படலாமோ அத்தகைய நிபந்தனைகளை அல்லது மட்டுப்பாடுகளை விதந்துரைக்கின்றவையும்,

ஆன ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டதான ஏதேனும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த மோட்டார் வாகனம் எதுவும் கொழும்புக்கு வெளியே யுள்ள பெருவழி எதனிலும், அத்தகைய பெருவழி, அந்த வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த மோட்டார் வாகனங்களினுல் அல்லது அந்த ஒழுங்கு விதியினுல் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு அல்லது மட்டுப்பாடுகளுக்கு இணங்கவன்றி வேறுவகையாகப் பயன்படுத்தப்படுவ தற்குப் பொருத்தமானதென அந்த உட்பிரிவின்கீழான ஒழுங்குவிதிகளினுல் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலொழிய, பயன்படுத்தப்படுதலாகாது :

ஆயின், எவ்வாறுயினும், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வகுப்பை அல்லது விவரணத்தைச் சேர்ந்த மோட்டார் வாகனம் எதுவும், பெருவழிகள் திணைக்களத்தின் அல்லது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் பொறுப்பிலுள்ளதும், அத்தகைய வாகனுதிகளுக்குப் பொருத்தமானதென அந்த உட்பிரிவின் கீழான ஒழுங்குவிதியினுல் வெளிப்படுத்தப்படாததும், கொழும்புக்கு வெளியே உள்ளதுமான ஏதேனும் பெருவழியில், அத்தகைய வாகனம் அத்தகைய பெருவழியில் பயன்படுத்தப்படுவது—

(அ) இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான பண்டங்களைக் கொண்டுசெல்லும் நோக்கத்திற்காக அல்லது இலங்கை அரசாங்கத்தின் பிரத்தியேகப் பயன்பாட்டிற்கு முன்னப்பட்ட பண்டங்களைக் கொண்டுசெல்லும் நோக்கத்திற்காக ;

(ஆ) அத்தகைய பெருவழி ஒரே அணுகுவழியாக உள்ள எவையேனும் வளவுகளுக்கு அல்லது அவ்வளவுகளிலிருந்து தளவாடங்களை அல்லது வீட்டுப்பாவனைப் பண்டங்களைக் கொண்டு செல்லும் நோக்கத்திற்காக ;

(இ) அத்தகைய வாகனுதிகளுக்குப் பொருத்தமானதென ஒழுங்குவிதியினுல் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பெருவழியைச் சென்றடையும் நோக்கத்திற்காக ;

(ஈ) யாத்திரைக்குரிய இடங்களைச் சென்றடையும் அல்லது அந்த இடங்களிலிருந்து திரும்பி வரும் நோக்கத்திற்காக ; அல்லது

(உ) விதித்துரைக்கப்படக்கூடியவாறன அத்தகைய வேறு நோக்கத்திற்காக,

அத்தகைய பயன்பாடானது அவசியமானதென்ற ஏதுவின்மீது, விடயத்திற்கேற்ப பெருவழிகள் பணிப்பாளரால் அல்லது நீர்ப்பாசனப் பணிப்பாளரால் அல்லது உள்ளூரதிகார சபையின் மாநகர முதல்வரால் அல்லது தவிசாளரால், அல்லது அந்தப் பணிப்பாளரால், மாநகர முதல்வரால் அல்லது தவிசாளரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டு ஒன்றினுல் அப்பயன்பாட்டுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்குமாயின், பயன்படுத்தப்படலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 146 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

63. முதன்மைச் சட்டவாக்கத்தின் 146 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 148 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

64. முதன்மைச் சட்டவாக்கத்தின் 148 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) ஓட்டப்படும் மோட்டார் வாகனமொன்று அத்தகைய வாகனம் வேறு வாகனத்தை முந்திச் செல்லும்போது அல்லது வலது பக்கம் திரும்பிச் செல்லும்போது தவிர, வீதியின் இடதுபக்கத்தில் அல்லது அண்மை ஓரத்தில் செல்லுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாருயினும், பிரித்தொதுக்கப்பட்டுள்ள மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சமாந்தரமான ஒழுங்கைகளில் ஒரே திசையில் வாகனம் செல்லுதலை அனுமதிக்கும் பெருவழியொன்றில், வீதியின் மத்திக்கு மிகக் கிட்டிய ஒழுங்கை தவிர்ந்த இரண்டு சமாந்தர ஒழுங்கைகள் வழியே ஒரே திசையில் வாகனங்கள் ஓட்டப்படலாம் :

ஆயின், மேலும், சமாந்தரமான ஒழுங்கைகளில் ஓட்டப்படும் வாகனங்கள் மற்ற வாகனுநிகளுக்குத் தடையை உருவாக்கும் அத்தகைய ஒரு விதத்தில், ஒரு சமாந்தர ஒழுங்கையிலிருந்து மற்பதற்கு ஓட்டப்படுத லாகாது." ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(4) வேறு வாகனுநிகளை முந்திச்செல்லும் மோட்டார் வாகனமொன்று, அத்தகைய வேறு வாகனுநிகளின் வலது ஓரப்பக்கத்தில் செல்லுதல் வேண்டும் :


ஆயின், எவ்வாறாயினும், மோட்டார் வாகனமொன்று, செலுத்தப்படும் வாகனமொன்றை அல்லது ஓட்டிச் செல்லப்படும் அல்லது செலுத்தப்படும் விலங்கொன்றை சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் அந்த நேரத்தில் பாதுகாப்பான பக்கமென நியாயமாகத் தோன்றும் பக்கத்தில் தாண்டிச் செல்லலாம் அல்லது முந்திச் செல்லலாம் ; அத்துடன்

(3) அப்பிரிவின் (13) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(13) ஏதேனும் பெருவழியிலிருந்து வேறு ஏதேனும் பெருவழிக்குள் வலதுபக்கமாகத் திரும்பும் மோட்டார் வாகனமொன்று, முதலாவதாக, வீதியின் மத்திக்கு கூடிய அளவு சமாந்தரமாகச் செலுத்தப்படுவதன் மூலம், ஓட்டப்படுவதன்மூலம் அல்லது தள்ளப்படுவதன் மூலம் அவ்வாறு திரும்புவதற்கான நிலையில் வைக்கப்படுதல் வேண்டும். அதே நேரத்தில் சாரதி வலது பக்கம் திரும்புவதற்குத் தமக்குள்ள முன்னத்தைப் பற்றிச் சைகை செய்தல் வேண்டும். இரண்டு பெருவழிகளும் ஊடறுக்கும் இடத்தின் மத்திக்கு அண்மையில் இருக்க வேண்டிய திரும்பும் இடத்தை வந்தடைவதன் மேல், முன்னுக்கு வரும் வாகனங்கள் தமது பாதையில் இல்லையென்பதை நிச்சயித்தபின்னர், அவர் மற்றைய பெருவழிக்குள் வலது பக்கமாகத் திரும்பி அவ்வாறு முழுமையாகச் செல்வதற்கு முற்படுதல் வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட ஊடறுக்கும் இடத்தில் ஏதேனும் கட்டமைப்பு இருக்குமிடத்து, பொலிசு அலுவலர் ஒருவரினால் வேறுவிதமாகக் கட்டளையிடப்பட்டா

லன்றி அத்தகைய கட்டமைப்பை மோட்டார் வாகனத்தின் வலதுபக்கத்தில் வைத்துக்கொண்டு அவ்வாறு திருப்புதலை முடித்தல் வேண்டும்.




முதன்மைச் சட்டவாக்கத்தின் 150 ஆம் பிரிவைத் திருத்துதல்.

65. முதன்மைச் சட்டவாக்கத்தின் 150 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(2) இப்பிரிவின்கீழ் வெளிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு பிரதான விதியையும் சுட்டிக்காட்டும் நோக்கத்திற்காக, விதித்துரைக்கப்படக் கூடியதான அத்தகைய படிவத்திலான எச்சரிக்கை அறிவித்தல்கள், பெருவழிக்குப் பொறுப்பாகவுள்ள அதிகார சபையினால் ஊடறுக்கும் பெருவழிகளில் உள்ள பொருத்தமான இடங்களில் வெளிக்காட்டி வைக்கப்பட்டுப் பேணப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 152 ஆம் பிரிவைத் திருத்தல்.

66. முதன்மைச் சட்டவாக்கத்தின் 152 ஆம் பிரிவானது, அப்பிரிவின் கடைசியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(4) மோட்டார் வாகனமொன்றின் சாரதி அல்லது ஓட்டுநர் நெம்புகோல்களை மாற்றும்பொழுதும் அல்லது அவசியமான கைச்சைகைகளைக் கொடுக்கும் பொழுதும் அல்லது அவசியமான வாகனக் கட்டுப்பாட்டைக் கையாளும்பொழுதும் தவிர, இரண்டு கைகளையும் தொடர்ச்சியாக விடயத்திற்கேற்றவாறு, செலுத்து சக்கரத்தில் அல்லது கைப்பிடித்தண்டில் வைத்திருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

67. முதன்மைச் சட்டவாக்கத்தின் 153 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"சாரதிகளினால் கொடுக்கப்படும் சைகைகள்.

153. (1) மோட்டார் வாகனங்களின் சாரதிகளினால் கொடுக்கப்படும் சைகைகள்—

(அ) பகலிலும் இரவிலும் ஒளியூட்டப்பட்டிருக்க வேண்டியதான மின் பொறித்தொகுதி உபாயமொன்றினால் இயக்கப்படுதல் வேண்டும்: அத்

தகைய ஒளியூட்டுதல் இடையிடையே விட்டு விட்டு ஒளிகாட்டுவதாக இருத்தல் வேண்டு மென்பதோடு, வாகனத்தின் முற்பக்கத்திலி ருந்தும் பிற்பக்கத்திலிருந்தும் தெளிவாகத் தெரியக்கூடியதாக இருத்தலும் வேண்டும். இச்சைகை வெளிச்சங்களின் நிறம் அம்பர் ஆதல் வேண்டும் அல்லது ஆணையாளரின் வெளிப்படையான அதிகாரத்தின்மூலம் வெள்ளையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) முன் செல்வதைக் காட்டுவதற்கு முன்னப்படும் பொழுது, முன் விளக்குகளை எரிப்பதன்மூலம் இயக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் கூறப்பட்டவை தவிர, விட்டு விட்டு எரியும் அல்லது மிருந்த ஒளிபாய்ச்சும் மாதிரி யான வெளிச்சங்கள் எவையும், வாகனமொன்றின் வெளியிலாவது அல்லது உள்ளேயாவது பயன்படுத்தப் படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி எச்சரிக்கை உபாயம் எதிர்பாராத ஒரு விதமாக இயங் கத் தவறின், இச்சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்பட்டவையான கைச் சைகைகள் தற் காலிகமாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) மின்சாரத்தினால் இயக்கப்படும் சைகைகள் எவையும் இல்லாத மோட்டார் வாகனமொன்றின் சாரதி, இடது பக்கத்தை நோக்கித் திசையைத் திருப்புவதனை அல்லது மாற்றுவதனைத் தொடங்கு வதற்கு முன்னர், அவரது உள்ளங்கை முன்னுக் குத் திருப்பப்பட்டு வலது பக்கத்திலிருந்து அல்லது ஓரப்பக்கத்திலிருந்து நேரடியாகக் கிடையான் தமது வலதுபக்க முன்னங்கையையும் கையையும் நீட்டி தோள்மூட்டிலிருந்து தமது முன்னங்கையை மணிக் கூடு இயங்கும் திசைக்கு எதிராகச் சுழற்றுதல் வேண் டும். மின்சாரரீதியாக இயக்கப்படும் வாகனங்களின் விடயத்தில், அத்தகைய திசைகாட்டிகள், இடதுகை சுட்டிக்காட்டும் கருவியை இயக்குவதன்மூலம் காணப் படலாம்.

(5) மோட்டார் வாகனமொன்றின் சாரதி தகுந்த தெனத் தாம் நினைத்தால்—

(அ) முந்திச்செல்ல முயலும் வாகனமொன்றுக்கு முந்திச் செல்ல முயலாதிருக்கும்படி சைகை காட்டுவதற்காக, மோட்டார் வாகனத்தின் வலதுபக்கம் கிடையாக நேரே வெளிப்புறம் உள்ளங்கை கீழ்நோக்கி வலது புயத்தையும் கையையும் நீட்டி புயத்தை மேலும் கீழுமாக அசைத்தல் வேண்டும்.

(ஆ) முந்திச்செல்ல முயலும் வாகனமொன்று முந்திச் செல்வதற்கு சைகை காட்டுவதற்காக, உள்ளங்கையை முன்னுக்குத் திருப்பப்பட்டு, வாகனத்தின் வலது பக்கத்திலிருந்து தோள் மூட்டு மட்டத்தின்கீழுள்ள அவருடைய வலது புயத்தையும் கையையும் நீட்டிப் புயத்தைப் பின்னோக்கியும் முன்னோக்கியும் அசைத்தல் வேண்டும்; அல்லது மின்சைகைகள் இயக்கப்படும்போது இடது சைகையை இயங்கச் செய்வித்தல் வேண்டும்.

(6) மோட்டார் வாகமொன்றின் சாரதியொருவர், இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பெருவழிகள் சந்திக்கும் இடத்தில் கடமையிலுள்ள பொலிசு அலுவலரொருவரை அணுகும்பொழுது, பொலிசு அலுவலருக்குத் தெரியக்கூடியதாக, தாம் செல்ல விரும்பும் திசை நோக்கி அவருடைய புயத்தை நீட்டுதல் வேண்டும் அல்லது மின்விசையாற் செயற்படும் இயைபான சைகைகளை இயங்கச் செய்வித்தல் வேண்டும்.

(7) ஓராம், (2) ஆம், (3) ஆம், (4) ஆம், (5) ஆம், (6) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டவை தவிர்ந்த வேறு எவையேனும் சைகைகளின் பயன்பாட்டைத் தேவைப்படுத்தி அல்லது பயன்பாட்டிற்கு அதிகாரமளித்து ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

68. முதன்மைச் சட்டவாக்கத்தின் 155 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

" ஒலி அல்லது ஒளி எச்சரிக்கைகள்.

155. (1) பெருவழியொன்றின்மீதான மோட்டார் வாகனமொன்றின் சாரதி, அத்தகைய எச்சரிக்கை ஏமக்காப்பிற்கு அவசியமாகும்பொழுது திறமையான கருவியொன்றினால் ஒலி எழுப்புவதன்மூலம் அல்லது முன்விளக்கின் ஒளிக்கற்றையை மங்கியநிலையில் பாய்ச்சுவதன்மூலம் மோட்டார் வாகனத்தின் வருகை பற்றி அல்லது அதன் நிலையிடம் பற்றிப் போதுமான எச்சரிக்கை கொடுத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், மோட்டார் வாகனமொன்று பெருவழியொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் பொழுது, விபத்தொன்றைத் தடுக்கும் நோக்கத்துக்காகவன்றி அல்லது வாகனத்தின் அல்லது அதில் உள்ளவர்களின் ஏமக்காப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காகவன்றி, அந்த வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள எந்த எச்சரிக்கைக் கருவியாவது இயக்கப்படுதலாகாது.

(2) இராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, நகர இடப்பரப்பின் எல்லைகளுக்குள் ஏதேனும் பெருவழியின்மீதான மோட்டார் வாகனம் எதுவும், தனி ஒலிப்பை வெளிவிடும் ஒலியெழுப்பி தவிர்ந்த வேறு ஊதுகுழல் ஒலி எதனையும் அல்லது ஒலியெழுப்பி எதனையும் சப்தித்தலாகாது.

(3) நாளின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட மணித்தியாலங்களின்போது ஏதேனும் நகர இடப்பரப்பில் அல்லது அதன் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாகத்தில், (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, எல்லா எச்சரிக்கைக் கருவிகளினதும் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருவியின் பயன்பாட்டைத் தடைசெய்து அல்லது மட்டுப்படுத்தி ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(4) எந்த இடப்பரப்புத் தொடர்பாக (3) ஆம் உட்பிரிவின்கீழ் எவையேனும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட்டுள்ளனவோ அந்த ஏதேனும் இடப்பரப்பில், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், ஆள் எவரும், அவ் ஒழுங்குவிதிகளை மீறி ஏதேனும் எச்சரிக்கைக் கருவியைப் பயன்படுத்தலாகாது.".

*சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**69.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*"மோட்டார் கார்களின் முன் இருக்கைகளில் இருக்கும் ஆட்களின் எண்ணிக்கை.*

157. பெருவழியொன்றின்மீதுள்ள மோட்டார் காரொன்றின் சொந்தக்காரர் அல்லது சாரதி, காரின் முன் இருக்கையில் அல்லது இருக்கைகளில் சாரதியுடன் சேர்த்து இரண்டுக்கு மேற்பட்ட ஆட்களை ஏற்றிச்செல்லுவித்தல் அல்லது ஏற்றிச்செல்ல அனுமதித்தல் ஆகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**70.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :—

"(2) மோட்டார் சைக்கிள் ஒன்றைச் செலுத்தும் ஒவ்வோர் ஆளும் அல்லது அதில் ஏற்றிச்செல்லப்படும் ஒவ்வொருவரும், அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதான ஒரு வகையினதான பாதுகாக்கும் ஒரு தலைக்கவசத்தை அவரின் தலையின்மேல் பாதுகாப்பாக அணிதல்வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

71. முதன்மைச் சட்டவாக்கத்தின் 160 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஒலிபெருக்கும் சாதனத்தையும் ஒலிபெருக்கிகளையும் பயன்படுத்துதல்.

160. (1) வாகனத்தில் பொருத்தப்படும் அல்லது கொண்டுசெல்லப்படும் ஒலிபெருக்கியுடன்கூடிய ஏதேனும் ஒலிபெருக்கும் சாதனத்தை அசைந்து கொண்டிருக்கும் மோட்டார் வாகனமொன்றின் சாரதி பயன்படுத்துதலாகாது அல்லது எவரேனுமாளைப் பயன்படுத்த அனுமதித்தலாகாது என்பதுடன், மோட்டார் வாகனத்திலுள்ள எவ்வாளாவது பயன்படுத்துதலுமாகாது:

ஆயின், எவ்வாறாயினும், ஒலிபெருக்கும் சாதனமொன்று, அத்தகைய சாதனத்திலிருந்து வெளிப்படும் ஒலியின் அளவானது, அது வாகனத்தினுள் கட்டுப்படுத்தப்பட்டு அதனுள் உள்ளவர்கள் மட்டும் கேட்பதற்கு முன்னப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதெனில், அசைந்து கொண்டிருக்கும் மோட்டார் வாகனமொன்றில் பயன்படுத்தப்படலாம்.

(2) கடற்படையின், இராணுவப்படையின், வான்படையின் அல்லது பொலிசாரின் நோக்கங்களுக்காக அல்லது அஞ்சல் திணைக்களத்தின் அல்லது தொலைத்தொடர்புகள் திணைக்களத்தின் அல்லது அரசாங்கத்தின் வேறு ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட திணைக்களத்தின் அல்லது 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் அல்லது ஏதேனும் பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் நோக்கங்களுக்காக அல்லது இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினால் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்தின் விடயத்தில் அல்லது உல்லாசப்பயணிகளை இடம் பெயர்க்கும் ஏதேனும் மோட்டார் வாகனத்தின் விடயத்தில் ஆணையாளரினால் அத்தகைய மோட்டார் வாகனத்தின் ஒலிபெருக்கியுடன்கூடிய ஒலிபெருக்கும் சாதனத்தின் பயன்படுத்துதலை அதிகாரமளிக்கும் அனுமதிச்சீட்டொன்று வழங்கப்பட்டிருப்பின், இப்பிரிவு ஏற்புடையதாதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவைத் திருத்துதல்.

72. முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவில் "தலைமைக்காரர்" என்ற சொல் இடம்பெறும் இடங்களிலெல்லாம், அச்சொல்லுக்குப் பதிலாக "கிராமசேவை உத்தியோகத்தர்" என்ற சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :—

"(ஆ) மோட்டார் வாகனத்தின் சொந்தக்காரர், விபத்து நடந்த நேரத்தில் அவர் இருந்திருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி, எவரேனும் பொலிசு அலுவலரால் அல்லது கிராம

சேவை அலுவலரால் கோரப்பட்டதன்மீது, வாகனச் சாரதியினதும், விபத்து நடைபெற்ற நேரத்தில் வாகனத்தில் இருந்த ஒவ்வோர் ஆளினதும் பெயர், முகவரி, விவரணம், முன்வரலாறு, இருப்பிடம் ஆகியவைபற்றி தம்வசம் இருக்கும் எல்லாத் தகவலையும் கொடுத்துதவுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஏதேனும் கோரிக்கைக்கு இணங்கியொழுகுகையில், தமது அறிவுக்கெட்டியவரையில் பொய்யானதாகவுள்ள அல்லது ஏதேனும் விபரத்தில் பிழைவழி உய்க்கின்றதாகவுள்ள தகவல் எதனையும் அளிக்கின்ற அத்தகைய சொந்தக்காரர் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

73. முதன்மைச் சட்டவாக்கத்தின் 162 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"பொலிசு அலுவலரின் அல்லது போக்குவரத்து நெறியாளரின் போக்குவரத்துப் பணிப்புகளுக்கும் சைகைகளுக்கும் இணங்குதல் வேண்டும்.

162. வாகனத்தை நிறுத்துவதற்கு அல்லது வாகனத்தைப் பின்னுேக்கிச் செலுத்துவதற்கு அல்லது அதன் வேகத்தைக் குறைப்பதற்கு அல்லது திரும்பிச் செல்வதற்கு அல்லது அத்தகைய பக்கத்தாற் செல்வதற்கு, அல்லது பொலிசு அலுவலரினுல் அல்லது போக்குவரத்து நெறியாளரினுல் சுட்டிக்காட்டப்படக் கூடிய அத்தகைய வாகனுதி ஒழுங்கில் வாகனத்தைக் கொண்டுசெல்வதற்கு, பொலிசு அலுவலரொருவரினுல் அல்லது போக்குவரத்து நெறியாளரொருவரினுல் அவருடைய கடமையை நிறைவேற்றுவதில் கொடுக்கப்பட்ட எல்லா வாய்மொழிப் பணிப்புகளுக்கும் அல்லது கைச்சைகைகளுக்கும் வாகனமொன்றின் சாரதி இணங்கி ஒழுகுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 164 ஆம் பிரிவைத் திருத்துதல்.

74. முதன்மைச் சட்டவாக்கத்தின் 164 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ), (இ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(ஆ) ஏதேனும் இடப்பரப்பின் உள்ளூரதிகாரசபையினது பொறுப்பிலுள்ள பெருவழியொன்றன் விடயத்தில் அவ் உள்ளூரதிகாரசபையின் கட்டளைமூலம் அல்லது பெருவழிகள் திணைக்களத்தின் பொறுப்பிலுள்ள பெருவழியொன்றின் விடயத்தில் பெருவழிகள் திணைக்களத்தின் பணிப்பாளரின் கட்டளைமூலம்—

(i) வாகனுதிகளின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் அல்லது வாகனுதிகளால் பின்பற்றப்படவேண்டிய மார்க்கத்தைச் சுட்டிக்காட்டும் நோக்கத்திற்காக அல்லது அப்பெருவழியில் மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துதல் பற்றிய அல்லது அது தொடர்பான வேறு ஏதேனும் நோக்கத்திற்காக ; அல்லது

(ii) ஆபத்தான ஒரு நிலையிலுள்ள அல்லது பழுதுபார்க்கப்படுகின்ற, கட்டியமைக்கப்படுகின்ற அல்லது மீளக்கட்டியமைக்கப்படுகின்ற ஏதேனும் பாலத்தின் மேலே அல்லது பெருவழியின் ஏதேனும் பிரிவின் மேலே வாகனுதிகளைத் தடைசெய்யும், மட்டுப்படுத்தும் அல்லது ஒழுங்குபடுத்தும் நோக்கத்திற்காக; அல்லது

(இ) பெருவழிகள் திணைக்களத்தினதும், உள்ளூரதிகாரசபையினதும், பொலிசாரினதும் ஒருப்பாட்டுடன், 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் அல்லது ஒரு பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் கட்டளையால்—

(i) அத்தகைய ஏதேனும் சபைக்குச் சொந்தமான வசவண்டிகளை நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட இடங்களையும்; அத்துடன்

(ii) அத்தகைய ஏதேனும் சபைக்குச் சொந்தமான வசவண்டிகளை நிறுத்தும் இடங்களையும்,

சுட்டிக்காட்டும் நோக்கத்திற்காக.";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(4) மூன்றும் உட்பிரிவை மீறியமை ஒன்றிற்கான ஏதேனும் குற்றவழக்கில் ஏதேனும் பெருவழியின்மீது அல்லது பெருவழியிலிருந்து தெரியக்கூடியதாக நிறுவப்பட்ட, வெளிக்காட்டிவைக்கப்பட்ட அல்லது ஏற்பாடுசெய்யப்பட்ட ஒவ்வொரு வாகனுதிகள் சைகையும் அல்லது அறிவித்தலும், மூரணைது எண்பிக்கப்பட்டாலன்றி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் முறையாக நிறுவப்பட்டதாக அல்லது வெளிக்காட்டிவைக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

'(7) இப்பிரிவில் "உள்ளூரதிகாரசபை" என்பது கிராமச் சபையொன்றையும், வீதிகளை அமைப்பதற்கெனவும் பேணுவதற்கெனவும் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதும் இப்பிரிவின் நோக்கங்களுக்காக உள்ளூரதிகாரசபையொன்றாகக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம் அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுமான அத்தகைய ஏதேனும் சபையையும் நிறுவனத்தையும் அல்லது கூட்டுத்தாபனத்தையும் உள்ளடக்கும்.'.

75. முதன்மைச் சட்டவாக்கத்தின் 166 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 166 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "தலைமைக்காரர்" என்னும் சொல் அவ்வுட்பிரிவில் இடம்பெறும் இடங்களிலெல்லாம் "கிராம சேவை உத்தியோகத்தர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

'(7) இப்பிரிவில் "உள்ளூரதிகாரசபை" என்பது கிராமச் சபையொன்றையும், வீதிகளை அமைப்பதற்கெனவும் பேணுவதற்கெனவும் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதும், இப்பிரிவின் நோக்கங்களுக்காக உள்ளூரதிகாரசபையொன்றாகக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுமான அத்தகைய ஏதேனும் சபையையும் நிறுவனத்தையும் அல்லது கூட்டுத்தாபனத்தையும் உள்ளடக்கும்.'.

76. முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 167 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) ஒரு விபத்தினால், எந்திரக் கோளாறினால் அல்லது தயர் பழுதடைந்ததனால் செயலிழந்த ஏதேனும் மோட்டார் வாகனத்தை ஏதேனும் பெருவழியில் விடவேண்டிய அவசியமேற்படுமிடத்து, இரவில் பெருவழியொன்றில் அவ்வாறு விடப்பட்ட வாகனத்தின் சாரதியானவர், பெருவழியில் வாகனத்தின் நிலையைத் தெளிவாகச் சுட்டிக்காட்டக்கூடிய வாறாக வாகனத்தின் முன்பகுதிக்கும் பின்பகுதிக்கும் ஒளியூட்டுதல் வேண்டும்.".

77. முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 169 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"வேலை நேரங்கள். 169. (1) ஆள் எவரும்—

(அ) நாலரை மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஏதேனும் தொடர்ச்சியான காலத்திற்கு; அல்லது

(ஆ) செலுத்தும் ஏதேனும் காலம் தொடங்குவதிலிருந்து கணிக்கப்பட்ட ஏதேனும் இருபத்திநான்கு மணித்தியாலக் காலத்தில் இளைப்பாறுவதற்கெனச் சாரதிக்கு ஆகக்குறைந்தது பத்து அடுத்தடுத்த மணித்தியாலங்கள் இல்லாதிருக்கும்வகையில்,

ஏதேனும் மோட்டர் முச்சக்கர வானை அல்லது மோட்டார் கோச்சை அல்லது லொறியைச் செலுத்துதலாகாது அல்லது அவரினால் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள

அல்லது அவருடைய கட்டளைக்கு அமையவுள்ள எவ ரேனுமானைச் செலுத்தச் செய்வித்தலாகாது அல்லது அனுமதித்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக சாரதி ஓய்வும் சிற்றுண்டியும் பெற்றுக்கொள்ளக்கூடியதான அரை மணித்தியாலத்திற்குக் குறைவாயில்லாத இடை வெளியொன்றினால் பிரிக்கப்பட்டிருந்தாலன்றி, ஏதே னும் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நேர காலப் பகுதிகள் தொடர்ச்சியான ஒரு காலமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 170 ஆம் பிரிவைத் திருத்துதல்.

78. முதன்மைச் சட்டவாக்கத்தின் 170 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) ஏதேனும் நகர இடப்பரப்பிற்கான உள்ளூரதிகாரசபை மோட்டார் முச்சக்கர வான்களின், அல்லது வசு வண்டிகளின் அல்லது லொறிகளின் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினதான அல்லது விவரணத்தினதான மோட்டார் முச்சக் கர வான்களின், அல்லது வசு வண்டிகளின் அல்லது லொறி களின் பயன்பாட்டுக்காக அவ் இடப்பரப்பிற்குள் ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட பகிரங்க நிற்பாட்டிடங்களை ஏற்படுத்த லாம்." ; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன்மூலமும் :—

"மோட்டார் முச்சக்கர
வான்களுக்கும்,
வசு வண்டிகளுக்கும்,
லொறிகளுக்குமான
பகிரங்க
நிற்பாட்டிடங்கள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 171 ஆம், 172 ஆம் பிரிவுகளை நீக்குதல்.

79. முதன்மைச் சட்டவாக்கத்தின் 171 ஆம், 172 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 174 ஆம் பிரிவைத் திருத்துதல்.

80. முதன்மைச் சட்டவாக்கத்தின் 174 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகள் நீக்கப்படுவதன்மூலமும், அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகள் இடப்படுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) ஆளெவரும், ஏதேனும் பயணம் தொடர்பாக, 173 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட பயணக்கூலிக்கு மேலதிகமான ஏதேனும் பயணக்கூலியை வசு வண்டி ஒன்றுக்கு

செலுத்துவதற்கு அவரினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையினால் பிணிக்கப்படலாகாது என்பதுடன், விடயத்திற்கு ஏற்புடையதாகக்கூடிய அத்தகைய ஏதேனும் அதிகாரமளிக்கப்பட்ட பயணக்கூலிக்கு மேலதிகமான ஏதேனும் பயணக்கூலியைச் செலுத்தியுள்ள எவரேனுமாள், அத்தகைய தொகை எந்த ஆளிடம் செலுத்தப்பட்டதோ அந்த ஆளிடமிருந்து மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையை அறவிடுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(2) நூற்று எழுபத்து மூன்றும் பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளை மீறியமைக்காக எவரேனுமாள் ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அந்நீதிமன்றமானது, அந்த மீறுகைக்காகச் சட்டமுறையாக விதிக்கக்கூடிய வேறு ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, விடயத்திற்கு ஏற்றுற்போல, அதிகாரமளிக்கப்பட்ட ஆகக்கூடிய பயணக்கூலிக்கு, அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பயணக்கூலிக்கு, அல்லது உடன்பட்டுக்கொள்ளப்பட்ட பயணக்கூலிக்கு மேலதிகமாக அந்த ஆளுக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையைத் திருப்பிச் செலுத்தும்படி கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய தொகையானது, நீதிமன்றமானது அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தின் தொகையை விஞ்சுகின்றது என்பதைப் பொருட்படுத்தாது, நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்று என்றுற்போல் அதேமுறையில் அறவிடப்படுதலும் வேண்டும்.".

81. முதன்மைச் சட்டவாக்கத்தின் 175 ஆம், 176 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 175 ஆம், 176 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.**

"பயணக்கூலிகளை அறவிடுதல்.

175. (1) ஏதேனும் வசுவண்டியில் பிரயாணம் செய்வதற்கான பயணக்கூலியாக நியாயமாகச் செலுத்தப்படவேண்டியதும் அல்லது அத்தகைய ஏதேனும் பிரயாணத்தின்பொழுது ஏதேனும் வசுவண்டிக்கு அவரினால் வேண்டுமென்று விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்திற்கான சேதஈடாக அவரிடமிருந்து கோரப்பட்டதுடன் இருபது ரூபாவிற்கு மேற்படாததுமான ஏதேனும் தொகையைச் செலுத்த ஆளான எவரேனுமாள், வசுவண்டியின் சொந்தக்காரரினால் அல்லது அத்தகைய தொகையைப் பெற்றுக்கொள்ளச் சொந்தக்காரரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் சேவையாளரினால் அல்லது முகவரினால் செய்யப்பட்ட கோரிக்கையின் மீது அத்தகைய தொகையைச் செலுத்தத் தவறுமிடத்து அல்லது மறுக்குமிடத்து, பயணம் தொடங்கிய அல்லது முடிவடைந்த அல்லது சேதம் இடம்பெற்ற இடத்தின் மீது நியாயாதிக்கம் கொண்ட நீதிவான் நீதிமன்றம், அதன் சொந்தக்காரரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின்மீதும், அந்த முறைப்பாட்டில் சார்த்தப்பட்ட நிகழ்வுகளின் சுருக்கமுறையிலான எண்பித்தலின் மீதும், பயணக்கூலியாகச் செலுத்தப்படவேண்டிய அத்தகைய பணத்தொகையை அல்லது

சேதத்திற்கான சேதஈடாகச் செலுத்தப்பட வேண்டிய பணத்தொகையையும் அத்துடன் நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடியவாறு, அத்தகைய செலவுத்தொகைகளையும் நீதிமன்றத்திற்கு வருகை தருவதில் வசு வண்டியின் சொந்தக்காரரினால், சாரதியினால் அல்லது நடாத்துநரினால் உறப்பட்ட நேர இழப்பிற்கான அத்தகைய நட்டஈட்டையும் சொந்தக்காரருக்குச் செலுத்தும்படி அத்தகைய ஆளுக்குக் கட்டளையிடலாம்; இப்பிரிவின் கீழ்ச் செலுத்தப்படவேண்டுமெனக் கட்டளையிடப்பட்ட ஒவ்வொரு பணத்தொகையும், நீதிமன்றமானது, அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும்போது விதிக்கக்கூடிய குற்றப்பணத்தின் தொகையை விஞ்சுவதாகவிருப்பினும்கூட, நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்றென்றாற் போன்ற அதேமுறையில் அறவிடற்பாலதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் மூலம் அதிருப்தியடைந்தவரான எவரேனுமாள், கட்டளையானது, குற்றவியல் வழக்கொன்றில் அல்லது விடயமொன்றில் நீதிவான் நீதிமன்றமொன்றினால் எடுத்து மொழியப்பட்ட இறுதிக்கட்டளையொன்றென்றாற்போன்ற அதே முறையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம் என்பதுடன், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் XXVIII ஆம் அத்தியாயம் அத்தகைய மேன்முறையீட்டிற்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதலும் வேண்டும்.

வசுவண்டிகளில் விடப்படும் ஆதனம்.

176. வசுவண்டிகளில் பயணிகளால் தற்செயலாக விடப்பட்ட ஆதனத்தின் பாதுகாப்பான கட்டுக்காப்பிற்கும், மீளஒப்படைப்பிற்கும் அல்லது கையுதிர்ப்பிற்கும், அவைகள் தொடர்பாகச் செலுத்தப்படக்கூடிய கட்டணங்களையும், அத்தகைய ஆதனத்தைக் கண்டுபிடிப்பவர்களுக்கு வெகுமதியாகச் செலுத்தப்படக்கூடிய பணத்தொகைகளையும் விதித்துரைப்பதற்கும் ஏற்பாடுசெய்து ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 177 ஆம் பிரிவினை நீக்குதல்.

82. முதன்மைச் சட்டவாக்கத்தின் 177 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

83. முதன்மைச் சட்டவாக்கத்தின் 178 ஆம், 179 ஆம், 180 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 178 ஆம், 179 ஆம், 180 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

'தனிப்பட்ட கோச்சுகளில் அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு கூடுதலாக ஆட்களையும் மோட்டார் கார்களில் அல்லது தனிப்பட்ட கோச்சுகளில் சொந்தப் பொட்டலங்கள் அல்லாத பொருட்களையும் ஏற்றிச்செல்லுதல்.

178. (1) பெருவழியொன்றில் தனிப்பட்ட கோச்சொன்றில் எந்நேரத்திலாவது காணப்படும் ஆட்களின் எண்ணிக்கை, அந்தத் தனிப்பட்ட கோச்சிற்கான அரசிறை உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஆகக்கூடிய எண்ணிக்கையை விஞ்சுகின்றவிடத்து அல்லது விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பொருட்கள் தவிர்ந்த பொருட்கள் அல்லது ஆளொருவரின் சொந்தப் பொட்டலங்கள் தவிர்ந்த பொருட்கள் பெருவழியொன்றில் மோட்டார்க் காரொன்றில், அல்லது தனிப்பட்ட கோச்சொன்றில் காணப்படுமிடத்து, அதன் சாரதி இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் தனிப்பட்ட கோச்சு, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் குறித்துரைக்கப்படக்கூடிய ஏதேனும் நாளன்று அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அந்த நாளன்றும் அந்த நோக்கத்திற்காகவும் அந்த இடப்பரப்பொன்றுக்குள்ளும் பாவிக்கப்படின் அந்தக் கோச்சில் ஆட்களை ஏற்றிச் செல்லுதல் தொடர்பில் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாது.

(2) பெருவழியொன்றில், மோட்டார் காரொன்றில், அல்லது எந்நேரத்திலாவது காணப்படும் ஆட்களின் எண்ணிக்கை (அதன் சாரதி உட்பட) ஒன்பதை விஞ்சுகின்றவிடத்து, அதன் சாரதி, இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

(அ) மோட்டார் காரொன்றில், அல்லது தனிப்பட்ட கோச்சொன்றில் வேறான இருக்கையொன்றில் இராத மூன்று வயதிற்குக் குறைந்த பிள்ளையொன்று, ஆளொருவராகக் கருதப்படுதலாகாது ;

(ஆ) விடயத்திற்கு ஏற்றவாறு, காரின் அல்லது கோச்சின் சாரதி, ஆளொருவராகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) ஒவ்வொரு பிள்ளையும் மூன்று வயதிற்கு மேற்பட்டதும் பன்னிரண்டு வயதிற்குக் குறைவானதுமாய் இருக்கும் இரு பிள்ளைகள், ஓர் ஆளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) மோட்டார் கார்களிலும் தனிப்பட்ட கோச்சுகளிலும் சொந்தப் பொட்டலங்களாக ஏற்றிச் செல்லப்படக்கூடிய பண்டங்களினதும் அல்லது பொதிகளின

தும், மோட்டார் கார்களிலும் தனிப்பட்ட கோச்சுகளி லும் ஏற்றிச்செல்லப்படக்கூடிய சொந்தப் பொட்டலங் கள் தவிர்ந்த பொருட்களினதும் தன்மையையும் விவ ரணத்தையும் அல்லது நிறையையும் வரையறுத்து ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(5) ஏதேனும் விவரணத்தினதான பண்டங்களை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்துவதற்கென 45 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டு மூலம் மோட்டார்க் காரொன்று, மோட்டார் முச்சக்கர வண்டியொன்று அல்லது தனிப்பட்ட கோச்சொன்று அதிகாரமளிக்கப்பட்டுள்ளவிடத்து, அந்த விவரணத் தினவான பண்டங்களை மோட்டார் காரில், மோட்டார் முச்சக்கரவண்டியில் அல்லது தனிப்பட்ட கோச்சில் ஏற்றிச்சென்ற காரணத்திற்காக மட்டும் எந்த ஆளா வது இப்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியுள்ளா ரெனக் கருதப்படுதலாகாது.

**வசுவண்டிகளில் அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக ஆட்களையும், அல்லது பயணிகளையும் சொந்தப் பொட்டலங்கள் அல்லாத பொருட்களையும் ஏற்றிச் செல்லுதல்.**

179. (1) பெருவழியொன்றில் வசுவண்டியில், எந் நேரத்திலாவது காணப்படும் ஆட்களின் எண்ணிக்கை, அந்த வசுவண்டிக்கான அரசிறை உரிமத்தில் குறித் துரைக்கப்பட்ட ஆகக்கூடிய எண்ணிக்கையை விஞ்சு மிடத்து அல்லது விதித்துரைக்கப்படக்கூடிய அத் தகைய பொருட்கள் தவிர்ந்த பொருட்கள் அல்லது பயணியொருவரின் சொந்தப் பொட்டலங்கள் தவிர்ந்த பொருட்கள் பெருவழியொன்றில் வசுவண்டி யொன்றில் காணப்படுமிடத்து, வசுவின் நடாத்துநர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியா தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

(அ) பின்வரும் ஆட்கள் பயணிகளாகக் கருதப்படு தலாகாது :—

(i) வசுவண்டியொன்றில் வேறான இருக்கை யொன்றில் இராத மூன்று வயதிற்குக் குறைந்த பிள்ளையொன்று ;

(ii) வசுவண்டியொன்றின் சாரதி ;

(iii) வசுவண்டியொன்றின் நடாத்துநர் ; அத் துடன்

(iv) வசுவண்டியொன்றின் சொந்தக்காரரி னால் வேலைக்கமர்த்தப்பட்டவரும், "பரிசோதகர்" என்ற சொல் அதில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ள உலோ கத்திலான பட்டியொன்றை அணிந் திருப்பவருமான பயணச்சீட்டுப் பரி சோதகர் ஒருவர் ;

(ஆ) ஒவ்வொரு பிள்ளையும் மூன்று வயதிற்கு மேற்பட்டதும் பன்னிரண்டு வயதிற்கு குறைவானதுமாய் இருக்கும் இரு பிள்ளைகள், ஓர் ஆளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) வசுவண்டிகளில் சொந்தப் பொட்டலங்களாக ஏற்றிச்செல்லப்படக்கூடிய பண்டங்களினதும் அல்லது பொதிகளினதும், வாடகைக்கார்களில் அல்லது வசுவண்டிகளில் ஏற்றிச்செல்லப்படக்கூடிய சொந்தப் பொட்டலங்கள் தவிர்ந்த பொருட்களினதும் தன்மையையும் விவரணத்தையும் அல்லது நிறையையும் வரையறுத்து ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(4) எவையேனும் விவரணத்தினவான பண்டங்களை ஏற்றிச்செல்லுவதற்குப் பயன்படுத்துவதற்கென 45 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டு மூலம் ஏதேனும் வசுவண்டி அதிகாரமளிக்கப்பட்டுள்ளவிடத்து, அந்த விவரணத்தினவான பண்டங்களை வசுவண்டியில் ஏற்றிச் சென்ற காரணத்திற்காக மட்டும், எந்த ஆளாவது இப்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியுள்ளவராகக் கருதப்படுதலாகாது.

*வசுவண்டி அல்லது தனிப்பட்ட கோச்சு நிறைந்திருக்கும் போது ஆட்கள் அவற்றுள் ஏறுதலாகாது.*

180. ஏதேனும் வசு வண்டிக்கான அல்லது தனிப்பட்ட கோச்சிற்கான அரசிறை உரிமத்திற்கிணங்க ஏற்றிச்செல்லப்படக்கூடிய, விடயத்திற்கேற்றவாறு, முழு எண்ணிக்கையினரான ஆட்களை அல்லது பயணிகளை அந்த வசு வண்டி அல்லது தனிப்பட்ட கோச்சு ஏதேனும் நேரத்தில் ஏற்றிச்செல்கின்றது என்ற காரணத்திற்காக அந்த நேரத்தில் அந்த வசு வண்டிக்குள் அல்லது தனிப்பட்ட கோச்சிற்குள் எவரேனுமாளை ஏற வேண்டாமென்று அந்த வசு வண்டியின் அல்லது தனிப்பட்ட கோச்சின் சாரதி அல்லது நடாத்துநர் வேண்டுகோள் விடுக்குமிடத்து, அந்த ஆள், அத்தகைய வசு வண்டிக்குள் அல்லது கோச்சுக்குள் ஏறுதலாகாது அல்லது ஏற எத்தனித்தலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 182 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

84. முதன்மைச் சட்டவாக்கத்தின் 182 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

*" வசுவண்டிகளின் சொந்தக்காரினால் வைத்திருக்கப்பட வேண்டிய இடாப்பு.*

182. (1) ஒவ்வொரு வசு வண்டியினதும் சொந்தக்காரர், ஒழுங்குவிதிகளுக்கு இணங்க அந்த வசு வண்டி தொடர்பில் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தாலன்றி, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் இடாப்பொன்றை வைத்திருந்து பேணுதல் வேண்டுமென்பதோடு, பெருவழியொன்றில் வசு வண்டி பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சந்தருப்பம் தொடர்பிலும், பின்வரும் விவரங்களை இடாப்பில் பதிதல் வேண்டும்—

(அ) சொந்தக்காரரின் ஊர்திச்சாலையை அல்லது வளவுகளை விட்டு கார் அல்லது வசு வண்டி புறப்படும் தேதியும் நேரமும் அங்கே திரும்பும் தேதியும் நேரமும் ;

(ஆ) சாரதியின் பெயரும், அவரது சாரதி உரிமத்தின் இலக்கமும்; அத்துடன்

(இ) நடாத்துநரின் பெயரும் அவரது நடாத்துநர் உரிம இலக்கமும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் இடாப்பில் செய்யப்படும் ஒவ்வொரு பதிவீடும், அப்பதிவீடு எந்த வசு வண்டி தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்த வசு வண்டியின் சாரதியினால் ஒப்பமிடப்படுதல் வேண்டுமென்பதோடு, நடாத்துநராலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் வைத்திருக்கப்படும் ஒவ்வோர் இடாப்பும் பரிசோதகர் ஒருவரினால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரினால் செய்யப்பட்ட கோரிக்கையின் மீது பார்வையிடக்கூடியதாக இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 184 ஆம் பிரிவை நீக்குதல்.

85. முதன்மைச் சட்டவாக்கத்தின் 184 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 185 ஆம் பிரிவைத் திருத்துதல்.

86. முதன்மைச் சட்டவாக்கத்தின் 185 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(3) 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் அல்லது ஏதேனும் பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் வசு வண்டியொன்று தொடர்பில் அந்த வசு வண்டியானது பயணிகளை ஏற்றும் அல்லது இறக்கும் நோக்கத்திற்காக வேறு ஏதேனும் இடத்தில் நிற்காமல் இரு குறிப்பிட்ட இடங்களுக்கு இடையில் மட்டுமே ஓடுவதற்கென எந்நேரத்திலேனும் பயன்படுத்தப்படும்போது, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது." ;

(2) அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(4) மூன்றும் உட்பிரிவில் வேறு விதமாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, வசு வண்டியொன்றின் நடாத்துநர், ஒவ்வொரு பயணியும் தமது பயணக்கூலியை செலுத்தியதன் மேல் பயணத்திற்கான பயணக்கூலியையும், ஒன்றில் அத்தகைய பயணியின் பயணம் தொடங்கும் இடத்தை அல்லது சென்றடையும் இடத்தைப் பெயர்மூலம் அல்லது புயணக்கூலிக்கட்டத்தின் எண்ணிக்கை மூலம் சுட்டிக்காட்டி தொடரெண் வரிசைப்படி இலக்கமிடப்பட்ட பயணச்சீட்டொன்றை, அவருக்கு வழங்குதல் வேண்டும்." ; அத்துடன்

(3) அப்பிரிவின் ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலம் :—

"உரிமம் பெற்ற
நடாத்துநர் வசு
வண்டியில் ஏற்றிச்
செல்லப்படுதலும்
அவர் பயணச்
சீட்டுக்களை
வழங்குதலும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 186 ஆம், 187 ஆம் பிரிவுகளை நீக்குதல்.

87. முதன்மைச் சட்டவாக்கத்தின் 186 ஆம், 187 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 188 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.

88. முதன்மைச் சட்டவாக்கத்தின் 188 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஆகக்கூடிய பாரத்திற்கு அல்லது ஆகக்கூடிய சரக்கேற்றப்பட்ட பாரத்திற்குக் கூடுதலாகப் பொருட்களை லொறியில் அல்லது மோட்டார் முச்சக்கர வானில் ஏற்றிச் செல்லுதல்.

188. பெருவழியொன்றில் எந்நேரத்திலாவது லொறியொன்றில் அல்லது மோட்டார் முச்சக்கர வானில் காணப்படும் பொருட்களின் நிறை, அந்த லொறிக்கான அல்லது மோட்டார் முச்சக்கர வானுக்கான அரசிறை உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்கூடிய பாரத்திற்கு அல்லது ஆகக்கூடிய சரக்கேற்றப்பட்ட பாரத்திற்கு மேற்படுமிடத்து, அல்லது பாரத்தைப் பரப்பிவைத்திருக்கும் முறை அபாயத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்குமிடத்து, லொறிச்சாரதி அல்லது மோட்டார் முச்சக்கர வானின் சாரதி, 214 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 189 ஆம் பிரிவைத் திருத்துதல்.

89. முதன்மைச் சட்டவாக்கத்தின் 189 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) "மூன்று ஆட்களுக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஐந்து ஆட்களுக்கு" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) "எவரேனும் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 190 ஆம் பிரிவைத் திருத்துதல்

90. முதன்மைச் சட்டவாக்கத்தின் 190 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(எ) வசு வண்டிகளின் சாரதிகளினதும் நடாத்துநர்களினதும் பயணச்சீட்டுப் பரிசோதகர்களினதும் கடமைகளை விதித்துரைக்கும், அத்துடன் நடத்தைகளை ஒழுங்குபடுத்தும் ;";

(இ) அவ்வுட்பிரிவின் (ஔ), (க), (ங) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(ஔ) வசுவண்டிகளின் சாரதிகளினாலும் நடாத்துநர்களினாலும், அடையாள இலக்கங்களைக் கொண்டுள்ள பட்டிகள் அணியப்படவேண்டுமென்று ஏற்பாடுசெய்யும் ;

(க) வசுவண்டிகளில் பயணிகளின் நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்பாடு செய்யும் ;

(ங) வசுவண்டிகள் தொடர்பில்—

(i) இச்சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டின் மீறுகையைப் புரியும் ஆட்கள் அத்தகைய வசுவண்டிகளிலிருந்து அவற்றின் சாரதிகளினால் அல்லது நடாத்துநர்களினால் அல்லது அவற்றின் சாரதிகளின் அல்லது நடாத்துநர்களின் வேண்டுகோளின் மீது எவரேனும் பொலிசு அலுவலரால் அகற்றப்படுவதற்கு அதிகாரமளிக்கும் ;

(ii) அத்தகைய வசுவண்டிகளிலுள்ளவர்களும், இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டினை மீறியுள்ளாரெனை அவற்றின் சாரதிகளினால் அல்லது நடாத்துநர்களினால் நியாயமான முறையில் சந்தேகிக்கப்படுகின்றவர்களுமான பயணிகளை, அவர்களுடைய பெயர்களையும் முகவரிகளையும், கோரப்பட்டதன் மீது பொலிசு அலுவலர் ஒருவருக்கு அல்லது அவற்றின் சாரதிகளுக்கு அல்லது நடாத்துநர்களுக்கு அளிக்கும்படி தேவைப்படுத்தும் ;

(iii) அத்தகைய வசுவண்டிகளிலுள்ள பயணிகள், தாம் மேற்கொள்ள உத்தேசித்துள்ள அல்லது தாம் மேற்கொண்ட பயணத்தை வெளிப்படுத்த வேண்டும் என, அவற்றின் சாரதிகளால் அல்லது நடாத்துநர்களால் வேண்டப்படின், அவர்கள் அதனை வெளியிடவேண்டும் எனவும், அத்தகைய பிரயா

ணம் முழுவதிற்குமான பயணக் கூலியைச் செலுத்தவேண்டும் எனவும் அவற்றிற்கு ஏற்பாடுசெய்யப்பட்ட பயணச்சீட்டுகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவும் தேவைப்படுத்தும் ;

(iv) அத்தகைய வசுவண்டிகளின் சாரதிகளால் அல்லது நடாத்துநர்களால் அல்லது அவற்றின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர்கள் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனுமாளினால் அந்நோக்கத்திற்கெனச் செய்யப்பட்ட கோரிக்கையின் மீது, பயணச்சீட்டுக்கள் வைத்திருப்பவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட பயணச்சீட்டுக்களை பயணஞ் செய்யும்போது காண்பிக்க வேண்டும் எனவும், பயணமுடிவில் அவற்றை ஒப்படைக்க வேண்டும் எனவும் தேவைப்படுத்தும் ;

(v) அத்தகைய வசுவண்டிகளிலுள்ள பயணிகள் அவர்கள் பணஞ்செலுத்திய பயணமுடிவில் அந்த வசுவண்டிகளிலிருந்து இறங்க வேண்டும் என அவற்றின் சாரதிகளால் அல்லது நடாத்துநர்களால் வேண்டப்படின் அவ்வாறு இறங்கவேண்டும் எனத் தேவைப்படுத்தும் ;

(vi) பயணச்சீட்டுகளை வைத்திருப்பவர்கள் அவை எக்காலப்பகுதிக்கு வழங்கப்பட்டதோ அக்காலப்பகுதி முடிவடைந்ததன் மீது அப்பயணச்சீட்டுக்களை ஒப்படைக்க வேண்டும் எனத் தேவைப்படுத்தும் ;" ;

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(உ) அவ்வுட்பிரிவின் (ண), (த) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(ண) ஏதேனும் வசுவண்டி தொடர்பில் எந்தச் சூழ்நிலைகளிலும் எந்த நிபந்தனைகளுக்கமையவும் ஆணையாளரினால் 182 ஆம், 183 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படக் கூடுமோ அந்தச் சூழ்நிலைகளையும் நிபந்தனைகளையும் விதித்துரைக்கும் ;

(த) அப்போதைக்கு இலங்கை அரசாங்கத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் லொறியின் அல்லது மோட்டார் முச்சக்கர வானின் விடயத்தில், இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடு எதுவும் ஏற்புடையதாதல் ஆகாது என ஏற்பாடு செய்யும்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(3) நெடுஞ்சாலைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடனன்றி, 141 ஆம் பிரிவின் கீழான அல்லது 142 ஆம் பிரிவின்கீழான அல்லது 143 ஆம் பிரிவின்கீழான அல்லது 144 ஆம் பிரிவின்கீழான ஒழுங்குவிதி எதுவும் ஆக்கப்படலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 192 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

91. முதன்மைச் சட்டவாக்கத்தின் 192 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"கைவிடப்பட்ட மோட்டார் வாகனங்களைக் கையுதிர்த்தல்.

192. (1) கைவிடப்பட்ட மோட்டார் வாகனமொன்று ஏதேனும் தடையை அல்லது தொந்தரவை உண்டுபண்ணக்கூடியதாகப் பெருவழியொன்றின் ஏதேனும் பாகத்தில் விடப்பட்டுள்ள விடத்து, ஆணையாளர் அல்லது உரிமம் வழங்கும் அதிகாரி அல்லது உள்ளூரதிகாரசபை அல்லது சம்பந்தப்பட்ட நிலையத்திற்குப் பொறுப்பாயுள்ள பொலிசு அலுவலரொருவர் பொதுவாக அல்லது பதிவஞ்சல் மூலம் சேர்ப்பிக்கப்படும் அறிவித்தல்மூலம், தடையை அல்லது தொந்தரவை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கும்படி அந்த வாகனத்தின் சொந்தக்காரரை அல்லது அதற்குப் பொறுப்பாயுள்ள ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்டவரான அந்த வாகனத்தின் ஒவ்வொரு சொந்தக்காரரும் அல்லது அந்த வாகனத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆளும், அதன்கண் குறிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) ஏதேனும் கைவிடப்பட்ட வாகனத்தின் சொந்தக்காரரை ஏதேனும் காரணத்திற்காக கண்டுபிடிக்க முடியாவிட்டால் அல்லது சொந்தக்காரர் அல்லது பொறுப்பாக உள்ள ஆள், (1) ஆம் உட்பிரிவின்கீழ்ச் சேர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுவாராயின் ஆணையாளர் அல்லது உரிமம் வழங்கும் அதிகாரி அல்லது உள்ளூர் அதிகாரசபை அல்லது பொலிசு அலுவலர், வாகனத்தை அகற்றுவிக்கலாம் என்பதோடு, அதனைக் கையுதிர்ப்பதற்கு தேவையாகக்கூடிய அத்தகைய கட்டளையையும் ஆக்கலாம்.

(4) மூன்றும் உட்பிரிவின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் கட்டளை தொடர்பாக ஆணையாளருக்கு, அல்லது உரிமம் வழங்கும் அதிகாரிக்கு அல்லது உள்ளூரதிகாரசபைக்கு அல்லது பொலிசு அலுவலர் ஒருவருக்கு எதிராகக் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதலாகாது அல்லது கொண்டுநடாத்தப்படுதலாகாது.".

92. முதன்மைச் சட்டவாக்கத்தின் 193 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 193 ஆம் பிரிவைத் திருத்துதல்.

'(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "அதிகாரம்பெற்ற அலுவலர்" என்பது—

(அ) சாசன்டு தரத்திலும் அதற்கு மேலுள்ள தரத்திலும் உள்ள எவரேனும் பொலிசு அலுவலர் ;

(ஆ) பொலிசுப்பரிசோதகர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் பொலிசு அலுவலர் ; அல்லது

(இ) ஆணையாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்,

என்று பொருள்படும்.'.

93. முதன்மைச்சட்டவாக்கத்தின் 194 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 194 ஆம் பிரிவினைத் திருத்தல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஈ) எனும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஈ) ஆணையாளரின் முந்திய அங்கீகாரம் இன்றி மோட்டார் வாகனத்தின் நிறை, பரிமாணங்கள், தன்மை அல்லது இருக்கை வசதி என்பவை பதிவு செய்யப்பட்டதற்குப் பின்பு மாற்றப்பட்டுள்ளன." ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆணையாளர், மோட்டார் வாகனமொன்றைச் சோதனை செய்ததன்பின்பும் பார்வையிட்டதன் பின்பும், அத்தகைய மோட்டார் வாகனம் இச்சட்டத்தின் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளுக்கு வழியொழுகியிருக்கவில்லையென, அல்லது அத்தகைய வாகனம் ஓடக்கூடிய நிலைமையில் இல்லையென அல்லது அந்த வாகனத்தின் நிறை, பரிமாணங்கள், தன்மை அல்லது இருக்கை வசதி என்பன அதற்கான முந்திய அங்கீகாரமில்லாமல் மாற்றப்பட்டுள்ளன எனத் திருப்தியடையுமிடத்து, அவர், அதன் சொந்தக்காரரிடம் சேர்ப்பிக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம், அவ்வுட்பிரிவின்கீழ், மேலும் சோதனையிட்ட பின்னரும் பார்வையிட்ட பின்னரும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட குறைபாடுகள் அகற்றப்பட்டுள்ளனவென்று ஆணையாளர் திருப்தியடையும்வரை, அந்த வாகனத்தைப் பயன்படுத்தலாகாதெனத் தடைசெய்யலாம். ஆணையாளர் அவ்வாறு திருப்தியடையுமிடத்து, அந்த அறிவித்தலை இல்லாதாக்கலாம்." ; அத்துடன்

(3) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

" (4) இரண்டாம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்றின் மூலம் மோட்டார் வாகனமொன்றைப் பயன்படுத்துதல் தடை செய்யப்பட்டுள்ளவிடத்து, அறிவித்தல் இல்லாதாக்கப்படும்வரை அரசிறை உரிமத்தைச் செல்லுபடியற்றதாக்கக்கூடியவாறு, அரசிறை உரிமத்தை ஒப்படைக்கும்படி, ஆணையாளர், அத்தகைய வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்கு எழுத்தில் கட்டளையிடலாம்; அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டால், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், அக்கட்டளை அவருக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னர் பதினான்கு நாட்களுக்குள் அக்கட்டளைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(5) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறியமைக்கான தவறொன்றிற்குக் குற்றவாளியாகும் எவரேனுமொருவர், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், இரண்டாவதான அல்லது பின்னையதான குற்றத்தீர்ப்பளிப்பின்மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 195 ஆம், 196 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

94. முதன்மைச்சட்டவாக்கத்தின் 195 ஆம், 196 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

'அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலைகளும் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனையாளர்களும்.

195. (1) ஆணையாளர், அரசிற்குச் சொந்தமான, அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்க சார்புடைய சபைக்குச் சொந்தமான அல்லது உள்ளூரதிகாரசபைக்குச் சொந்தமான ஊர்திச்சாலையொன்றினால் அதற்கென விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மீதும் கட்டளை மூலம்—

(அ) அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஆளின் ஒவ்வோர் ஊர்திச்சாலையையும் அல்லது வேறு தொழில் இடத்தையும் மோட்டார் கோச்சுகள், லொறிகள் ஆகியவை தொடர்பில் உரிமங்களை வழங்குவதற்குமுன்பு 29 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஆண்டு தோறும் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்கும் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலையொன்றாக வெளிப்படுத்தலாம்; அத்துடன்

(ஆ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஆளும், அத்தகைய ஏதேனும் ஊர்திச்சாலையில் வேலைக்கமர்த்தப்பட்டிருப்பவரும் கட்டளையில்

குறித்துரைக்கப்பட்டிருப்பவருமான வேறு ஒவ்வோர் ஆளும், தனித்தனியே அந்த ஊர்திச்சாலையில் மோட்டார் கோச்சுகளையும், லொறிகளையும் அவ்வாறு பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்கும் நோக்கங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பரிசோதகராக இருத்தல் வேண்டும் என வெளிப்படுத்தலாம்.

ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலைக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பரிசோதகருக்கு வழங்கப்பட்ட அதிகாரக் கடிதத்தில் வரைந்து கூறப்பட்ட நிபந்தனைகள் எவையும் மீறப்பட்டால் ஆணையாளர் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை நீக்கலாம் அல்லது மாற்றலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றில் ஆணையாளர், அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட ஊர்திச்சாலை தொடர்பிலும் ஆண்டொன்றில் அந்த ஊர்திச்சாலையில் பரிசோதிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படக்கூடிய வாகனங்களின் ஆகக்கூடிய எண்ணிக்கையை நிச்சயிக்கலாம்.

மோட்டார் கோச்சு முதலியவற்றிற்கு தோதுச் சான்றிதழ் வழங்குதல்.

196. (1) மோட்டார் கோச்சு, மோட்டார் மூச்சக்கர வான், லொறி, மோட்டார் பிரேத வண்டி அல்லது மோட்டார் நோயாளர் வண்டி ஆகியன தொடர்பில் 29 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக அந்த வாகனங்களுள் ஒன்றைத் தகுதிவாய்ந்த அதிகாரியின் முன்னிலையில் காண்பித்ததன்மீது, அந்த அதிகாரி அத்தகைய பரிசோதனைக்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மேல் அதனைப் பரிசோதனை செய்தல் வேண்டுமென்பதோடு, அது பயன்படுத்தலுக்குத் தோதானதா அல்லது தோதற்றதாவென எழுத்தில் அத்தாட்சிப்படுத்துதலும் வேண்டும். இப்பிரிவின்கீழ் பரிசோதனை செய்யப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் பயன்படுத்தலுக்குத் தோதானது எனக் கூறும் சான்றிதழொன்று இச்சட்டத்தில் "தோதுச் சான்றிதழ்" என்று குறிப்பீடு செய்யப்படும்.

(2) ஏதேனும் மோட்டார் வாகனம் தொடர்பில் தோதுச் சான்றிதழொன்றை வழங்கும்போது, தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் பொதுமக்களின் பாதுகாப்பு நலன்கருதி அவசியமானவையென அவர் கருதக்கூடிய

வாறாக அந்த மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்துதல் தொடர்பிலான அத்தகைய நிபந்தனைகளை அச்சான்றிதழில் உட்புகுத்தலாம்.

(3) ஏதேனும் மோட்டார் கோச்சு, மோட்டார் முச்சக்கர வான், லொறி, மோட்டார் பிரேத வண்டி அல்லது மோட்டார் நோயாளர் வண்டி பயன்படுத்துவதற்குத் தோதற்றதென அத்தாட்சிப்படுத்தும்போது தகுதிவாய்ந்த அதிகாரி, அதற்கான அவருடைய காரணங்களைக் கூறுதல் வேண்டும்.

(4) ஏதேனும் மோட்டார் வாகனம் தொடர்பிலான தோதுச்சான்றிதழொன்று—

(அ) அந்த மோட்டார் வாகனம், ஒரு லொறியாக, மோட்டார் பிரேத வண்டியாக அல்லது மோட்டார் நோயாளர் வண்டியாக இருந்தால், அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்கு வலுவில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அந்த மோட்டார் வாகனம், மோட்டார் கோச்சொன்றாக அல்லது வாடகைக் காரொன்றாக இருந்தால், அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு காலத்துக்கு அல்லது அத்தகைய சான்றிதழில் குறித்துரைக்கப்படக் கூடியவாறாக மூன்று மாதங்களுக்குக் குறைவாக இல்லாத அத்தகைய குறுகிய காலத்திற்கு வலுவில் இருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் பரிசோதனையின் பின்னர் பயன்படுத்தலுக்குத் தோதற்றதென அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஏதேனும் மோட்டார்க் கோச்சின், மோட்டார் முச்சக்கர வானின், லொறியின், மோட்டார் பிரேத வண்டியின் அல்லது மோட்டார் நோயாளர் வண்டியின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன்மீது, அச்சான்றிதழை வழங்கியமைக்கு எதிராக ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்; அத்துடன் அத்தகைய மேன்முறையீட்டின்மீதான ஆணையாளரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(6) ஏதேனும் மோட்டார் வாகனம் தொடர்பில், இப்பிரிவின் கீழ் வழங்கப்படும் தோதுச் சான்றிதழானது—

(அ) அந்த மோட்டார் வாகனத்தில் வைத்திருக்கப்படல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பொலிசு அலுவலரால், கிராமசேவை உத்தியோகத்தரால் அல்லது இச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட பரிசோதனையாளரால் அல்லது

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரால் அல்லது ஆணையாளரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளால் கேட்கப்படுவதன் மேல் சோதனைக்காகக் கிடைக்கக்கூடியதாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய சான்றிதழானது நீதிமன்றமொன்றினால் அல்லது ஆணையாளரினால் அல்லது உரிமமளிக்கும் அதிகாரியொருவரினால் தேவைப்படுத்தப்படும்போது அத்தகைய மோட்டார் வாகனத்திலிருந்து அகற்றப்பட்டுக் காண்பிக்கப்படுதலும் வேண்டும்.

(7) இப்பிரிவில் " தகுதிவாய்ந்த அதிகாரி " என்னும் சொல்லமைப்பு இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகன அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் ஒருவர் என அல்லது மோட்டார் வாகனப் பரிசோதனையாளர் ஒருவர் என அல்லது 195 ஆம் பிரிவினதும் இப்பிரிவினதும் நோக்கங்களுக்காக ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனையாளர் ஒருவர் எனப் பொருளாகும்.'.

95. (1973 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டத்தினால் அதனகத்து உட்புகுத்தப்பட்ட) முதன்மைச் சட்டவாக்கத்தின் 196அ என்னும் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 196அ எனும் பிரிவை மாற்றீடு செய்தல்.

" இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினது அல்லது ஏதேனும் பிராந்திய போக்குவரத்துச் சபையினது வாகனங்கள் தொடர்பில் ஆண்டுப் பரிசோதனையும் அத்தாட்சி வழங்கலும்.

196அ. நூற்றுத் தொண்ணூற்றாறும் பிரிவில் மூலமாக எது எப்படியிருப்பினும், 29 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டாற்போன்ற அத்தகைய மோட்டார் வாகனத்திற்கான உரிமம் வழங்குவதற்கு முன்னர் ஆண்டுப் பரிசோதனையும் அத்தாட்சி வழங்கலும், விடயத்திற்கேற்றாற்போன்று, இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையை அல்லது 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பிராந்தியப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த மோட்டார் வாகனமொன்றின் விடயத்தில், அதற்கெனச் சபையினால் முறையே அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் கொண்டுநடாத்தப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அலுவலர் எவரினாலும் அத்தகைய ஏதேனும் வாகனம் தொடர்பாக, தகுதிபற்றி வழங்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் எதுவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 196 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரமாகக் கருதப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 197 ஆம் பிரிவைத் திருத்துதல்.

96. முதன்மைச் சட்டவாக்கத்தின் 197 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் ஓராம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

'(1) பின்வரும் வகுப்பினவான அல்லது விவரணத்தினவான எல்லா மோட்டார் வாகனங்களுக்கும், அதாவது, மோட்டார் முச்சக்கர வான்கள், மோட்டார் கோச்சுகள், லொறிகள் ஆகியனவற்றிற்கு இப்பிரிவு ஏற்புடையதாதல் வேண்டும் என்பதுடன், "இப்பிரிவு ஏற்புடையதாகும் மோட்டார் வாகனங்கள்" எனும் சொல்லமைப்பு அதில் இடம்பெறும் இடங்களில் எல்லாம் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.'.

(2) அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(9) இப்பிரிவு ஏற்புடையதாகின்ற மோட்டார் வாகனமொன்றைப் பயன்படுத்தலானது (5) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்றின்மூலம் தடைசெய்யப்பட்டவிடத்து—

(அ) அவ்வறிவித்தல் (8) ஆம் உட்பிரிவின்கீழ் இல்லாதொழிக்கப்படும் வரையில், ஆளெவரும் அத்தகைய வாகனத்தைப் பயன்படுத்தலோ பயன்படுத்துவித்தலோ ஆகாது ; அத்துடன்

(ஆ) அத்தகைய வாகனத்துக்கான அரசிறை உரிமத்தை வழங்கியவரான உரிமமளிக்கும் அதிகாரி அவ்வறிவித்தல் அவ்வாறு இல்லாதொழிக்கப்படும் வரையில் அவ்வரசிறை உரிமத்தை அவர் தடுத்து வைக்கக்கூடியவாறாக அந்த அரசிறை உரிமத்தைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அத்தகைய வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்கு எழுத்தில் கட்டளையிடலாம் ; அத்துடன் அத்தகைய கட்டளை ஆக்கப்படுமெனின், அத்தகைய பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர், அக்கட்டளை தமக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் பதினான்கு நாட்களுள் அவ்வறிவித்தலுக்கு இணங்கியொழுதல் வேண்டும்." ; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்புக்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும் :—

"மோட்டார் முச்சக்கர
வான்கள்,
மோட்டார் கோச்சுகள்,
லொறிகள் ஆகியனவற்றைப்
பரிசோதித்தலும் அவற்றைப்
பயன்படுத்துதலைத் தடைசெய்தலும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 198 ஆம், 199 ஆம், 200 ஆம், 201 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

97. முதன்மைச் சட்டவாக்கத்தின் 198 ஆம், 199 ஆம், 200 ஆம், 201 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன:—

" லொறிகளையும் முச்சக்கர மோட்டார் வான்களையும் சோதனையிடுதலும் அவற்றைப் பயன்படுத்துதலைத் தடை செய்தலும்.

198. (1) பரிசோதனையாளர் ஒருவர் அவரது அதிகாரப்பத்திரத்தைக் காண்பித்தல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு காண்பித்த தன் மேல் ஏதேனும் லொறிக்குள் அல்லது மோட்டார் முச்சக்கர வானுக்குள் எந்நேரத்திலும் நுழைவதற்கும், சோதனையிடுவதற்கும் அந்நோக்கத்துக்கென லொறியை அல்லது மோட்டார் முச்சக்கர வானை நிறுத்துவதற்கும், அத்துடன் சோதனைக்காக நியாயமாகத் தேவைப்படும் அத்தகைய நேரத்துக்கு லொறியை அல்லது மோட்டார் முச்சக்கர வானைத் தடுத்து வைப்பதற்கும், உரித்துடையவராதல் வேண்டும்; அத்துடன் எந்த வளவுக்குள் ஒரு லொறி அல்லது ஒரு மோட்டார் முச்சக்கர வான் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதென நம்புவதற்கு அவருக்குக் காரணம் உளதோ அந்த வளவுக்குள், விடயத்தின் சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு, நியாயமான எந் நேரத்திலும் அவர் நுழையலாம். பரிசோதனையாளர் ஒருவரை அவரது கடமையைப்புரிய விடாது எவரேனுமாள் தடை செய்வாரெனின், அல்லது லொறியை அல்லது மோட்டார் முச்சக்கர வானை நிறுத்தும்படி தேவைப்படுத்தும்போது அவ்வாறு நிறுத்துவதற்குத் தவறுவாரெனின், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு அவர் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஒரு லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் சோதனையிடப்படுவதன் மேல் அந்த லொறியிலுள்ள அல்லது அந்த மோட்டார் முச்சக்கர வானிலுள்ள எவையேனும் குறைபாடுகள் காரணமாக, அக்குறைபாடுகள் திருத்தப்படும் வரையில் அது சேவைக்குத்தோதற்றதென அல்லது சேவைக்குத் தோதற்றதாகும் சாத்தியமுடையதெனப் பரிசோதனையாளருக்குத் தோன்றுமெனின், அவர் அந்த லொறியை அல்லது மோட்டார் முச்சக்கர வானைப் பயன்படுத்துதலைத் தடைசெய்யலாம்:

ஆயின், அக்குறைபாடுகள், பத்து நாட்களை விஞ்சாத ஏதேனும் காலப்பகுதிக்குள் திருத்தப்படத்தக்க அத்தகையனவெனவும், அத்துடன் அக்குறைபாடுகள் பொதுமக்களின் பாதுகாப்புக்கு உடனடியாக ஆபத்தை விளைவிப்பனவல்ல எனவும், பரிசோதனையாளர் அபிப்பிராயப்படுமிடத்து, தடைவிதிப்பானது அக்காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் நடைமுறைக்கு வருதலாகாது; அத்துடன் அக்குறைபாடுகள் திருத்தப்பட்டுவிட்டனவென அல்லது திருத்தப்படுகின்றனவெனத் திருப்தியடைகின்ற எவரேனும் பரிசோதனை

யாளர் அக்காலப்பகுதி முடிவடையு முன்னரே தடை விதிப்பை மீளப்பெறுவாரெனின், அக்காலப்பகுதி முடிவடைவதன் மீது நடைமுறைக்கு வருதலாகாது.

(3) இப்பிரிவின்கீழ் மேற்சொல்லப்பட்டவாறு ஒரு லொறியை அல்லது மோட்டார் முச்சக்கர வானைப் பயன்படுத்துதலைப் பரிசோதனையாளர் ஒருவர் தடை செய்யுமிடத்து, அவர் அத்தடைவிதிப்புப் பற்றிய அறிவித்தலை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், அந்த லொறியின் அல்லது மோட்டார் முச்சக்கர வானின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்கும், பரிசோதனை செய்யப்பட்ட நேரத்தில் அதற்குப் பொறுப்பாக விருந்த ஆளுக்கும், அத்துடன் ஆணையாளருக்கும் உடனடியாகக் கொடுத்தல் வேண்டும்.

இறுதியாக முற்போந்த உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய குறைபாடுகள் இருக்கின்றன என்ற ஏதுவின் மீதான தடைவிதிப்பு ஒன்றின் விடயத்தில், இவ்வுட்பிரிவின் கீழ் கொடுக்கப்படும் அறிவித்தலானது, பரிசோதனையாளரின் அபிப்பிராயப்படி குறைபாடுகள் எக்காலப் பகுதிக்குள் திருத்தப்படக்கூடுமோ அக்காலப்பகுதியைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட தற்கமைய, இப்பிரிவின் கீழான தடைவிதிப்பானது அதுபற்றிய அறிவித்தல் லொறியின் அல்லது மோட்டார் முச்சக்கர வானின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்கோ அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்கோ கொடுக்கப்பட்ட பின்னர் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அத்துடன் தடைவிதிப்பானது இதனகத்துப் பின்னர் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க அகற்றப்படும் வரையில் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருதலும் வேண்டும்.

(5) நடைமுறைக்கு வந்துள்ளதும் இப்பிரிவின் கீழானதுமான தடைவிதிப்பானது, எவரேனும் பரிசோதனையாளர் அந்த லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் சேவைக்குத் தோதானதெனத் திருப்தியடைவாரெனில், அவரினால் அகற்றப்படலாம்.

(6) தடைவிதிப்பொன்றை அகற்றுவதற்குப் பரிசோதனையாளர் ஒருவர் மறுப்பதனால் இன்னலுறும் ஆளொருவர், ஆணையாளரால் எழுத்தில் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரைக்கொண்டு லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் சோதனையிடப்பட வேண்டுமென ஆணையாளருக்கு விண்ணப்பிக்கலாம்; அத்துடன் அத்தகைய விண்ணப்பம் எதுவும் செய்யப்படுமிடத்து, அத்தகைய அலுவலர் அவருக்கு அந்த விடயம் ஆற்றுப்படுத்தப்படுவதன்மேல்,

அந்த லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் சேவைக்குத் தோதானதெனக் கருதுவாரெனில், அந் தத் தடைவிதிப்பை அகற்றுதல் வேண்டும்.

(7) ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் தடைவிதிப்பை அகற்றுவதற்கு மறுப்பதனால் இன்னலுறும் ஆளொருவர், விதித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளும், விதித்துரைக்கப்பட்ட முறையிலும், ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்; ஆணையாளர் அந்த மேன்முறையீட்டின் மீது தக்கதெனத் தாம் எண்ணும் அத்தகைய கட்டளையை ஆக்குவதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளை எதுவும் அத்தகைய அலுவலரைப் பிணிப்பதாதலும் வேண்டும்.

(8) எவரேனும் பரிசோதனையாளர் அல்லது ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், தடைவிதிப்பொன்றை மீளப்பெறுமிடத்து அல்லது அகற்றுமிடத்து, அத்தகைய மீளப்பெறுதல் பற்றி அல்லது அகற்றுதல் பற்றி அவர் உடனடியாக லொறியின் அல்லது மோட்டார் முச்சக்கர வானின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்கும் ஆணையாளருக்கும் அறிவித்தல் வேண்டும்.

(9) ஒரு லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் தொடர்பில் இப்பிரிவின்கீழான தடைவிதிப்பொன்று நடைமுறையிலிருக்கும் எந்நேரத்திலும், அந்த லொறியை அல்லது மோட்டார் முச்சக்கர வானை ஆள் எவரும் பயன்படுத்துதலோ அல்லது பயன்படுத்துவித்தலோ அல்லது பயன்படுத்துவதை அனுமதித்தலோ ஆகாது.

(10) ஒன்பதாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறியமைக்கான தவறுக்குக் குற்றவாளியாகும் ஆளெவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், முதலாவது தவறொன்றின் விடயத்தில் இருநூற்றைம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்துக்கும் அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான தவறின் விடயத்தில் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

லொறிகளினதும் மோட்டார் முச்சக்கர வான்களினதும் சரக்கேற்றுகையையும் மோட்டார் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படும் ஆட்களின் அல்லது பயணிகளின் எண்ணிக்கையையும் நிச்சயித்துக் கொள்ளுவதற்கான தத்துவம்.

199. (1) ஏதேனும் லொறியின் அல்லது மோட்டார் முச்சக்கர வானின் சரக்கேற்றிய மொத்த எடையை அல்லது அச்சாணிப் பாரத்தை நிச்சயபபடுத்திக் கொள்ளும் நோக்கத்திற்காக எவரேனும் பரிசோதனையாளர் அல்லது சாசன்டு பதவிக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலர், அவரது அதிகாரப் பத்திரத்தைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படுவாராயின் அவ்வாறு காண்பிப்பதன்மேல், ஏதேனும் லொறியை அல்லது மோட்டார் முச்சக்கர வானைப் பெருவழியொன்றில் வைத்து நிறுத்தலாம்; அத்துடன் அதன்மேல் அவர் மோட்டார் வாகனங்களை நிறுத்துப் பார்ப்பதற்கான சக்கர எடைப் பொறிகளையோ எடைப்பொறிப் பாலத்தினையோ அல்லது வேறு இயந்திரத்தையோ பயன்படுத்துவதன்மூலம் லொறியின் அல்லது மோட்டார் முச்சக்கர வானின் சரக்கேற்றப்பட்ட எடையை அல்லது அச்சாணிப் பாரத்தை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுக்கலாம்; அத்துடன் அந்நோக்கத்துக்கென மிக அண்மையிலுள்ள சக்கர எடைப் பொறிக்கோ எடைப்பொறிப் பாலத்துக்கோ அல்லது மோட்டார் வாகனங்களின் எடையைப் பார்ப்பதற்குப் பதிவிடப்பட்ட வேறு ஏதேனும் இயந்திரத்திற்கோ லொறியினை அல்லது மோட்டார் முச்சக்கர வானைச் செலுத்தும்படி அல்லது செலுத்துவதற்கு அனுமதிக்கும்படி அந்த லொறிக்கு அல்லது மோட்டார் முச்சக்கர வானுக்கு அப்போதைக்குப் பொறுப்பாகவுள்ள ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஏதேனும் மோட்டார் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்படும், விடயத்திற்கேற்ப ஆட்களின் அல்லது பயணிகளின் எண்ணிக்கையை நிச்சயப்படுத்திக் கொள்ளும் நோக்கத்திற்காக, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், அவரது அதிகாரப் பத்திரத்தைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படுவாரெனின் அவ்வாறு காண்பிப்பதன்மேல், அவ்வாகனத்தை ஏதேனும் பெருவழியில் வைத்து நிறுத்தலாம் என்பதுடன், அந்நோக்கத்துக்கு அவசியமாகக்கூடியவாறான நியாயமான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஏதேனும் லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் எடைபார்க்கப்படுமிடத்து, அந்த லொறியில் அல்லது மோட்டார் முச்சக்கர வானில் உள்ள ஒவ்வோர் ஆளும், அந்த லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் எடைபார்க்கப்படுவதற்குமுன்னர் அதிலிருந்து இறங்கும்படி தேவைப்படுத்தப்படுவாரெனின், அவ்வாறு இறங்குதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் சரக்கேற்றப்பட்ட நிலையில் எடைபார்க்கப்படுமிடத்து, அந்த லொறி அல்லது மோட்டார் முச்சக்கர வான் சரக்கேற்றப்பட்ட போதுள்ள எடைக்கும் அப்போதைக்கு அதற்கென வலுவிலுள்ள உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறுாவுள்ள அந்த லொறியின் அல்லது மோட்டார் முச்சக்கர வானின் வெற்று எடைக்கும் இடையிலான வேறுபாட்டுத் தொகையை, அதற்கு மூரணை தொகை எண்பிக்கப்படும் வரையில், அதில் ஏற்றிச் செல்லப்பட்ட சரக்கின் எடையாக இருத்தல் வேண்டும் எனக் கருதப்படல் வேண்டும்.

(5) சீருடையில் உள்ள பொலிசு அலுவலர் ஒருவர் அவரது அதிகாரப் பத்திரத்தைக் காண்பித்தல் அவசியமாகாது என்பது தவிர, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் பரிசோதனையாளர் ஒருவருக்கு ஏற்புடையனவாகின்ற அதேமுறையில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் ஒருவர் தொடர்பிலும் அல்லது பொலிசு அலுவலர் ஒருவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

லொறிகளில் அல்லது மோட்டார் முச்சக்கர வான்களில் கொண்டு செல்லப்படும் ஆவணங்களைக் காண்பித்தல்.

200. (1) ஒரு பரிசோதனையாளர் அல்லது சாசன்டு பதவிக்குக் குறையாத பதவிவரிசையிலுள்ள பொலிசு அலுவலர், அவரது அதிகாரப்பத்திரத்தைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படுவாராயின் அவ்வாறு காண்பிப்பதன்மேல், லொறியின் சாரதியினால் அல்லது மோட்டார் முச்சக்கர வானின் சாரதியினால் அல்லது அந்த லொறியில் அல்லது மோட்டார் முச்சக்கர வானில் கொண்டு செல்லப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளால் தேவைப்படுத்தப்பட்டதான ஏதேனும் ஆவணத்தைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்துவதற்கும் அதனைச் சோதனையிடுவதற்கும், பிரதியெடுப்பதற்கும் தம்மை அனுமதிக்கும்படியும் ஏதேனும் லொறிக்கு அல்லது மோட்டார் முச்சக்கர வானுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளை எந்நேரத்திலும் தேவைப்படுத்தலாம்; அத்துடன் அந்நோக்கத்துக்கெனச் சோதனையிடவும், பிரதியெடுக்கவும், தேவைப்படும்வாறான அத்தகைய நேரத்துக்கு அந்த லொறியை அல்லது மோட்டார் முச்சக்கர வானை நிறுத்தித் தடுத்துவைக்கலாம். அத்துடன் அவ்வாறு செய்யும்படி பரிசோதனையாளர் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் தேவைப்படுத்தப்படும்போது எவரேனுமாள் மேலே சொல்லப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் ஆவணத்தை பரிசோதனையாளருக்கு அல்லது பொலிசு அலுவலருக்குக் காண்பிக்கத் தவறுவாரெனின் அல்லது அவர் சோதனையிடுவதற்கு அல்லது அதனைப் பிரதியெடுப்பதற்கு

அனுமதிக்கத் தவறுவாரெனின் அவ்வாள் இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) சீருடையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், அவரது அதிகாரப்பத்திரத்தைக் காண்பித்தல் அவசியமாகாது என்பது தவிர, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பரிசோதனையாளர் ஒருவர் தொடர்பில் ஏற்புடையனவாகின்ற அதே முறையில் ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் தொடர்பிலும், அல்லது அத்தாட்சிப்படுத்தும் அலுவலரொருவர் தொடர்பிலும் அல்லது பொலிசு அலுவலரொருவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

மோட்டார் கோச்சுகளைச் சோதனையிடுதலும், அவற்றைப் பயன்படுத்துதலைத் தடை செய்தலும்.

201. (1) எவரேனும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அல்லது எவரேனும் பரிசோதனையாளர் அவரது அதிகாரப்பத்திரத்தைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படுவாராயின், அவ்வாறு காண்பிப்பதன்மேல், ஏதேனும் மோட்டார் கோச்சுக்குள் எந்நேரத்திலும் நுழைவதற்கும், அதனைச் சோதனையிடுவதற்கும், அந்நோக்கத்துக்கென அம் மோட்டார் கோச்சினை நிறுத்துவதற்கும் அத்துடன் சோதனைக்காகத் தேவைப்படும் அத்தகைய நேரம் வரையில் அதனைத் தடுத்து வைப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். அத்துடன் எந்த வளவுக்குள் அத்தகைய மோட்டார் கோச்சு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதென அவர் நம்புவதற்குக் காரணமிருக்கின்றதோ அந்த ஏதேனும் வளவுக்குள், விடயத்தின் சூழ்நிலைகளைக் கவனத்திற் கொண்டு, நியாயமான எந்நேரத்திலும் அவர் நுழையலாம். எவரேனுமாள் அத்தகைய எவரேனும் அலுவலரை அல்லது பரிசோதனையாளரை அவரது கடமைகளைப் புரியும்போது தடுப்பாரெனின் அல்லது மோட்டார் கோச்சை நிறுத்தும்படி தேவைப்படுத்தும்போது, நிறுத்தத் தவறுவாரெனின், அவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் மோட்டார் கோச்சினைச் சோதனையிட்டதன் மேல், விடயத்துக்கேற்றவாறு அந்த மோட்டார் கோச்சு அதிலுள்ள எவையேனும் குறைபாடுகள் காரணமாகச் சேவைக்குத் தோதற்றதென, அல்லது தோதற்றதாவதற்கான சாத்தியமுள்ளதென அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு அல்லது பரிசோதனையாளருக்கு தோன்றுமாயின், அக்குறைபாடுகள் திருத்தப்படும் வரையில், ஏதேனும் பெருவழியில் அதனைப்பயன்படுத்தலாகாதென அவர் தடை செய்யலாம் :

ஆயின், அக்குறைபாடுகள் நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்கு மேற்படாத ஏதேனும் காலப்பகுதிக்குள் திருத்தத்தக்க அத்தகையனவானவை எனவும், சம்பந்தப்பட்ட குறைபாடுகள் பொதுமக்களின் பாது

காப்புக்கு உடனடியாக ஆபத்து விளைவிக்கத்தக்கன வல்ல எனவும் விடயத்துக்கேற்றவாறு, அத்தாட்சிப் படுத்தும் அலுவலர் அல்லது பரிசோதனையாளர் அபிப் பிராயப்படுமிடத்து, தடைவிதிப்பானது, அக்காலப் பகுதி முடிவடைவதற்கு முன்னர் நடைமுறைக்கு வரு தலாகாது ; அத்துடன் அக்குறைபாடுகள் திருத்தப் பட்டுவிட்டனவெ அல்லது திருத்தப்படுகின்றனவென (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவ ரேனும் பரிசோதனையாளர் திருப்தியடைந்து அக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னரே அத்தடை விதிப்பை மீளப் பெற்றால் அக்காலப்பகுதி முடிவடைவ தன்மேல் நடைமுறைக்கு வருதலுமாகாது.

(3) மோட்டார் கோச்சினைப் பயன்படுத்துதலை எவ ரேனும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அல்லது பரி சோதனையாளர் இப்பிரிவின்கீழ் தடைசெய்யுமிடத்து, அத்தடைவிதிப்புப்பற்றி, அவர் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அவ்வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்கும், பரிசோதனை செய்யப்பட்ட நேரத்தில் அதற்குப் பொறுப்பாகவிருந்த ஆளுக்கும் அத்துடன் ஆணையாளருக்கும் உடனடியாக அறிவித் தல் கொடுத்தல் வேண்டும். இறுதியாக முற்போந்த உட்பிரிவிற்கான காப்புவாசகத்தில் குறித்துரைக்கப் பட்டவாறான அத்தகைய குறைபாடுகள் இருக்கின்றன என்ற ஏதுவின் மீதான தடைவிதிப்பின் விடயத்தில், இந்த உட்பிரிவின்கீழ்க் கொடுக்கப்படும் அறிவித்த லானது, விடயத்திற்கேற்றவாறு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அல்லது பரிசோதனையாளரின் அபிப் பிராயத்தின்படி அக்குறைபாடுகள் எவ்வளவு காலத் துக்குள் திருத்தப்படக்கூடும் என்பதனைக் குறித்து ரைத்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட தற்கமைய, இப்பிரிவின் கீழான தடைவிதிப்பொன்று எந்த மோட்டார் கோச்சு தொடர்பில் செய்யப்பட் டதோ, அந்த மோட்டார் கோச்சின் பதிவு செய்யப் பட்ட சொந்தக்காரருக்கு அல்லது அதற்குப் பொறுப் பாகவுள்ள ஆளுக்கு அதுபற்றி அறிவித்தல் கொடுக்கப் பட்டதன் பின்னர் உடனடியாக நடைமுறைக்கு வரு தல் வேண்டும் என்பதுடன், தடைவிதிப்பானது இத னகத்துப்பின்னர் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க அகற்றப்படும்வரையில் நடைமுறையிலிருந்து வருத லும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் நடைமுறைக்கு வந்துவிட்ட தடைவிதிப்பொன்று, தடைவிதிக்கப்பட்டதான அந்த மோட்டார் கோச்சு சேவைக்குத் தோதாகவுள்ளதென (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரே னும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அல்லது எவரே னும் பரிசோதனையாளர் திருப்தியடைவாரெனின், அவ ரால் அகற்றப்படலாம்.

(6) இப்பிரிவின் கீழ் எது தொடர்பில் தடைவிதிப்பொன்று நடைமுறையிலுள்ளதோ அது தொடர்பில் அத்தடைவிதிப்பை அகற்றுவதற்கு எவரேனும் அத் தாட்சிப்படுத்தும் அலுவலர் அல்லது பரிசோதனை யாளர் மறுப்பதால் இன்னலுறும் ஆளொருவர், ஆணையாளரால் எழுத்தில் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரைக்கொண்டு அதனைச் சோதனையிடுவதற்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுமிடத்து, அத்தகைய அலுவலர் அவருக்கு அந்தவிடயம் ஆற்றுப்படுத்தப்படுவதன்மீது, அது சேவைக்குத் தோதானதாகுமென அவர் கருதுவாரெனின், அத்தடைவிதிப்பை அகற்றலாம்.

(7) ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட தடைவிதிப்பை அகற்றுவதற்கு மறுப்பதனால் இன்னலுறும் ஆளொருவர், விதித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளும் விதித்துரைக்கப்பட்ட முறையிலும் ஆணையாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்; அம்மேன்முறையீட்டின்மீது தாம் பொருத்தமானதென எண்ணும் அத்தகைய கட்டளையை ஆக்குவதற்கு ஆணையாளருக்குத் தத்துவம் இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளை அத்தகைய அலுவலரைப் பிணிப்பதாதலும் வேண்டும்.

(8) எவரேனும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர், பரிசோதனையாளர் அல்லது ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் இப்பிரிவின்கீழ் ஒரு தடைவிதிப்பினை மீளப்பெறுமிடத்து அல்லது அகற்றுமிடத்து, அதுபற்றி அவர், அந்த மீளப்பெறல் அல்லது அகற்றுதல் தொடர்புபட்ட மோட்டார் கோச்சின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரருக்கும் ஆணையாளருக்கும் உடனடியாக அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(9) ஆளெவரும் ஒரு மோட்டார் கோச்சினை, அது தொடர்பில் இப்பிரிவின்கீழான ஒரு தடைவிதிப்பு நடைமுறையிலிருக்கும் எந்நேரத்திலும், ஒரு பெருவழியில் பயன்படுத்துதலோ அல்லது அத்தகைய மோட்டார் கோச்சினை பயன்படுத்துவித்தலோ அல்லது பயன்படுத்துவதை அனுமதித்தலோ ஆகாது.

(10) ஒன்பதாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறியமைக்கான தவறுக்குக் குற்றவாளியாகும் ஆளெவரும் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், முதலாவது தவறின் விடயத்தில் இருநூற்றைம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கும், இரண்டாவது அல்லது பின்னடுத்த தவறொன்றின் விடயத்தில் ஐந்

நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கும், அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும், அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

98. முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 203 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"அறிவித்தல் முதலியவற்றைச் சேர்ப்பித்தல்.

203. இப்பாகத்தின் நோக்கங்களுக்கான அறிவித்தல் அல்லது கட்டளை ஒவ்வொன்றும், அது தொடர்புபட்ட மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்கு நேரிடையாகவோ அல்லது அவரது வழமையான அல்லது கடைசியாக அறியப்பட்ட இருப்பிடத்துக்கு அஞ்சல் வழியாகப் பதிவு செய்யப்பட்ட கடித மூலம் அனுப்பியோ சேர்ப்பிக்கப்படலாம், அல்லது அனுப்பி வைக்கப்படலாம் ; பின்னைய விடயத்தில், அது அஞ்சலில் இடப்பட்ட நாளை அடுத்துவரும் மூன்றுவது நாளன்று அத்தகைய பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரிடம் சேர்ப்பிக்கப்பட்டதாக அல்லது சொந்தக்காரருக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டமை, அல்லது அத்தகைய கட்டளை அனுப்பி வைக்கப்பட்டமை பற்றிய எண்பிப்புக்காக, அவ்வறிவித்தல் அல்லது அக்கட்டளை அடங்கியுள்ள கடிதம் முறையாக முகவரியிடப்பட்டு அஞ்சலில் சேர்க்கப்பட்டதென எண்பிப்பதே போதுமானதாதலும் வேண்டும்.".

99. முதன்மைச் சட்டவாக்கத்தின் 204 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 204 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(3) இச்சட்டத்தின்கீழ் ஆணையாளருக்குள்ள ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, ஆணையாளரின் பணிப்புகளின்கீழ் எவரேனும் பிரதி ஆணையாளரினால், அல்லது அவ்வாறு செய்யும்படி ஆணையாளரின் கைப்பட எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்டவரான வேறு எவரேனும் அலுவலரினால் பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம், அல்லது நிறைவேற்றப்படலாம்." ;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை நீக்குவதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும்:—

"(5) இச்சட்டத்தின்கீழ் தத்துவங்களைப் பிரயோகிக்கும் அல்லது கடமைகளைப் புரியும், அல்லது பணிகளை நிறைவேற்றும் எல்லா ஆட்களும், அலுவலர்களும், சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படப் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 205 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

100. முதன்மைச் சட்டவாக்கத்தின் 205 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஆ) எனும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட வேறு தத்துவங்களும், பணிகளும், கடமைகளும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை விட்டு விடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 206 முதல் 212 வரையிலான பிரிவுகளை நீக்குதல்.*

101. முதன்மைச்சட்டவாக்கத்தின் 206 ஆம், 207 ஆம், 208 ஆம், 209 ஆம், 210 ஆம், 211 ஆம், 212 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 213 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

102. முதன்மைச்சட்டவாக்கத்தின் 213 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) ஆணையாளரைத் தவிசாளராகவும், அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான பத்துப்பேருக்கு மேற்படாத எண்ணிக்கையினரான அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டிருக்கும் மோட்டார் வாகனறி மதியுரைப் பேரவை ஒன்று இருத்தல் வேண்டும். இப்பேரவையில் பின்வருவன ஒவ்வொன்றையும் சேர்ந்த ஒரு பிரதிநிதியும் உள்ளடக்கப்படல் வேண்டும் :—

(அ) பொலிசுத் திணைக்களம்,

(ஆ) பெருவழிகள் திணைக்களம்,

(இ) இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை,

(ஈ) விபத்துக்களைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம்,

(உ) இலங்கை மோட்டார் வண்டிக் கழகம்,

(ஊ) இலங்கை உல்லாசப் பிரயாணச் சபை,

(எ) உள்ளூராட்சித் திணைக்களம்,

(ஏ) கொழும்பு மாநகரசபை".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 215அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

**103.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 215 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 215 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*"உடனடியான குற்றப் பணங்கள்.*

215அ. (1) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையில் தரப்பட்டுள்ளவாறான ஏதேனும் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் சட்டமுறையாக வழங்கப்பட்ட, ஆக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு, பணிப்புக்கு, கோரிக்கைக்கு, தேவைப்பாட்டுக்கு அல்லது அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) பொலிசு அலுவலர் ஒருவரினால் கண்டுபிடிக்கப்பட்டதன்மேல் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையில் தரப்பட்டுள்ள பிரிவு எதனதும் ஏற்பாடுகளின் மீறுகை எதனையும் ஒப்புக்கொள்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் சட்டமுறையாக வழங்கப்பட்ட, ஆக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு, பணிப்புக்கு, கோரிக்கைக்கு, தேவைப்பாட்டுக்கு அல்லது அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும், அவர் அவ்வாறு விரும்பினால், தவறிற்கான குற்றவழக்கிற்குப் பதிலாகக் குற்றப்பணம் என்ற வகையில் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட எந்தப் பிரிவு தொடர்பாக அவர் பொறுப்பை ஒப்புக்கொண்டுள்ளாரோ அப்பிரிவுக்கு நேரொத்ததாக அவ்வட்டவணையின் III ஆம் நிரையில் தரப்பட்டுள்ள தொகைக்கு மேற்படாத பணத்தொகையொன்றைச் செலுத்தலாம். அத்தகைய கொடுப்பனவானது ஏதேனும் கச்சேரியில் அல்லது அஞ்சல் அலுவலகத்தில் செய்யப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கொடுப்பனவு பற்றிய எண்பிப்பானது, கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள், கண்டுபிடிப்பைச் செய்யும் பொலிசு அலுவலரால் பெயர் குறிக்கப்பட்ட பொறுப்பலுவலருக்கு நேரடியான ஒப்படைப்புமூலம் அல்லது பதிவுத்தபால் மூலம் முன்வைக்கப்படுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**104.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 217 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(i) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஐந்நூறு ரூபாயை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஆயிரம் ரூபாயை" என்ற சொற்றொடரை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ii) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "இருநூறு ரூபாயை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "ஐந்நூறு ரூபாயை" என்ற சொற்றொடரை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 218 ஆம், 219 ஆம், 220 ஆம், 221 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்.

105. முதன்மைச் சட்டவாக்கத்தின் 218 ஆம், 219 ஆம், 220 ஆம் 221 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :—

"காப்புறுதி இல்லாது, அல்லது மூன்றும் திறத்தவர் இடர் காப்புக்கான பிணைப் பொறுப்புச் சான்றிதழில்லாது அல்லது தோதுச் சான்றிதழில்லாது வாகனம் செலுத்துவதற்கான தண்டம்.

218. தொண்ணூற்றொன்பதாம் பிரிவின் ஏற்பாடுகளை அல்லது 196 (6) ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுதலாகிய தவறுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளெவரும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு, அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

பொய்யான தகவலைக் கொடுப்பதற்கான தண்டம்.

219. ஆளெவரும்—

(அ) பின்வருவனவற்றுக்கான ஏதேனும் விண்ணப்பத்தில் அல்லது விண்ணப்பம் தொடர்பில் அதாவது :—

(i) மோட்டார் வாகனமொன்றைப் பதிவு செய்வதற்கான ; அல்லது

(ii) சாரதி உரிமத்துக்கான அல்லது அத்தகைய சாரதி உரிமத்தின் செல்லுபடியாந்தன்மையை நீடிப்பதற்கான ; அல்லது

(iii) நடாத்துநரின் உரிமத்துக்கான அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியினால் தேவைப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் உரிமத்துக்கான அல்லது அதன் புதுப்பித்தல் எதற்குமான ; அல்லது

(iv) அத்தகைய உரிமம் எதனையும் மாற்றுவதற்கான அல்லது திருத்துவதற்கான,

ஏதேனும் விண்ணப்பத்தில் அல்லது விண்ணப்பம் தொடர்பில் ; அல்லது

(ஆ) மூன்றும் அல்லது நான்காம் பாகத்தின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தில் அல்லது அவ்விண்ணப்பம் தொடர்பில் ; அல்லது

(இ) இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் ஒழுங்கு விதியின் கீழ் சட்டமுறையாகக் கேட்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை அளிப்பதில்,

அவரது மனதறியப் பொய்யான, அல்லது முக்கியமான ஏதேனும் விடயத்தில் பிழைவழி உய்க்கின்றதான ஏதேனும் கூற்றை அளித்தால் அவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

இறைவரி உரிமங்களைப் போலியாக்குதல் முதலியவற்றுக்கான தண்டம்.

220. (1) பின்வருமாறு செய்கின்ற ஆளெவரும் அதாவது, ஏதேனும் அடையாளத் தகட்டை, பதிவுச் சான்றிதழை, தோதுச் சான்றிதழை, மோட்டார் வாகனத்திற்கான இறைவரி உரிமத்தை, சாரதி உரிமத்தை, 135 (4) ஆம் பிரிவின்கீழ் அல்லது IV ஆம் பாகத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை, நடாத்துநரின் உரிமத்தை அல்லது வேறேதேனும் சான்றிதழை, அல்லது உரிமத்தை அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாகக் கொள்ளப்படும் அத்தகைய அனுமதிப்பத்திரத்தின், சான்றிதழின், அல்லது உரிமத்தின் ஏதேனும் இணைப்பிரதியினை—

(அ) மோசடியாகப் பயன்படுத்துகின்ற அல்லது வேறெவரேனும் ஆள் அதனைப் பயன்படுத்துவதை அனுமதிக்கின்ற; அல்லது

(ஆ) போலிபுனைகின்ற, மாற்றுகின்ற, சிதைக்கின்ற, உருவழிக்கின்ற அல்லது அழிக்கின்ற,

ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(2) பின்வருமாறு செய்கின்ற ஆளெவரும், அதாவது :—

(அ) ஏதேனும் காப்புறுதிச் சான்றிதழை, அல்லது பிணைப்பொறுப்புச் சான்றிதழைப் பொய்யாகப் புனைகின்ற, அல்லது போலிபுனைகின்ற, அல்லது மாற்றுகின்ற அல்லது அது பொய்யாகப் புனையப்பட்டதென, அல்லது போலிபுனையப் பட்டதென, அல்லது மாற்றப்பட்டதென அறிந்துகொண்டு அதனைப் பயன்படுத்துகின்ற, அல்லது வேறெவரேனும் ஆளைக் கொண்டு பயன்படுத்துவிக்கின்ற அல்லது வேறெவரேனும் ஆள் பயன்படுத்துவதை அனுமதிக்கின்ற ; அல்லது

(ஆ) ஏதேனும் காப்புறுதிச் சான்றிதழை அல்லது பிணைப்பொறுப்புச் சான்றிதழை, மோசடியாகப் பயன்படுத்துகின்ற, அல்லது வேறெவரேனுமாளைக் கொண்டு பயன்படுத்துவிக்கின்ற அல்லது வேறெவரேனும் ஆள் பயன்படுத்துவதை அனுமதிக்கின்ற ; அல்லது

(இ) ஒரு காப்புறுதிச் சான்றிதழை அல்லது பிணைப் பொறுப்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக மனதறியப் பொய்க் கூற்றெதனையும் அளிக்கின்ற, அல்லது ஏதேனும் முக்கியமான தகவலை மறைக்கின்ற,

ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓராயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு, அல்லது ஓராண்டுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(3) ஏதேனும் ஒரு முக்கிய விபரத்தில் பொய்யானதெனத் தெரிந்துகொண்டே காப்புறுதிச் சான்றிதழொன்றினை அல்லது பிணைப்பொறுப்புச் சான்றிதழொன்றை வழங்குகின்ற ஆளெவரும், இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

III ஆம் பாகத்தினை மீறுவதற்கான தண்டம்.

221. ஆளெவரும்—

(அ) III ஆம் பாகத்தின் ஏற்பாடு எதனையும் மீறி ஏதேனும் மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்தலாகிய தவறுக்குக் குற்றவாளியானால்; அல்லது

(ஆ) அத்தகைய பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் அடங்கியுள்ள ஏதேனும் நிபந்தனையுடன் இணங்கியொழுகத் தவறுதல் என்ற தவறுக்குக் குற்றவாளியானால்,

அவர் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், இருநூற்றைம்பது ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்திற்கும், இரண்டாவது தடவை அல்லது பின்னடுத்த தடவை குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கோ, அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கோ, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்குமோ ஆளாதலும் வேண்டும்.".

106. முதன்மைச் சட்டவாக்கத்தின் 223 ஆம் பிரிவு "ஐந்நூறு ரூபா" என்ற சொல்லமைப்புக்குப் பதிலாக "ஆயிரம் ரூபா" என்ற சொல்லமைப்பை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — முதன்மைச் சட்டவாக்கத்தின் 223 ஆம் பிரிவைத் திருத்துதல்.

107. முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகிறது :— — முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"பொதுவான தண்டம்.

224. எந்தத் தவறுக்கு இச்சட்டத்தில் வேறெந்தத் தண்டனையும் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லையோ அந்த ஏதேனும் தவறுக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருநூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கும், இரண்டாவது தடவை அல்லது பின்னடுத்த தடவை குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் நானூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கும் அவர் ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 224 அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

108. இருநூற்றிருபத்துநான்காம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 224அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

'குறித்த சில தவறுகள் தொடர்பில் நீதிமன்றத்தினால் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

224 அ. (1) விதித்துரைக்கப்படக்கூடியதான, இச் சட்டத்தின்கீழான அத்தகைய ஏதேனும் தவறு தொடர்பில் ஏதேனும் நீதிவான் நீதிமன்றத்தில் எவரேனும் ஆளுக்கெதிராக வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டிருக்குமிடத்தும், அத்துடன், அத்தவறு புரியப்பட்டதன் விளைவாக, அல்லது அத்தவறு புரியப்பட்டதன் காரணமாக ஏதேனும் ஆதனத்துக்குச் சேதம் விளைக்கின்றதான அல்லது எவரேனும் ஆளுக்கு ஊறு ஏற்படுத்துகின்றதான விபத்து எதுவும் ஏற்படாதிருக்குமிடத்தும், நீதிமன்றமானது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணுனது எது எப்படியிருப்பினும், மேலே முதலாவதாகப் பெயர்குறிப்பிடப்பட்ட ஆளுக்கு அழைப்பாணையையும் அத்துடன் ஓர் அறிவித்தலையும் வழங்கி அவர் அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் பின்வருமாறு செய்தால் அந்த அழைப்பாணையில் குறித்துரைக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் தோன்றவேண்டிய அவசியம் இல்லை என்று அந்த ஆளுக்கு அறிவிக்கலாம், அதாவது :—

(அ) அந்த நீதிமன்றத்தின் பதிவாளருக்கு முகவரியிடப்பட்ட ஒரு கடிதமூலம் அந்தத் தவற்றைத் தாம் புரிந்ததாக ஒப்புக்கொண்டால் ;

(ஆ) அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகையைப் பதிவாளரிடம் செலுத்தினுல் ; அத்துடன்

(இ) நூற்றுமுப்பத்தாறும் பிரிவின்கீழான ஒரு புறக்குறிப்பை இடுவதை நீதிமன்றத்துக்கு இயலச் செய்வதற்கெனத் தமது சாரதி உரிமத்தைப் பதிவாளருக்கு அனுப்பினுல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆளுக்கு வழங்கப்படும் அறிவித்தலில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ்க் குறித்துரைக்கப்படவேண்டிய பணத்தொகையானது, அவ்வாளுக்கு வழங்கப்பட்ட அழைப்பாணையிற் குறிப்பீடு செய்யப்பட்ட தவறுக்கான குற்றப்பணமாக நீதிமன்றம் சட்டபூர்வமாக விதிக்கக்கூடிய பணத்தொகையை விஞ்சுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றமொன்றினுல் ஓர் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளவரான ஆளொருவர், அந்த அறிவித்தலிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுமிடத்து, அவ்வாளுக்கு வழங்கப்பட்ட அழைப்பாணையிற் குறித்துரைக்கப்பட்ட தவறு

தொடர்பில் அவ்வாள் குற்றவாளியாக உள்ளார் என்று கூறும் துணிபுரையொன்றை எழுதுதல் வேண்டும் என்பதுடன் அவ்வறிவித்தலுக்கிணங்க அவரால் செலுத்தப்பட்ட பணத்தொகைக்குச் சமமான ஒரு குற்றப் பணத்தைச் செலுத்த இலக்காகியுள்ளார் எனத் தண்டனைத் தீர்ப்பு எழுதுதலும் வேண்டும் என்பதுடன் அவரால் அத்தகைய குற்றப்பணம் செலுத்தப்பட்டதெனப் பதிதலும் வேண்டும்.

(4) இப்பிரிவில் " நீதிவான் நீதிமன்றம் " என்பது மாநகர நீதிவான் நீதிமன்றமொன்றையும் உள்ளடக்கும்.'.

109. முதன்மைச் சட்டவாக்கத்தின் 225 ஆம், 226 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 225 ஆம் 226 ஆம் பிரிவுகளை மாற்றீடு செய்தல்*

*" உரிமக் கட்டணத்தை அறவிடும்படி கட்டளையிடுவதற்கு நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.*

225. (1) இருபத்தைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை மீறி ஒரு மோட்டார் வாகனத்தை உடைமையில் வைத்திருத்தல் அல்லது பயன்படுத்தல் என்னும் தவறுக்காக எவரேனும் ஆளுக்கு, ஏதேனும் நீதிமன்றம் குற்றத்தீர்ப்பளிக்குமிடத்தும், அத்துடன் உரிமமளிக்கும் அதிகாரியினால் கையொப்பமிடப்பட்டதும், வருமதியாகவுள்ள கட்டணத் தொகையையும் மேலதிகத்தொகை ஏதேனுமிருப்பின், அதனையும் கூறுகின்றதுமான சான்றிதழொன்று முன்வைக்கப்படுமிடத்தும் நீதிமன்றமானது, அத்தவறுக்காக அது சுமத்தக்கூடிய வேறு ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, அத்தொகைக்குச் சமமான ஒரு பணத்தொகையை, அது நீதிமன்றத்தினால் சுமத்தப்பட்ட குற்றப்பணம் என்றுற்போன்று, அவ்வாளிடமிருந்து அறவிடும்படி கட்டளையிடல் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஏதேனும் பணத்தொகை, நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் சுமத்தக்கூடிய தொகையை விஞ்சுகின்றதாயிருப்பினும் எப்படியிருப்பினும் அவ்வாறே அறவிடப்படல் வேண்டும். அத்தகைய பணத்தொகை ஒவ்வொன்றும் நீதிமன்றத்தினால் அறவிடப்படும்போது, உரிமமளிக்கும் அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அது அத்தகைய உரிமமளிக்கும் அதிகாரியினால் அம்மோட்டார் வாகனத்திற்கான இறைவரி உரிமமொன்றின்மீது செலுத்தப்படற்பாலதான கட்டணம் என்றுற்போன்று அதே விதத்தில் இச்சட்டத்தின் கீழ் கையாளப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையினால் திருப்தியடையாதவரான ஆளெவரும் எந்தக் குற்றத்தீர்ப்பின் விளைவாக அக்கட்டளை ஆக்கப்பட்டதோ அந்தக் குற்றத்தீர்ப்புக்கெதிராக, அவர் மேன்முறையீடு செய்வாரெனின், அக்கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், அத்த

கைய மேன்முறையீட்டுக்கு 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் XXVIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) ஏதேனும் ஆண்டு தொடர்பில் அல்லது ஓர் ஆண்டின் பகுதி தொடர்பில் ஏதேனும் மோட்டார் வாகனத்துக்குத் தேவையான இறைவரி உரிமத்தின்மேல் கொடுக்கப்படற்பாலதான கட்டணத்திற்குச் சமமான பணத்தொகையும், அத்துடன் மேலதிக கட்டணம் எதுவும் இருப்பின், அம்மேலதிக கட்டணமும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை எதனையும் பின்பற்றி எவரேனும் ஆளிடமிருந்து அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அறவிடப்பட்டுள்ளவிடத்தும், அத்துடன் அந்த மோட்டார் வாகனம் பெருவழி ஒன்றில் பயன்படுத்தப்படுவதற்குத் தகுதியுள்ளதாக இருக்கின்றவிடத்தும், அத்துடன் மோட்டார் வாகனங்களுக்கு உரிமமளித்தல் பற்றிய இச்சட்டத்தின் வேறு தேவைப்பாடுகள் அனைத்தும் அம்மோட்டார் வாகனம் தொடர்பில் இணங்கியொழுகப்பட்டுள்ளவிடத்தும், உரிமமளிக்கும் அதிகாரி, அத்தகைய உரிமத்திற்கான விண்ணப்பம் III ஆம் பாகத்தின்கீழ் முறையாகச் செய்யப்பட்டு, அத்தகைய உரிமத்திற்குச் செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகையுடன் சேர்த்து அனுப்பப்பட்டது என்றாற் போன்று, அத்தகைய வாகனத்திற்கு அந்த ஆண்டு தொடர்பில் அல்லது ஓர் ஆண்டின் பாகம் தொடர்பில் இறைவரி உரிமம் ஒன்றினை வழங்குதல் வேண்டும்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக வாகனங்கள், பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் ஆதனமாகக் கருதப்படுதல்.*

226. ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, மோட்டார் வாகனம் ஒன்று, அப்போதைக்கு அவ்வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரராகவுள்ள ஆளின் ஆதனமாகக் கருதப்படுதல் வேண்டும்.".

110. முதன்மைச் சட்டவாக்கத்தின் 227 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 227 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்.

" கட்டணங்கள். 227. (1) இச்சட்டத்தில் ஏதேனும் விடயத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணம் பற்றிக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய குறிப்பீடானது, விடயத்துக்குத் தோதானவாறு, ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய கட்டணங்கள் பற்றிச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் இச்சட்டத்தினால் அல்லது அரசிறை சேகரிப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதியினால் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய ஒவ்வொரு கட்டணமும்—

(அ) (i) எந்த ஆளினால் கட்டணம் செலுத்தப்படற்பாலதாகவுள்ளதோ அந்த ஆளினால் கட்டணமானது அரசிறை முத்திரைமூலம் செலுத்தப்படலாம் என்பதுடன் அம் முத்திரையானது ஆணையாளரினால் அல்லது ஆணையாளரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் பெறுமதியற்றதாக்கப்படுதல் வேண்டும், அல்லது கட்டணமானது காசோலை, காசுக்கட்டளை அல்லது அஞ்சற்கட்டளை மூலம் செலுத்தப்படலாம்; அல்லது

(ii) கட்டணமானது வாகன அனுமதிச்சீட்டுக்கானதாக இருப்பின், முற்போந்த (i) ஆம் உட்பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறு செலுத்தப்படலாம், அல்லது பணமாக அல்லது, காசோலை, காசுக் கட்டளை அல்லது அஞ்சற் கட்டளை மூலமாகச் செலுத்தப்படலாம்; அத்துடன்

(ஆ) திரட்டு நிதியத்தில் வரவுவைக்கப்படுதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், பின்வருவன தொடர்பாக கட்டணம் எதுவும் செலுத்தப்படற்குரியதாதல் ஆகாது—

(i) இலங்கைக் குடியரசின் அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது இலங்கைக் குடியரசின் அரசாங்க சேவைக்கெனப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் மோட்டார் வாகனத்திற்கான பதிவிற்கு அல்லது கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சர் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கும் அத்தகைய வேறு வெளி

நாட்டு அரசுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்களின் பதிவிற்கு, அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கப் பிரதிநிதிக்கு (அவர் எவ்வகையான பெயரினால், பெயர்மகுடத்தினால் அல்லது பதவியினால் அழைக்கப்படினுஞ்சரி) சொந்தமான மோட்டார் வாகனங்களின் பதிவிற்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு அரசிற்கு அல்லது அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தின் இலங்கையிலுள்ள வியாபார ஆணையாளருக்கு அல்லது காவற்றூது அலுவலருக்கு அல்லது அத்தகைய பிரதிநிதி, ஆணையாளர் அல்லது காவற்றூது அலுவலர் எவரினதும் பணியாட்டொகுதியிலுள்ள ஆட்களுக்குச் சொந்தமான மோட்டார் வாகனப் பதிவிற்கு ; அல்லது

(ii) இலங்கை இராணுவத்தின் உறுப்பினர் எவருக்கும், இலங்கையுள், இராணுவக் கடமைபுரிவதற்கென, இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் எந்த வகையினதான அல்லது விவரணத்தினதான மோட்டார் வாகனத்தையும் செலுத்துவதற்கு அதிகாரமளிக்கும் நோக்கத்திற்காக, அத்தகைய உறுப்பினருக்குச் சாரதி உரிமமொன்றினை வழங்குவதற்கு, அல்லது அத்தகைய உறுப்பினரது சாரதி உரிமமொன்றினை வழங்குவதற்கு, அல்லது அத்தகைய உறுப்பினரது சாரதி உரிமத்தின் செல்லுபடியை நீடிப்பதற்கு ; அல்லது

(iii) இலங்கையிலுள்ள ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கப் பிரதிநிதியின் (அவர் எவ்வகையான பெயரினால், பெயர் மகுடத்தினால், அல்லது பதவியினால் அழைக்கப்படினுஞ்சரி) அல்லது இக்காப்புவாசகத்தின் (i) ஆம் பந்தியின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம், குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிநாட்டு அரசின் அல்லது ஏதேனும் அரசாங்கத்தின் இலங்கையிலுள்ள வியாபார ஆணையாளரின் அல்லது அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தின் இலங்கையிலுள்ள காவற்றூது அலுவலரின் அல்லது அத்த

கைய ஏதேனும் பிரதிநிதியின் அல்லது ஆணையாளரின் அல்லது காவற்றுறை அலுவலரின் பணியாட்டொகுதியி லுள்ள ஆட்களின் சாரதி உரிமத்தை வழங்குவதற்கு, அல்லது அவர்களின் சாரதி உரிமத்தின் செல்லுபடியை நீடிப்பதற்கு,

கட்டணம் எதுவும் செலுத்தப்படுதலாகாது.

(2) மோட்டார்க் கோச்சு, மோட்டார் முச்சக்கர வான், அல்லது லொறியினைப் பரிசோதனை செய்வதற் குச் செலுத்தப்படும் கட்டணத்தை ஒதுக்கீடுசெய் வதற்கு, ஆணையாளர் 195 ஆம், 196 ஆம் பிரிவுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனையாளருக்கு அதி காரமளிக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் மோட்டார் வாகனம் ஒன் றைப் பதிவு செய்வதற்காக அல்லது அனுமதிச்சீட் டொன்றைப் பெறுவதற்காக, விண்ணப்பதாரரொருவர் அத்தகைய பதிவிற்கு அல்லது அனுமதிச்சீட்டிற்குப் பணம் செலுத்தும்போதும், இச்சட்டத்தின் தேவைப் பாடுகளுக்கு அவர் இயைந்தொழுகத் தவறியமை தவிர்ந்த வேறேதேனும் காரணத்துக்காக அம்மோட் டார் வாகனம் பதிவு செய்யப்படாதபொழுதும் அல்லது அனுமதிச்சீட்டு வழங்கப்படாதபொழுதும், அவ்வாறு செலுத்தப்பட்ட கட்டணத்தை ஆணையாளரிடமிருந்து மீளப்பெறுவதற்கு விண்ணப்பதாரர் உரித்துடைய வராதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் மோட்டார் வாகனமொன் றைப் பதிவுசெய்வதற்கான அல்லது ஓர் அனுமதிச்சீட் டைப் பெறுவதற்கான விண்ணப்பதாரர், அத்தகைய பதிவிற்கான, அல்லது அனுமதிப்பத்திரத்தைப் பெறு வதற்கான கட்டணமாக, அக்கட்டணத்திலும் பார்க்க மேலதிகமான ஒரு தொகையைச் செலுத்தியிருப்பின், அத்தகைய மேலதிக தொகையை ஆணையாளரிட மிருந்து பெறுவதற்கு விண்ணப்பதாரர் உரித்துடைய வராதல் வேண்டும்.".

**111.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 229 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத் தின் 229 ஆம் பிரிவை நீக்குதல்.

**112.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 232 ஆம் பிரிவானது, அப்பிரிவில் " தலைமைக்காரர் " என்ற சொல் இடம்பெறும் இடங்களிலெல்லாம் " கிராம சேவை உத்தியோகத்தர் " என்ற சொற்களைப் பதிலீடுசெய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத் தின் 232 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 232அ என்ற புதிய பிரிவை உட்புகுத்துதல்.

113. இருநூற்று முப்பத்திரண்டாம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 232 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" தமது பெயர், முகவரி ஆகியன பற்றித் தகவல்கள் கொடுப்பதற்குச் சாரதிக்குள்ள கடமை.

232 அ. எவரேனும் பொலிசு அலுவலர், அல்லது கிராம சேவை உத்தியோகத்தர் மோட்டார் வாகனம் ஒன்றைச் செலுத்துதல் தொடர்பில் தவறொன்று புரியப் பட்டுள்ளதாகச் சந்தேகப்படுவதற்குக் காரணமிருக்குமிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர் அல்லது கிராம சேவை உத்தியோகத்தர் அம்மோட்டார் வாகனத்தின் சாரதியை அவரது பெயரையும் முகவரியையும் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாமென்பதுடன், அத்தகைய சாரதி அவ்வாறு செய்யத் தவறினால் அல்லது மறுத்தால் அல்லது பொய்யான பெயரை அல்லது முகவரியைக் கொடுத்தால், அவர், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 236 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

114. முதன்மைச் சட்டவாக்கத்தின் 236 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

" பரிசோதனைச் சான்றிதழ் சான்றாக ஏற்றுக்கொள்ளத் தக்கதாதல்.

236. இச்சட்டத்தின்கீழான நடவடிக்கைகள் எவற்றிலும் ஒரு மோட்டார் வாகனம் தொடர்பாக இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு அல்லது ஏதேனும் ஒழுங்கு விதி இணங்கியொழுகப்படுகிறதா, அல்லவா என்பது பற்றி அல்லது ஏதேனும் சக்கர எடைப் பொறி, எடைப்பொறிப்பாலம் அல்லது மோட்டார் வாகனங்களின் எடையைப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் வேறு இயந்திரம் செம்மையானதா அல்லவா என்பது பற்றி ஏதேனும் கேள்வி எழுமிடத்து, விடயத்துக்கேற்ப, அவ்வாகனத்தை அல்லது சக்கர எடைப் பொறியை அல்லது எடைப்பொறிப் பாலத்தை அல்லது மோட்டார் வாகனங்களை எடை பார்ப்பதற்கான வேறு இயந்திரத்தை அவர் பரீட்சித்துள்ளார் என்ற பொருள்படவுள்ளதும், அத்துடன் அவரது பரிசோதனையின் பெறுபேற்றைக் கூறுவதுமான எவரேனும் பரிசோதனையாளரின், அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அல்லது விதித்துரைக்கப்பட்ட வேறு ஆளின் சான்றிதழ், சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், கேள்விக்குட்பட்டுள்ள கருமம் தொடர்பாக அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நிகழ்வு பற்றி அல்லது கருத்துப் பற்றிப் போதிய முதற்றோற்றச் சான்றுதலும் வேண்டும்; அத்துடன் முரணான சான்று அளிக்கப்பட்டு, அது நீதிமன்றத்துக்கு நம்பத்தக்கதாகக் காணப்பட்டாலன்றி அல்லது ஏதேனும் காரணத்திற்காக, அத்தகைய குறுக்கு விசாரணை நீதி நலன்களுக்கு அவசியமானதென நீதிமன்றம் கருதினாலன்றி, சான்றிதழ்மீது குறுக்குவிசா

ரணை செய்யப்படுவதற்காகப் பரிசோதனையாளர், அலு வலர் அல்லது வேறு ஆள் அழைக்கப்படுதலை நீதிமன் றம் அனுமதித்தலாகாது.".

115. முதன்மைச் சட்டவாக்கத்தின் 237 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 237 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண் டும் என்பதுடன், அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியன்று அல் லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்த கைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(3) ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வசதிப்படக்கூடிய விரைவில் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப் படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி, எதுவும் அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனல் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற் கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி எதுவும் அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதா கக் கருதப்படும் தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண் டும்.".

116. முதன்மைச் சட்டவாக்கத்தின் 238 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 238 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"இலங்கை அரசாங்கத்தின் மோட்டார் வாகனங்களுக்கும் ஆட்களுக்கும் சட்டம் ஏற்புடையதாதல்.

238. (1) இச்சட்டத்தில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, இச்சட்டத்தின் ஏற்பாடு கள், இலங்கை அரசாங்கத்தின் சேவையிலுள்ள ஆட் கள் தொடர்பிலும் மோட்டார் வாகனங்கள் தொடர் பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், 2 ஆம், 21 ஆம், 25 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் சனதிபதியினால், அல்லது முதலமைச்சரினால் சாதாரணமாகப் பயன்படுத்தப் படும் ஏதேனும் மோட்டார் வாகனம் தொடர்பில் ஏற் புடையனவாதல் ஆகாது :

அத்துடன் மேலும், பாதுகாப்பு என்னும் விடயத் துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட் டுடன், இச்சட்டத்தில் அல்லது அதன் கீழ் ஆக்கப் பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் எல்லா ஏற்பாடு

களிலுமிருந்து அல்லது ஏதேனும் குறித்துரைக்கப் பட்ட ஏற்பாட்டிலிருந்து, பின்வருபவர்களுக்கு அல் லது பின்வருவனவற்றிற்கு விலக்களிக்கும் வண்ணம் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்—

(அ) இலங்கைக் குடியரசின் படைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அல்லது எவரேனும் குறித் துரைக்கப்பட்ட வகுப்பினரான அல்லது விவ ரணத்தினரான உறுப்பினர்கள்,

(ஆ) இலங்கைக் குடியரசின் படைகளுக்குச் சொந் தமான அல்லது இலங்கைக் குடியரசின் படை களின் நோக்கங்களுக்குப் புற நீங்கலாகப் பயன்படும் மோட்டார் வாகனங்கள், அல்லது எவையேனும் குறித்துரைக்கப்பட்ட வகுப் பினவான அல்லது விவரணத்தினவான மோட் டார் வாகனங்கள்.

(2) படைகளில் எவையேனும் சேவைப் பயிற்சி முறைகளை எளிதாக்கும் நோக்கத்திற்காக, பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச் சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரானவர் கட்டளை மூலம்—

(அ) குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நாளன்று அல்லது நாட்களன்று அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாளின் அல்லது நாட் களின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நேரத்தின்போது குறித்துரைக்கப்பட்ட ஏதே னும் பெருவழி அல்லது பெருவழிகள், அல் லது அத்தகைய ஏதேனும் பெருவழியின் பகுதி வாகனுதிகளுக்கு மூடப்பட்டிருத்தல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய பயிற்சி முறைகளில் பங்குபற்றும் இலங்கைக் குடியரசுப் படைகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு அல்லது அத்தகைய பயிற்சி முறைகளின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங் களுக்கு அல்லது அம்மோட்டார் வாகனங் கள் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது இச்சட்டத்தின் குறித்துரைக்கப் பட்ட ஏற்பாடுகள் எவையும் ஏற்புடையனவா தலாகாவென வெளிப்படுத்தலாம்.

(3) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் நோக் கங்களுக்காக "படைகளின் சேவைப் பயிற்சி முறை கள்" என்ற சொற்றொடர் இலங்கைக் குடியரசுப் படை களின் உடற்பயிற்சிகள், படையணி வகுப்புகள், பயிற்சி அல்லது நடமாட்டம் எதனையும் உள்ளடக்கும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 240 ஆம் பிரிவைத் திருத்துதல்.

117. முதன்மைச் சட்டவாக்கத்தின் 240 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "இலங்கைப் போக்குவரத்துச் சபை" என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும் ;

(2) "சாரதி" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

'"சாரதி" என்பது, ஒரு மோட்டார் வாகனத்தினை இயக்கும் நோக்கத்திற்காக அப்போதைக்கு அம்மோட்டார் வாகனத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் எனப் பொருளாகும் ;';

(3) "தலைமைக்காரன்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

'"கிராம சேவை உத்தியோகத்தர்" என்பது, பொலிசுக் கடமைகளைப் புரிவதற்காக அரசாங்க அதிபரால் அல்லது உதவி அரசாங்க அதிபரால் அதிகாரமளிக்கப்பட்டவரும், தமது அதிகாரமளிக்கப்பட்ட சீருடையை அல்லது பட்டியை அணிந்திருப்பவருமான கிராம சேவை உத்தியோகத்தர் ஒருவர் எனப் பொருளாகும் ;

"கை உழவியந்திரம்" என்பது, (சாரதி உட்பட) ஆறு பேருக்கு மேற்படாத ஆட்களையும் பொருட்களையும் ஏற்றிச் செல்வதற்கென இசைவாக்கப்பட்ட ஒரு தொடரூர்தி பொருத்தப்பட்டதும் இரு சில்லுகளையுடையதுமான ஓர் உழவியந்திரம் எனப் பொருளாகும் ;';

(4) "வாடகைக்காரர்" என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும் ;

(5) "பிணியாளர் வண்டி" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

'"பிணியாளர் வண்டி" என்பது, ஏதேனும் உடற்குறைபாட்டினால் அல்லது இயலாமையினால் அல்லலுறும் ஆட்கள் பயன்படுத்துவதற்கெனச் சிறப்பாக வடிவமைத்துக் கட்டுமானப்படுத்தப்பட்டதும், அல்லது இசைவாக்கப்பட்டதும், அத்தகைய ஆட்களினால் மாத்திரம் பயன்படுத்தப்படுவதற்கெனக் கருதப்பட்டதுமான ஒரு மோட்டார் வாகனம் எனப் பொருளாகும் ;';

(6) "கம வாகனம்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

'"கமவாகனம்" என்பது, மட்டப்படுத்தல், பொடிசிதறல், மண் அகற்றுதல், காடுவளர்ப்பு அல்லது இதையொத்த ஏதேனும் தொழிற்பாடு போன்ற கமத்தொழில் அல்லது அமைப்பு நோக்கத் தொடர்பில் காணிமீது பயன்படுத்தப்படுவதற்கென முன்னப்பட்ட (தொடரூர்தி உட்பட்ட) பொறிமுறையால் உந்தப்படும் ஏதேனும் வாகனம் என்று பொருளாகும் ; ஆனால் வீதி உருளை ஒன்றை உள்ளடக்காது ;';

(7) "உள்ளூரதிகாரசபை", "லொறி" என்னும் வரைவிலக்கணங்களுக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும் :—

' "உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, அல்லது கிராமசபை எனப் பொருளாவதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும், நிறைவேற்றப் படும் பணிகளையும், புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவைபோன்ற தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும், பணிகளை நிறைவேற்றுவதற்கெனவும், கடமைகளைப் புரிவதற்கெனவும், ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"லொறி" என்பது, பண்டங்களைக் காவுவதற்காக முழுமையாக அல்லது பிரதானமாகக் கட்டுமானப்படுத்தப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட ஒரு மோட்டார் வாகனம் எனப் பொருளாகும் என்பதுடன், அவ்வாறு கட்டுமானப் படுத்தப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட ஒரு நொடர்தியையும் உழவு இயந்திரத்தையும் உள்ளடக்கும் ; ஆனால் கம வாகனமொன்றை அல்லது மோட்டார் முச்சக்கர வானென்றை உள்ளடக்காது ;'

(8) "லொறி" என்பதன் வரைவிலக்கணத்தை நேரடியாக உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :—

' "உந்துவிசை மோட்டார் வண்டி" என்பது, ஐம்பது சென்றி மீற்றருக்கு மேற்படாத கனவளவு கொண்ட வாகனம் தொடுக்கப்பட்டதும், அதனை உந்துவதற்குக் கால்மிதிகள் பொருத்தப்பட்டதுமான உள்ளக தீப்பிடிக்கும் எஞ்சினைக் கொண்ட வாகனம் எனப் பொருளாகும் ;' ;

(9) "மோட்டார் வண்டி" என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும் ;

(10) "மோட்டார் கார்", "மோட்டார் கோச்சு", "மோட்டார் சைக்கிள்" என்பனவற்றின் வரைவிலக்கணங்களுக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன்மூலமும் :—

' "மோட்டார் கார்" என்பது, ஒரு மோட்டார் சைக்கிளாக, மோட்டார் முச்சக்கர வண்டியாக, மோட்டார் நோயாளர் வண்டியாக, மோட்டார் பிரேத வண்டியாக, அல்லது பிணியாளர் வண்டியாக இல்லாததும் (சாரதி உட்பட) ஒன்பது பேர்களுக்கு மேற்படாத ஆட்களையும் அவர்களின் உடைமைப் பொருள்களையும், ஏற்றிச் செல்வதற்குக் கட்டுமானப்படுத்தப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட (சாரதி உட்பட) ஒன்பது ஆட்களுக்கு மேல் ஏற்றிச் செல்வதற்கு இசைவாக்கப்பட முடியாதென ஆணையாளர் திருப்திப்படுவதுமான ஒரு

மோட்டார் வாகனம் எனப் பொருளாகும். அத்துடன் அவ்வாறு கட்டுமானப்படுத்தப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட தொடரூர்தியையும் உள்ளடக்கும் ;

"மோட்டார் கோச்சு" என்பது, மோட்டார் நோயாளர் வண்டியாக, அல்லது மோட்டார் பிரேத வண்டியாக இல்லாததும், (சாரதி உட்பட) ஒன்பது பேர்களுக்கு மேற்பட்ட ஆட்களையும் அவர்களது உடைமைப் பொருள்களையும் ஏற்றிச் செல்வதற்கென அவ்வாறு கட்டுமானப்படுத்தப்பட்டதும், அல்லது இசைவாக்கப்பட்டதுமான ஒரு மோட்டார் வாகனம் எனப் பொருளாகும்; அத்துடன் அவ்வாறு கட்டுமானப்படுத்தப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட தொடரூர்தியையும் உள்ளடக்கும் ;

"மோட்டார் சைக்கிள்" என்பது, உந்துவிசை மோட்டார் முச்சக்கர வண்டி அல்லது மோட்டார் முச்சக்கர வான் அல்லாததும், மூன்றுக்கு மேற்படாத சில்லுகளில் ஊர்வதற்கென வடிவமைக்கப்பட்டதும் அதனோடு இணைக்கப்பட்ட ஏதேனும் பக்கக் காரின் வெறும் பாரத்துடன் சேர்த்து இருநூற்றைம்பது கிலோ கிராம்களுக்கு மேற்படாத வெறும் பாரத்தைக் கொண்டுள்ளதுமான ஒரு மோட்டார் வாகனம் எனப் பொருளாகும் ;' ;

(11) "மோட்டார் வாகனுநிகள் மதியுரைப் பேரவை" என்பதன் வரைவிலக்கணத்தை நேரடியாக உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை இடுவதன்மூலமும் :—

'"மோட்டார் முச்சக்கர வண்டி" என்பது, மூன்று சக்கரங்களில் பிரயாணம் செய்வதற்கென வடிவம் அமைக்கப்பட்டதும் நானூறு கிலோ கிராம்களுக்கு மேற்படாத ஒரு வெறும் பாரத்தைக் கொண்டதும் ஆட்களை ஏற்றிச் செல்வதற்கென முழுமையாக அல்லது பிரதானமாக இசைவாக்கப்பட்டதுமான ஒரு மோட்டார் வாகனம் எனப் பொருளாகும் ;

"மோட்டார் முச்சக்கர வான்" என்பது, மூன்று சில்லுகளில் ஊருவதற்கென வடிவமைக்கப்பட்டதும், நானூறு கிலோ கிராம்களுக்கு மேற்படாத ஒரு வெறும் பாரத்தைக் கொண்டதும், பண்டங்களை ஏற்றிச் செல்வதற்கென முழுமையாக அல்லது பிரதானமாக இசைவாக்கப்பட்டதுமான ஒரு மோட்டார் வாகனம் எனப் பொருளாகும் ;' ;

(12) "மோட்டார் வாகனம்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் :—

'"மோட்டார் வாகனம்" என்பது,—

(அ) தெருக்களில் பயன்படுத்துவதற்கென மூன்னப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட ஒரு உழவு எந்திரம் அல்லது தொடரூர்தியினை உள்ளடக்கும், பொறிமுறையில்

இயக்கப்படுகின்ற ஏதேனுமொரு வாகனம் என்று பொருள்படும்; ஆனால் ஒரு வீதி உருளையை அல்லது உந்துவிசை மோட்டார் வண்டியை உள்ளடக்காது;

(ஆ) மட்டுப்படுத்தல், பொடிசிதறல், மண்ணகற்றல், காடு வளர்ப்பு அல்லது ஏதேனும் அதையொத்த தொழிற்பாடு போன்ற கமத்தொழில் அல்லது அமைப்பு நோக்கந் தொடர்பில் காணிமீது பயன்படுத்துவதற்கென முன்னப்பட்ட, பொறிமுறையில் இயக்கப்படுகின்ற ஏதேனுமொரு வாகனம் என்று பொருள்படும். ஆனால் வீதி உருளை அல்லது உந்துவிசை மோட்டார் வண்டியை உள்ளடக்காது;';

(13) "பயணி" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் :—

'"பயணி" என்பது, வசுவண்டியொன்றில் ஏற்றிச் செல்லப்படும் ஆளொருவர் என்று பொருள்படும். ஆனால் சாரதியை அல்லது நடாத்துநரை உள்ளடக்காது;';

(14) "தனிப்பட்ட கார்" என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும்;

(15) "பொது நிறுத்திடம்" என்பதன் வரைவிலக்கணத்திற்கு பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

'"பொது நிறுத்திடம்" என்பது, இச்சட்டத்தின் கீழ் தனியாக அமைந்திருக்கும் வசு வண்டிகள் அல்லது லொறிகள் அல்லது ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட வகுப்பினவான அல்லது விவரணத்தினவான வசு வண்டிகள் அல்லது லொறிகள் வாடகைக்கு, நிறுத்தப்படக்கூடிய அல்லது நிற்கக்கூடிய ஓர் இடம் எனப் பொருள்படும்;';

(16) "பதிவாளர்" என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும்;

(17) "வாகனநெறிகள்", "வாகனச் சைகைகள்" என்பனவற்றின் வரைவிலக்கணங்களுக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலமும் :—

'"வாகனநெறிகள்" என்பது, துவிச்சக்கர வண்டிகளையும், முச்சக்கர வண்டிகளையும், மோட்டார் வாகனங்களையும், ஒவ்வொரு விவரணத்தினவுமானவையான வாகனங்களையும், பாதசாரிகளையும், ஊர்வலங்களையும், படைவகுப்பினரையும் ஏற்றிச்செல்லும், ஓட்டப்படும் அல்லது வழிநடத்தப்படும் எல்லா விலங்குகளையும் உள்ளடக்கும்;

"வாகனச் சைகைகள்" என்பது, மின்னியக்கமூலம், பொறிமுறைச் சக்திமூலம், அல்லது வேறுவிதமாக இயக்கப்படும் எல்லாச் சைகைகளையும், சைகைத் தூண்களையும், வழிகாட்டித்தூண்களையும், பெருவழியைப் பயன்படுத்தும் ஆட்களுக்கு வழிகாட்டுவதற்காக அல்லது அவர்களை நெறிப்படுத்துவதற்காகப் பெருவழியில் கட்டியமைக்கப்பட்டுள்ள, அல்லது ஏற்பாடுசெய்யப்பட்

டுள்ள, சைகைகளையும், குறியீடுகளையும், அல்லது உபா யங்களையும் உள்ளடக்கும்;';

(18) "வாகனச் சைகைகள்" என்ற வரைவிலக்கணத்தை நேரடியாக உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்து வதன் மூலமும் :—

'"வாகனநெறிகள் நெறியாளர்" என்பது, பொலிசுக் கண்காணிப் பாளரினால் அல்லது ஒரு மாவட்டத்துக்கான உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளரினால் வாகனநெறிகளைக் கட் டுப்படுத்தும் நோக்கத்திற்காக எழுத்தில் நியமிக்கப் பட்டவரும், பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதி யினால் அங்கீகரிக்கப்பட்ட உடையொன்றை அணிபவரு மான ஆள் ஒருவர் எனப் பொருளாகும்;';

(19) "நியாயசபை", "திராலி வாகனம்" என்பனவற்றின் வரைவிலக் கணங்களை விட்டுவிடுவதன் மூலமும்; அத்துடன்

(20) "கம்பியில்லாத் தந்தித் தொடர்புச்சாதனம்" என்பதன் வரை விலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலம்.

118. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் நீக்கப் பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணைகள் இடப்படுகின்றன :— முதன்மைச் சட்டவாக் கத்திற்கான அட்டவணையை மாற்றீடு செய்தல்.

"முதலாவது அட்டவணை

(பிரிவு 133அ)

| I<br>தவறுகள் | II<br>பிரதிகூலப்புள்ளிகள் |
|---|---|
| 1. பொறுப்பினளவு உயர்ந்ததாக இருக்கும்படியாக மடத்துணிவான கவலையீனமான செயல்மூலம் இறப்பை விளைவித்தல் .. | 40 புள்ளிகள் |
| 2. பொறுப்பினளவு குறைவாக இருக்கும்படியாக மடத்துணிவான கவலையீனமான செயல்மூலம் இறப்பினை விளைவித்தல் .. | 30 புள்ளிகள் |
| 3. பொறுப்பினளவு உயர்ந்ததாக இருக்கும்படியாக ஊறு விளை வித்தல் .. .. .. | 30 புள்ளிகள் |
| 4. பொறுப்பினளவு குறைவாக இருக்கும்படியாக ஊறு விளைவித்தல் | 25 புள்ளிகள் |
| 5. விபத்தொன்றினை அறிவிக்கத் தவறுதல் .. .. | 25 புள்ளிகள் |
| 6. பொலிசு அலுவலரொருவரினால் அல்லது வாகனநெறிகள் நெறியாள ரொருவரினால் கொடுக்கப்பட்ட சைகைகளுக்குக் கீழ்ப்படியத் தவறுதல் .. .. .. | 15 புள்ளிகள் |
| 7. போக்குவரத்து ஒளிச் சைகைகளுக்குக் கீழ்ப்படியத் தவறுதல் .. | 15 புள்ளிகள் |
| 8. பொறிமுறைக் குறைபாடுள்ள வாகனமொன்றைப் பயன்படுத்து தல் .. .. .. .. | 15 புள்ளிகள் |
| 9. வீதி விதிகளுக்குக் கீழ்ப்படியத் தவறுதல்—பிரிவு 148 .. | 15 புள்ளிகள் |
| 10. விபத்தொன்றைத் தவிர்க்கத் தவறுதலும் கவலையீனமாக வாகனங்களைச் செலுத்துதலும்—பிரிவு 149 உம் 151 உம் .. | 20 புள்ளிகள் |
| 11. மேலே விபரிக்கப்பட்டவை தவிர்ந்த மோட்டார் வாகனமொன் றைச் செலுத்துவதனுள் விளையும் மற்றெல்லாக் குற்றத் தீர்ப்புக்களும் .. .. .. | 10 புள்ளிகள் |

## இரண்டாம் அட்டவணை

| I<br>சட்டத்தின் பிரிவு | II<br>ஏற்பாடுகள் | III<br>குற்றப்பணத் தொகை<br>ரூபா |
|---|---|---|
| 21 | அடையாளங் காணற்றகடுகள் .. .. | 25 |
| 22 | அடையாளங் காணற்றகட்டின் வடிவம் .. .. | 25 |
| 38 | அரசிறை உரிமம் மோட்டார் வாகனங்களில் கொண்டு செல்லப்படுதலும் தேவைப்படும்போது காண்பிக்கப்படுதலும் .. | 25 |
| 45 | அரசிறை உரிமத்தை மீறிப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனத்தின் மீதான மட்டுப்பாடுகள் .. .. | 15 |
| 123 (1) (அ) | சாரதி உரிமமில்லாமற் செலுத்துவதற்குள்ள தடை .. | 50 |
| 123 (1) (ஆ) | சாரதி உரிமமின்றி ஆளொருவரை வேலைக்கு அமர்த்துதல் .. | 50 |
| 123 (2) | 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட வயதினரான சாரதி .. | 50 |
| 140 | வேகமாகச் செலுத்தல் .. .. | 50 |
| 148 | வீதி விதிகள் .. .. .. | 25 |
| 152 | மோட்டார் வாகனங்களைச் செலுத்தும்போது சாரதி இருக்கும் விதம் .. .. .. | 25 |
| 153 | செலுத்தும்போது சாரதிகளினால் காட்டப்படும் சைகைகள் .. | 25 |
| 154 | மோட்டார் வாகனங்களைத் திருப்புதல் .. .. | 20 |
| 155 | ஒலி அல்லது ஒளி எச்சரிக்கைகள் .. .. | 25 |
| 156 | மோட்டார் வாகனங்களின் மிதிபலகைகளிலும் அவைபோன்ற வற்றிலும் செல்லுதல் அல்லது செல்ல அனுமதித்தல் | 25 |
| 157 | மோட்டார் கார்களின் முன்னிருக்கைகளிலுள்ள ஆட்களின் எண்ணிக்கை .. .. | 25 |
| 158 (2) | பாதுகாப்புத் தலைமூடி அணியத் தவறுதல் .. | 25 |
| 159 | விளம்பரங்களை விநியோகித்தல் .. .. | 25 |
| 162 | பொலிசு அலுவலரின் போக்குவரத்துப்பணிப்புரைகளும் சைகைகளும் .. .. | 50 |
| 165 | தாங்கிக்குள் பெற்றோல் ஊற்றப்படும்போது கடைப்பிடிக்கப் படவேண்டிய முன்னேற்பாடுகள் .. .. | 20 |
| 166 | பெருவழியில் மோட்டார் வாகனங்களை நிறுத்துதல் அல்லது நிற்பாட்டிவைத்தல் .. .. | 50 |
| 167 | மோட்டார் வாகனம் பெருவழியொன்றில் நிறுத்தப்படும் போது அல்லது கவனிக்காமல் விடப்படும்போது அல்லது செயலிழந்தபோது கடைப்பிடிக்கப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் .. .. | 50 |
| 178 | மிகையாகப் பயணிகளை ஏற்றிச்செல்லுதல் .. | 50 |
| 189 | லொறியொன்றில் ஏற்றிச்செல்லப்படக்கூடிய ஆட்கள் .. | 50 |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்
ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் இசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன்
வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல.
கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.